# சொன்னால் புரியுமா?

## ரமணிசந்திரன்



# சொன்னால் புரியுமா?

ரமணிசந்திரன்


அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

# நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| நூலின் பெயர் | : சொன்னால் புரியுமா? |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : ஜூன், 2014 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| எழுத்து | : 12 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 188 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.80.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர், சென்னை-18. |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |



# சொன்னால் புரியுமா?

# சொன்னால் புரியுமா?

---

# 1



**சா**ரூபாவின் மனம் கிளர்ச்சியுற்றிருந்தது. திட்டமிட்டது போலப் படத்தை முடித்து விட்டது மட்டுமின்றி, படமும் அவளது எண்ணத்தை நன்கு பிரதிபலித்தது.

படத்தைப் பார்க்கும்போதே, கிராமத்துப் பாதையோரத்துச் செடி, கொடிகளின் மீது மோதிச் செல்லும் காற்றைக்கூட உணர முடியும்போல, ஒரு சுகமான உணர்வு தோன்றியது.

அதுதானே, படத்தை வரைகிறவரின் வெற்றி! பார்க்கிறவர்களின் மனதில், அந்த இடத்திலேயே இருப்பது போன்ற உணர்வைக் கொண்டு வருவது!

சட்டென அவளது உள்ளத்தைச் சந்தேகம் பிடித்து ஆட்டியது.

அதையே நினைத்து வரைந்ததால், அவளுக்குத்தான் அப்படித் தோன்றுகிறதோ?

இதை எப்படி அறிவது? இந்த நேரத்தில் அவளுடைய தாயார் காவேரி இருந்திருந்தால், கூப்பிட்டுக் காட்டலாம். பார்த்து உண்மையான அபிப்பிராயத்தை, மகள் மனம் நோகாதபடி, அழகாக எடுத்துச் சொல்லுவாள்.

முழு மட்டம் என்றாலும் ''இன்னொரு முயற்சி செய்தால், இதை விடப் பிரமாதமாக வரும் என்று, ரொம்பவும் தோன்றுகிறதே!'' என்று புன்னகையுடன் கூறுவாள்.

உடனே முயற்சி செய்யும் உந்துதலும் உருவாகும். அது அற்புதமாகவும் அமையும்.

ஆனால் அதற்கெல்லாம்தான் இந்த மகள் கொடுத்து வைக்கவில்லையே!

சற்றே முகம் வாடி நின்றவள், உடனேயே முகத்தை குலுக்கி விட்டுக் கொண்டாள்.

தன்னிரக்கம் கொள்வதும், அவளுடைய தாயாருக்குக் கொஞ்சமும் பிடிக்காத ஒன்று! உள்ள தைரியத்தையும் குலைத்துக் கோழையாக்கி விடும் என்பாள். வாழ்வின்

முக்கியமான தருணங்களில், துணிந்து முடிவெடுத்த வீராங்கனை அவளைப் பெற்றவள்!

ஒரு மூச்சை எடுத்துவிட்டு, அவளது அறைக்குச் சென்று காவேரியின் படத்தின் முன்பு, அன்னையின் முகத்தைப் பார்த்தபடியே சற்று நேரம் நின்றாள்.

தன்னம்பிக்கை! தைரியம்! தாயின் தாரக மந்திரம்!

மீண்டும் படம் வரையும் அறைக்குள் சென்றபோது சாரூபாவின் முகத்தில் தெளிவு இருந்தது.

ஆராய்ச்சிக் கண்ணோடு, ஒவ்வொரு திசையிலும் நின்று, படத்தை ஆராய்ந்தாள்.

ஒருவாறு மனதில் முழுமையான திருப்தி உண்டாகவே, படத்தைப் பற்றிய குறிப்புகளை எழுதுவதற்காக 'லாப்டாப்'பை எடுத்தாள்.

எழுத வேண்டிய குறிப்புகளை மனதுள் வரிசைப் படுத்தியவாறே 'லாப்டாப்'பைத் திறந்தபோது, மின்சாரம் தடைப்பட்டு, விளக்கு அணைந்து போனது.

அன்றைய மின்தடைக்குரிய நேரம் ஆகவில்லை. 'மெயின்டனன்ஸ்'க்கு உரிய நாளும் இதுவல்ல.

உள்ளூர சிறு எரிச்சலுடன், வேலைக்காரன் மணியை அழைத்தாள் அவள்.

வேலையாள் ஓடிவந்து "என்னம்மா?" என்று கேட்கும்போதே, சாரூபாவின் எரிச்சல் மறைந்து போயிற்று. நம்மால் கட்டுப்படுத்த முடியாத தொல்லைக்குக் கோபப் பட்டு என்ன பயன்?

''மணீ'' என்று அமைதியாகவே அழைத்து ''பக்கத்து வீட்டில் மின்சாரம் இருக்கிறதா என்று பார். நம் வீட்டில் மட்டும் என்றால், மின் வாரியத்துக்குப் போன் பண்ணு'' என்றாள் அவள்.

ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு, மணி வெளியே சென்றான். வெகு விரைவிலேயே திரும்பி வந்து அவன் சொன்னது, அவளைத் திகைப்படைய வைத்தது.

''அக்கம் பக்கம் எல்லா வீட்டிலேயும் கரண்ட் இருக்கு தும்மா. நமக்குத்தான், ஏதோ பணம் கட்டவில்லைன்னு கட் பண்ணுவதாக, போனில் சொன்னாங்களாம்மா'' என்றான் அவன்.

பணம் கட்டாமல் எப்படி இருக்க முடியும்? மின் துறைப் பணியாளர் வந்து, அட்டையில் செலவான யூனிட் கணக்கை எழுதிக் கொடுத்ததுமே, பணம் கட்டு வதற்காக அலுவலகத்துக்கு அட்டை அனுப்பப்பட்டு விடுவது, பல ஆண்டு, சுமார் முப்பது ஆண்டு காலத்துப் பழக்கம். அங்கிருந்து பணம் கட்டி, ரசீதுடன் மின் அட்டையும் உடனேயே திரும்பி வந்துவிடும். இப்போது என்ன ஆயிற்று?

''மின் அட்டையை அலுவலகத்தில் கொடுத்தாய் தானே?'' என்று பணியாளை விசாரித்தாள். ஆனால் அவன் மறக்கக் கூடியவன் அல்ல.

சாரூபா எதிர்பார்த்தது போலவே ''மறுநாளே கொடுத் திட்டேம்மா'' என்றான் அவன். ''ஆனால்.. ஏனோ பணம் கட்டிக் கார்டை வாங்கிப் போகும்படிச் சொல்லவே இல்லை.''

ஏன்?

சற்று யோசித்துவிட்டு ''ஒருவேளை, இது போலப் பணம் கட்டுகிற வேலை செய்கிற அலுவலர் லீவு எடுத்திருக்கிறாரோ, என்னவோ? இப்போது நான் பணம் தருகிறேன். கட்டிவிட்டு வந்துவிடு. என் வேலைக்கு உடனே மின்சாரம் வேண்டும். நீ சீக்கிரமாகப் போய், அபராதத்தோடு பணத்தை கட்டி உடனே மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்'' என்று கையில் இருந்த பணத்தில் தேவையானதை மணியிடம் கொடுத்து அனுப்பினாள்.

''அப்படியே அலுவலகம் போய், விவரமும் கேட்டு வா'' என்று பணித்தாள்.

மணி எப்போதுமே, சாரூபாவிடமும், அவளுடைய அன்னையிடமும் மிகவும் விசுவாசமும் பணிவும் உடையவன். அதற்காகவே அந்த வீட்டு அதிபர், அவன் வீட்டோடு தங்கி, அங்கே தேவைப்படும் வேலைகளைச் செய்யுமாறு ஏற்பாடு செய்திருந்தார். அவனும் மறு முறை சொல்லத் தேவையின்றி பணிபுரிவான்.

இப்போதும், சாரூபா சொன்னபடியே பணத்தைக் கட்டி உடனே மின் தொடர்புக்கு ஏற்பாடு செய்துவிட்டு, கம்பெனி அலுவலகத்துக்கும் சென்றான்.

ஆனால், அலுவலகத்தில் கிடைத்த பதில் அவனுக்கு மட்டுமின்றி, அதை வீட்டுக்கு வந்து சொன்னபோது, வீட்டு எஜமானிக்கும் திகைப்பைத் தந்தது.

''இந்த வீட்டுச் செலவு தொழில் நிறுவனத்தைச் சேர்ந்தது இல்லை. அதனாலே, இங்கே இந்த வீட்டில்

வசிப்பவர்கள்தான் இந்த வீட்டில் செலவாகிற மின் செலவுக்கான பணத்தைக் கட்ட வேண்டும் என்று, ஆபீசிலே கறாராகப் பதில் சொன்னாங்கம்மா! சொல்லிவிட்டுப் பணம் கட்டாமலே, இந்த அட்டையையும் திருப்பித் தந்தார்கள்'' என்றான் அவன் குழப்பத்துடன்.

என்ன இது? சாரூபாவுக்கும் ஒன்றும் விஷயம் புரியவில்லை.

இவ்வளவு நாள் இல்லாமல், இது என்ன புதுக் கணக்கு?

அந்தத் தொழில் அலுவலகம் எல்லாவற்றுக்கும் உரிமையாளரின் வீடு, இது. இந்த வீட்டுச் செலவுக்கான பணத்தை, எப்போதும் போல, அலுவலகம் கட்ட வேண்டியதுதானே? அந்த விவரம் கூடத் தெரியாமல், அலுவலகத்தில் புதிதாக யார் வந்து, இப்படி குழப்பியடிப்பது?

ஆனால் இந்தப் பண விவகாரம் பற்றி, அப்போது அலசி ஆராயச் சாரூபாவுக்கு மனமில்லை. தொடர்பு கலைந்து விடாமல், முதலில் குறிப்புகளை எழுதி முடிக்க வேண்டும்.

கையில் இருந்த வேலையை அவள் முடித்தபோது, இந்தக் கண்காட்சிக்கான இடத்தைக் கூட சேர்ந்து பகிர்ந்து கொள்ளும், சினேகிதி செல்லில் தொடர்பு கொண்டு, சில விவரங்கள் கேட்டாள்.

இருவருமாகச் சேர்ந்து அதுவரை முடித்திருந்த வேலை, கண்காட்சி ஹாலில் அவைகளை

அடுக்கும் விதம் பற்றி சற்று நேரம் கலந்து ஆலோசித்தார்கள்.

பேச்சில் திருப்தி ஏற்படாது போகவே, இருவருமாகக் கண்காட்சி வைப்பதற்கான ஹாலுக்கே சென்று, மேற்கொண்டு திட்டமிட்டார்கள்.

கண்காட்சியில் மொத்தம் ஆறு பேரின் பங்களிப்பு இருந்தது. எனவே அவர்களையும் வரவழைத்து, எல்லோருமாகக் கலந்து பேசி முடிக்கும்போது, பொழுது மதியம் திரும்பி விட்டது.

எனவே அன்றைக்கு விட்டுவிட்டு மறுநாள் அலுவலகத்துக்கு போன் செய்து சாரூபா மின்சாரச் செலவுக்குப் பணம் கட்டாதது பற்றிய விவரத்தைக் கேட்டாள்.

வினயமான குரலில்தான் பதில் வந்தது... அல்லது சற்று அதிகப்படியான வினயமோ?

இதற்காகத்தான், அவள் இயன்றவரை அலுவலகம் போன்ற இடங்களில் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்வதே இல்லை. ஆனால், இப்போது வேறு வழியில்லை.

''அம்மா, நான் வெறும் கிளார்க், சொன்னதைச் செய்கிறவன். எதற்கும், நீங்களே இது பற்றி மேலிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்களேன்'' என்று கேட்டுக் கொண்டான் எதிர்முனையில் இருந்தவன்.

ஆனால் மேலிடம் என்பது யார்?

அங்கிள் சாந்தலிங்கத்துக்குப் பிறகு, இந்த இரண்டு ஆண்டுகளாக நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பை கவனித்துக் கொள்வது, ஒரு சட்ட ஆலோசக நிறுவனம்.

மூன்று சட்ட வல்லுனர்கள் சேர்ந்து, அந்த நிறுவனத்தைத் தொடங்கி வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்தனர். அந்த மூவர் குழுவின் தலைவரான சட்டநாதன் சாந்தலிங்கத்துடைய நண்பர். இருவருக்கும் இடையே ரகசியங்கள் கிடையாது என்று, அவளிடம் ஒரு தரம் சாந்தலிங்கம் சொன்னதுண்டு.

நண்பரிடம் உள்ள நம்பிக்கையின் காரணமாகவே, தன் உயிலை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை சாந்தலிங்கம், நண்பரது நிறுவனத்திடமே ஒப்படைத்திருந்தார்.

நிறுவனப் பங்குதாரர்களில் சட்டநாதன்தான் இதுவரை நேரடியாக அந்தப் பொறுப்பைக் கவனித்தவர். உயிலின் 'எக்ஸிக்யூட்டர்.'

இந்த இரண்டு ஆண்டுகளாக, உயிருடன் இருந்த சாந்தலிங்கமே நடத்தி வருவது போலவே நிர்வாகம் சிறு பிரச்சினை கூட இல்லாமல் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

இப்போது சில மாதங்களுக்கு முன்பாகத்தான், வயதாகி விட்டதாகச் சொல்லி சட்டநாதன் இந்தப் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார்.

ஓய்வு என்று பெயரே தவிர, வெளிநாடுகளுக்குக் குடி பெயர்ந்து விட்ட இரண்டு மகன்கள், ஒரு மகள் வீடுகளுக்குப் போய், ஆங்காங்கே ஆசை தீரக் கொஞ்ச காலம் தங்கியிருந்துவிட்டு திரும்பி வரத்தான் அவர் திட்டமிட்டிருந்தார்.

''ஆளாளுக்கு, அவர்கள் வீட்டுக்கு வருவதே இல்லை என்று ஒரே புகார், சாரும்மா. அதனால் போதும் போதும் என்கிற அளவுக்கு, அதாவது வர வில்லை என்று புகார் சொல்ல வாயைத் திறக்கப் பயப்படும் அளவுக்கு ஒவ்வொருவர் வீட்டிலும் தங்கி, அவர்களைப் போரடித்துவிட்டு திரும்புவதாக, ஐடியா வைத்திருக்கிறேன். வந்த பிறகும், இந்தச் சட்டம், சண்டை சச்சரவுகளை விட்டு ஒதுங்கி, உன் அங்கிளைப் போல சமூகத் தொண்டுகளில் ஈடுபடப் போவதாக உத்தேசம்.

''ஆனால் அதனால் லிங்கத்தின் நிறுவனத்தை நடத்துவதில் ஒரு மாறுதலும் இருக்காதம்மா. எனக்குப் பதிலாக, எங்கள் குழுவில் வேறு யாராவது எக்ஸிக் யூட்டராக வந்து, இந்தப் பொறுப்பைக் கவனிப் பார்கள்'' என்று அவரே அவளிடமே சொல்லியும் இருந்தார்.

சென்ற மாதம் வரை, அப்படியேதான் நடக்கவும் செய்தது. அதாவது சட்டநாதன் வெளிநாட்டுக்குக் கிளம்பிச் சென்று இரண்டு மாதங்கள் முடியுமட்டும், ஒரு மாறுதலும் இருக்கவில்லை.

அதையேதான், அந்த மனிதனும் கூறினான். கூறிவிட்டு, ''அம்மா, பெரிய வக்கீல் சார், இப்போது

இங்கெல்லாம் வருவதில்லை. அந்த வக்கீலய்யா, ஓய்வு பெற்று விட்டாராம். அதனால், அவர்கள் நிறுவனத்திலிருந்து வேறு ஒரு பங்குதாரரை நமக்கு நிர்வாக அதிகாரியாகப் போட்டிருக்கிறார்கள். அவர் கொஞ்சம் வேறே மாதிரி நிர்வாகம் பண்ணுகிறார். உங்களோட பிரச்சினை எதுவானாலும் நீங்கள் புதியவர் கிட்டேயே, நேரேப் பேசுங்கம்மா'' என்று யோசனை சொன்னான்.

''புதிய சாரோட செயலாளருக்கு லைன் கொடுக்கச் சொல்லுகிறேன்'' என்றான் தொடர்ந்து சொல்லி, அவளது சம்மதம் கேளாமலே, உடனே அந்தச் செய லாளருக்குத் தொடர்பும் கொடுத்தான்.

என்னவோ பொருத்தமற்ற வேகம் தெரிந்தது. சாருபாவுக்கு. அவளது வரவை எதிர்பார்த்து, ஏற்கனவே செய்த ஏற்பாடோ? அல்லது புதிதாக வந்திருப்பவர் விரைந்து செயல் முடிப்பவரோ? எப்படியும், செயல்பாடு அவரது கைகளில் இருக்கிறது.

நல்லதையே நினைப்போமே என்று எண்ணிச் செய லாளரிடம் சாருபா பேசினாள். ஆனால் புதிய அதிகாரி யிடம் பேச வேண்டும் என்று செயலாளரிடம் கேட்டால் ''அடுத்த வாரம் அப்பாயின்ட்மென்ட் போடவா?'' என்று அந்தச் செயலாளர் பெண் தேன் குரலில் வினவினாள்.

அடுத்த வாரம்! அன்று புதன்கிழமை. குறைந்த பட்சம் ஐந்து நாட்கள் காத்திருக்கச் சொல்கிறாள்! இதில் என்ன வேகம் இருக்கிறது?

அத்தோடு கண்காட்சி வேலை தலைக்கு மேல் இருக்கும்போது, இந்த ஆளிடம் போய்க் காத்துக் கிடப்பது முடியாது. அதுவும், அடுத்த வாரம் முடியவே முடியாது. உண்ணும் உறங்கும் நேரம் தவிரக் கண் காட்சிக் கூடத்திலேயேதான் கிடக்க நேரும்!

''அடுத்து தேவைப்படும் பொழுது சொல்கிறேன்!'' என்று அப்போதைக்கு அந்தச் சந்திப்பைச் சாரூபா ஒத்திப் போட்டாள்.

ஆனால் ரொம்ப ஒத்திப்போட முடியாமல் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நேரலாயின.

மறுநாளே, தோட்டக்காரன் கிட்டன் கைகளைப் பிசைந்து கொண்டு அவள் முன்னே வந்து நின்றான் ''அம்மா, எனக்கு ஒரு தாக்கீது வந்திருக்குது'' என்றான் வருத்தமும், பயமுமாக.

கிட்டன் அப்படி ஒன்றும் பயப்படுகிறவன் அல்ல. தோட்டத்தைக் கவனிப்பதோடு வீட்டுக்கு ஒரு பாதுகாப்பாகவும் இருப்பான் என்றுதான். அவனைத் தோட்டக்காரனாக சாந்தலிங்கம் நியமித்ததே. கோயில் விசேஷம் என்று, ஆண்டுக்கு இருதரம் ஊருக்குப் போய் பத்து நாட்கள் இருந்துவிட்டு வருவான்.

மாதா மாதம் சம்பளப் பணத்தை அப்படியே ஊருக்கு அனுப்பி விடுவான் என்பதால், இப்படி ஊருக்குச் செல்லும்போது சாந்தலிங்கம் தனியாகக் கையில் பணம் கொடுத்து அனுப்புவார். இப்போதும், சாரூபா சீட்டு எழுதி அனுப்பினால், அதேபோலவே

அலுவலகத்திலிருந்து அவனுக்கு பணம் கொடுத்து விடுவார்கள்.

இப்போது, இவனுக்கு என்ன பிரச்சினை ஏற்பட்டிருக்கக் கூடும்?

தமிழில் எழுதி, அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்த கடிதத்தை கிட்டன் நீட்டினான்.

''சம்பளம் ஆபீஸிலிருந்து வருகிறதாலே நாளையிலேர்ந்து அங்கேதான் வேலை செய்ய வேணுமாம்மா. இங்கிட்டு வேலை பார்த்தா, கம்பெனி வேலையிலேயிருந்து நீக்கிடுவாங்களாம். சம்பளமும் தர மாட்டாங்களாம்!'' என்று கண் கலங்கினான் அவன்.

ஊரில் அவனுடைய குடும்பத்துக்கு இந்தச் சம்பளப் பணம் இல்லாமல் தீராது அவன் இவ்வளவு கலங்குவது, அதற்காகத்தான்.

ஆனால், என்ன இது தொல்லை? யாரோ வேண்டும் என்று பிரச்சினை பண்ணுகிறார்களா? அப்படி யார் செய்ய முடியும்? எதற்காகச் செய்கிறார்கள்?

முதலில் மின்சார பில்லுக்குப் பணம் தர மறுத்தது. இப்போது இவனது ஊதியம்!

அங்கிள் இறந்து இரண்டு ஆண்டுகளாக, இதே வழக்கம்தானே? இப்போது என்ன?

ஒருவேளை சட்டப்பூர்வமாக அங்கிள் எழுதி வைக்கவில்லையோ? அப்படியில்லையே! உயிலை எழுதியது சட்டநாதன் அங்கிள் ஆயிற்றே?

அங்கிள் சொன்ன விதமாக எழுதி, இரண்டு ஆண்டுகள் அதை நடைமுறைப் படுத்தியும் இருக்கிறாரே!

அம்மாவுக்குப் பிறகும், சாரூபாவின் காலம் முழுவதும் வீட்டை அவளே பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எழுதியிருப்பதாக, வக்கீல் அங்கிள் சொல்லியிருக்கிறார்! வீட்டைப் பயன்படுத்துவது என்றால், எல்லா வசதிகளோடும்தானே? அல்லது அப்படி இல்லையோ?

எப்படியும், இந்தக் கண்காட்சி வரை, அவளைத் தொல்லை செய்யாமல், அவளது கவனத்தைக் கலைக்காமல் இருந்தால் போதும்! அதன் பிறகு, என்ன ஏது என்று எல்லாம் நிதானமாகக் கேட்டு, ஆவன செய்யலாம்.

எனவே, அப்போதைக்கு எந்தப் பிரச்சினைக்குள்ளும் இறங்க மனமின்றி, ''சரி, கிட்டா. நீ அலுவலகத்துக்கே போ. போய், அங்கே சொல்லுகிறபடி செய். இது என்ன என்று, அப்புறமாக ஒரு பத்து நாள் கழித்து, இந்தக் கண்காட்சி முடிந்த பின் பார்க்கிறேன்'' என்று தோட்டக்காரனை அனுப்பி வைத்தாள்.

ஆனால் இந்தப் பிரச்சினைகளை ஒவ்வொன்றாகக் கிளப்பி விட்டுக் கொண்டிருந்த மகா மனிதனுக்கு, அந்த அவகாசத்தை அவளுக்குக் கொடுப்பதற்கு மனமில்லை என்று தெளிவாகக் காட்டிக் கொண்டான்.

ஏனெனில், அடுத்து வெளியே சென்றபோது காருக்குப் பெட்ரோல் போடக் கார்டை நீட்டினால், அதை

வாங்கிப் பார்த்துவிட்டு ''சாரிம்மா, இந்தக் கார்டு பயனில் இல்லை என்று அலுவலகத்தில் இருந்து எங்களுக்கு அதிகாரப் பூர்வமாகத் தகவல் வந்திருக் கிறது. அதனால் பணமாகவே கட்டி விடுங்கள்'' என் றார்கள்.

நல்லவேளையாக சாரூபா மொத்த மொத்தமாகப் பெட்ரோல் போடுவதில்லை. போட்ட பெட்ரோலுக்கு கொடுப்பதற்குக் கையில் பணம் இருந்தது. பணத்தைக் கட்டி விட்டாலும், சாரூபாவுக்கு முகம் சிவந்து போயிற்று.

அதெப்படி அவளிடம் ஒரு வார்த்தை கூட தெரிவி யாமல், இப்படிச் செய்யலாம்?

இப்போது அவள் கையில் பணம் இல்லாமல் போயிருந்தால், எவ்வளவு அவமானமாகிப் போயிருக் கும்?

இது மட்டுமல்ல, வீட்டில் சமையல் செய்யும் வள்ளியம்மைக்கும், இனிச் சம்பளம் வேண்டுமானால் தொழிற்சாலை 'மெஸ்'சில் போய்ப் பணி புரியுமாறு கறார்க் கடிதம் ஒன்று இரு தினங்களுக்கு முன்னதாக அலுவலகத்திலிருந்து வந்திருந்தது.

வள்ளியம்மைதான் ''எனக்கு சம்பளமே வேண்டாம், பாப்பா. மூணு வயசிலே இருந்து, உன்னை நானும் தான் வளர்த்திருக்கிறேன். பெத்த பொண்ணு மாதிரிதான் நீ எனக்கு. பெண்ணுக்கு பொங்கிப் போட, யாரானும் காசு கேட்பாங்களா? நம்ம ரெண்டு பேர் வயித்துக்கு, நீ

சம்பாதிப்பாய்தானே? அது போதும் தாயி. உன்னைத் தனியாக விட்டுவிட்டு, நான் எங்கேயும் போக மாட்டேன்'' என்று சொல்லிவிட்டாள்.

மணிக்கும் அதே உத்திரவு.

இன்னும் வாசலில் காவல்காரன் மட்டும் பாக்கி! அவனுக்கும் என்றைக்கு உத்திரவுக் கடிதம் வரப் போகிறதோ?

கண்காட்சி வரை பொறுக்க முடியாது என்று தோன்றி விடக் கம்பெனி அலுவலகத்தை நோக்கி காரைச் செலுத்தினாள் சாரூபா.

இந்தப் பிரச்சினையின் அடி முதல், உடனே ஆராய்ந்தே ஆக வேண்டும்!

அவள் ஏற்கனவே எதிர்பார்த்தது போலவே, அந்த முயற்சியும் ஒன்றும் எளிதாக நடக்கவில்லை.

முதலாளியின் மனதைப் பிரதிபலிப்பவர்கள் பணி யாட்கள் என்று சொல்லுவார்கள். அதன்படி அலுவல கத்தில் வேலை செய்த பலரும், அவளைக் கண்டு கொள்ளாதிருக்கவே முயன்றனர். இப்போது அதிகாரம் புதிய நிர்வாகி கையில்தானே இருக்கிறது? எனவே, கருமமே கண்ணாகக் குனிந்த தலை நிமிராமல் எல் லோரும் வேலையைப் பார்த்தார்கள்!

புதிய நிர்வாகியுடைய செயலாளர் பெண்ணைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்! ''பெயரை எழுதி வைத்து விட்டுப் போங்கள். என்றைக்குப் பார்க்க முடியும் என்று கேட்டு தகவல் அனுப்புகிறேன்'' என்று அதிலேயே ஒரே பிடியாக நின்றாள்.

ஓரிரு முறை அமைதியாகச் சொல்லிப் பார்த்து விட்டு பொறுமையிழந்து, ''முப்பது வருஷங்களாக இங்கே நடந்து கொண்டிருக்கும் விதி முறைகளை மீறுகிறீர்கள். தப்புக்கு மேல் தப்பாக செய்து சீண்டிக் கொண்டே இருந்தால், அதைச் சும்மாப் பொறுத்துப் போகிறவள் நானல்ல. இப்போது நீங்களாக, உங்கள் நிர்வாகியிடம் என்னை அழைத்துச் செல்லாவிட்டால், நானே போய்க் கொள்வேன். எப்படியும், புது நிர் வாகியைப் பாராமல் நான் இன்று திரும்பிப் போகமாட் டேன்!'' என்று அழுத்தமான குரலில் அதட்டலாகக் கூறினாள்.

உறுமினாள் என்று கூடக் கூறலாம்.

இந்த மாதிரி ஆத்திரம், கோபத்தை அதுவரை கண்ட தில்லையோ, அல்லது உரிமைக்காரி போல சாரூபாவின் கம்பீரம் அவளைத் தடுமாறச் செய்ததோ, அந்த செயலாளர் பெண் சற்றுத் திகைத்துத் திணறி போய் வாயடைத்து நின்றாள்.

''என்ன,'' என்று அடுத்த அதட்டலில் ''அ... அது மேடம்.. நா... ன் போய் சாரிடம் கேட்டுவிட்டு...'' என்று அவள் தடுமாறும்போதே, அவளது மேசை மேல் இருந்த போன் கிணுகிணுத்தது.

அவசரமாக எடுத்துக் கேட்டுவிட்டு, விழிகள் விரிய, ''மேடம், சார், உங்களை உள்ளே வரச் சொல்லுகிறார். அஅந்த அறை!'' என்று காட்டினாள் செயலாளர்.

என்னவோ, சாரூபாவைக் குழப்பியது.


அந்த நிர்வாகிக்கு அவகாசம் இருந்தால், நேராக வரச் சொல்லுவதுதானே? 'அப்பாயின்ட்மென்ட்' அப்படி இப்படி என்று எதற்கு இந்த அலட்டல்?

எதற்கு என்று, நிர்வாகியின் அறைக்குள் சென்றதும் தெரிந்தது.

அதுவும் 'உலகம் ரொம்பச் சின்னதில்லை?' என்று உள்ளிருந்தவன் கேட்டபோது, இன்னமும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

ஆனாலும் கடவுள், இந்த உலகத்தை இவ்வளவு சின்னதாகப் படைத்திருக்கக்கூடாது!

# 2



அங்கிளின் நிறுவனத்துக்குப் புது நிர்வாகியாக சுதர்மன் வருவான் என்று கனவில்கூட யாரால் கருத முடியும்?

அதுவும், அதே சுதர்மன்!

சுமார் ஐந்து ஆண்டுகள் இருக்கும். சாருபா கல்லூரியில் சேர்ந்த புதிது. பல்வேறு கலைகளில் ஆர்வம் இருந்ததால், அவள் அதற்கேற்ற துறையையே தேர்ந்தெடுத்திருந்தாள். சுதர்மன் அதே கல்லூரியில் தொழில் நிர்வாகம் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அது கடைசி ஆண்டு.

எப்போது அவளைப் பார்த்தானோ? அவள் பின்னா லேயே சுற்றத் தொடங்கி விட்டான்.

சாருபாவுக்கு, அவனைப் பிடிக்கவில்லை என்று சொல்ல முடியாது. ஒரு ஹீரோ போன்ற தோற்றத்துடன்... கல்லூரியில் அவன் ஹீரோவும்தான். அந்த ஹீரோ, அடிக்கடி அவளைத் தேடி வந்து பேசும்போது, அவளுக்குப் பெருமையாகத்தான் இருந்தது.

ஆனால், அவன் காதலிப்பதாகச் சொல்லவும், அவளுக்கு கண் திறந்தது.

இந்தக் காதலுக்கு எதிர்காலம் கிடையாதே!

கூடப் படிக்கும் ஒருத்தி, அவளுடைய அங்கிளின் பெரிய காரில் வந்து இறங்கும்போது, அது பெரிய விஷயமில்லை.

ஆனால், அதுவே திருமணம் என்று வரும்போது, அவளது பிறப்பு, வளர்ப்பு எல்லாம் பூதக் கண்ணாடி கொண்டு ஆராயப்படுமே!

அவளிடம் கள்ளமில்லை! அவளுடைய அன்னை யிடமும்தான். ஆனால் அவளைப் பற்றிய... அவளுடைய தாயைப் பற்றிய விவரங்கள், அவ்வளவு எளிதாக எல்லோருக்கும் புரிபடக் கூடியதில்லை. புரியாமல் தப்பு தவறாக ஒரு வார்த்தை விழுந்து விட்டால், அவளால் அதைத் தாங்க முடியாதே!

அதைவிட, எப்போதுமே அவளுடைய உன்னத அம்மாவுக்கு மகளாகவே, சாரூபா எப்போதும் இருந்து விடுவது உத்தமம்!

இந்த எண்ணத்தினாலேயே, சாரூபா சுதர்மனை விட்டு விலகத் தொடங்கினாள்.

ஆனால், அவன் இந்த விலகலை ஏற்க மறுத்தான். முன்னிலும் அதிகமாக, ஓடி ஓடி வந்து, அவளிடம் காதலைப் பறை சாற்றினான்.

பெற்றோரிடம் சொல்லி, திருமணத்துக்காகப் பெண் கேட்டு அவள் வீட்டுக்கு வரப் போவதாக அறிவித் தான். சுற்றிலும் யார் இருக்கிறார்கள் என்று கூடப் பார்க்க வில்லை!

படிக்கப் போவதாக அவள் சொன்னதை, சுதர்மன் காதிலேயே வாங்கவில்லை.

அவனுடைய பெற்றோருக்கு, சுதர்மன் கண்ணின் மணி. தோற்றத்தினாலும், படிப்பு மற்றும் வாக்கு வன்மையாலும், கல்லூரியில் அவன் பிரபலம்! அவன் சொல்லுக்கு ஆடுகிறவர்கள் நிறைய பேர் இருந்தார்கள். வீட்டிலும் வெளியிலும், எல்லோருக்குமே அவன் ஹீரோ.

சாரூபா மட்டும் வேறு நினைக்கக் கூடும் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. சும்மா பிகு பண்ணுவ தாகவே எண்ணினான் போலும்.

அவன் மணப்பதாகச் சொன்னதையே பெரிய கௌரவமாகக் கருதி, அவனது காலடியில் விழுந்து கிடப்பாள் என்றும் நினைத்திருக்கலாம்.

நல்ல விதமாகச் சொன்னால் அவன் ஏற்பதாக இல்லை என்று ஆனதும், சாரூபா அலட்சியத்தை ஆயுதமாக எடுத்தாள்.

''சுய புத்தி இல்லாத பத்துப் பேர் உன்னைச் சுற்றி வந்தால், எல்லோருமே காலில் விழுவார்கள் என்று நினைத்தாயா? நான் ஒன்றும் உன்னை மணக்கக் காத்துக் கிடக்கவில்லை! ஒரு போதும் மணப்பதாகவும் இல்லை!'' என்று அவள் முகத்தைத் திருப்பினாள்.

அவனுக்கு அதிர்ச்சியோடு, கூட இருந்தவர்கள் முன்னே அவமானமாகவும் ஆகிப் போயிற்று.

திருப்பி அடிக்கும் வெறியில் ''என்னடி பெரிதாக அலட்டுகிறாய்? பெரிய காரில் வருகிறோம் என்று திமிரா?'' என்று ஆத்திரத்தோடு கேட்டு, அவளைக் கர்வம் பிடித்தவளாகச் சித்தரிக்க முயன்றான்.

அவளுக்கு வலித்தது. ஆனால், உண்மைக் கார ணத்தைச் சொல்ல முடியாததோடு அவனது 'டீ'யும் ஆத்திரமூட்ட ''ஆமாம் என்றே வைத்துக் கொள்ளேன். ஏன்? நீயும் அந்தக் காரைப் பார்த்துவிட்டுத் தானே என் பின்னே சுற்றுகிறாய்?'' என்று திருப்பி அடித்தாள்.

இப்போது பொய்யான பழியில் வலி தாக்கியது, சுதர்மனை.

ஆனால் அவன் பதில் பேசவில்லை. அடிபட்ட பார்வையால் அவளை வெறித்தவன் மேலே எதுவும் சொல்லாமல், சட்டெனத் திரும்பிப் போய்விட்டான்.

சில நாட்களில் சுதர்மன் கல்லூரியை விட்டே போய்விட்டதாகக் கேள்விப்பட்டபோது, அவளுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. தன்னால் அவனது எதிர்காலமே வீணாகிப் போயிருக்குமோ என்று கலங்கி னாள்.

ஆனால், யாரிடம் சொல்லி ஆறுதல் பெறுவது? யாரிடம் அவனைப் பற்றின விவரம் கேட்பது?

அந்த அடிபட்ட பார்வை, பல நாட்கள், அவளது தூக்கத்தைக் கெடுத்திருக்கிறது.

அவன் வாழ்வு வீணாகியிருக்குமோ என்று, அவ்வப் போது எண்ணிக் கலங்கியது எல்லாமே, இப்போது அவளுக்கு நினைவு வந்தது.

இப்படித் தலைமேல் ஏறி உட்கார்ந்து கொண்டு, பிரச்சினை தருவான் என்று, அவள் எண்ணவே இல்லையே!

சுதர்மனின் குரலிலும், முகத்திலும் இருந்த கடுமை, அவன் எந்த விளக்கத்தையும் கேட்கத் தயாராக இல்லை என்பதை உணர்த்தியது.

எனவே, இன்றையப் பிரச்சினையை மட்டும் அவனிடம் எடுத்துச் சொல்ல முடிவு செய்தாள். கடந்த சில தினங்களில் வீட்டு நிர்வாகத்தில் அலுவலகம் செய்யும் குறுக்கீடுகளைப் பற்றியும், அதனால் ஏற் படும் தொல்லைகள் பற்றியும், எப்படி இதெல்லாம் வழக்கத்துக்கு மாறு என்பது பற்றியும் அவனிடம் கூறினாள்.

குறுக்கிடாமல் கேட்டிருந்தவனிடம் எல்லாம் சொல்லிவிட்டு, இந்தப் புதிய குறுக்கீடுகளை ரத்து செய்துவிட்டு, முன்போலவே எல்லாவற்றையும் மாற்ற வேண்டும் என்று, அவனிடம் கேட்டுக் கொண்டாள் அவள்.

அவள் பேசி முடிக்கிற வரை காத்திருந்து விட்டு, ''ஆனால் அம்மாவுடைய கணவரை அங்கிள் என்று அழைக்கிற ஜாதிக்கு இது போதாது?'' என்று கேட்டான் சுதர்மன். அவனது குரலில்தான், என்ன எகத்தாளம்!

முகத்தில் அறை வாங்கிய உணர்வு அவளுக்கு.

இந்த ஐந்தாண்டு காலத்தில் சுதர்மனிடம் விளக்கம் சொல்லியிருக்க வேண்டுமோ என்று தன்னைத்தானே குற்றம் சாட்டிக் கொண்டு பலமுறை அவள் தவித்தது உண்டு. ஆனால் நல்லவேளை சொல்லவில்லை என்று இன்று தோன்றியது!

ஏனெனில் இதையேதானே, அன்றும் சொல்லி யிருப்பான்? ஐந்து ஆண்டுகள் அனுபவ முதிர்ச்சி அடைந்த பிறகும், என்ன நடந்தது என்று ஒன்றும் தெரியாமலே, அதை விசாரித்து அறியும் ஆர்வம் சிறிது கூட இல்லாமல் இப்படிச் சொல்கிறவன், அந்த வயதில் இன்னும் என்னென்ன கூறியிருப்பான்!

அந்த சிறு வயதில், அவளுமே படிப்பை நிறுத்தி விட்டு ஓடியிருப்பாள்!

இப்போதோ, இங்கே சர்வாதிகாரம் படைத்த இவனிடம் வந்து நிற்கத் தேவை இல்லாதபடி

என்னென்ன செய்யலாம் என்றுதான் யோசனை ஓடியது.

யோசனையோடு அவள் திரும்பும்போதே ''அப்படி எண்ணித்தானே, அவரே உருப்படியாக ஒன்றும் தராமல் விட்டிருக்கிறார்? அதற்கு மேல், இங்கே வந்து சலுகை கேட்கக் கூச்ச நாச்சம் கொஞ்சமுமா இல்லை?'' என்று அருவருப்புடன் கேட்டான் சுதர்மன்.

ஐயோ, இவனைப் போய்... சேச்சே, என்ன பைத் தியக்காரத்தனம்! முதலில் இருந்தே, இவனைச் சந்திக்கவே நேராதிருந்தால், எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! வாழ்க்கை நிம்மதியாகச் சென்றிருக்கக் கூடுமே!

''சொல்ல வேறு விஷயம் இல்லையென்றால்...'' அவன் பேச்சு காற்றில் கரைய, மேற்கொண்டு கேட்க அவன் அங்கே இல்லை.

ஏதோ விரட்டிக் கொண்டு வருவது போல அங்கிருந்து விரைந்து வெளியேறியவள், அதே வேகத்துடன் வீட்டை அடைந்து, அறைக்குள் சென்று தொப்பெனப் படுக்கையில் விழுந்தாள்.

சே! என்ன அசிங்கமாகப் பேசிவிட்டான்!

இது ஒன்றும் முன்பின் கேட்டிராத வார்த்தைகள் அல்ல. அடுத்தவரை நோகடிப்பது, சிலருக்கு அல்வா சாப்பிடுகிற மாதிரி. யாரோ சொன்ன மாதிரி, மூட்டை கட்டிக் கொண்டு வந்து அவளிடமே சொல்வார்கள். என்றாலும், விஷயம் தெரியாமல் உளறுகிறார்கள் என்று,

அதையெல்லாம் அவளால் அலட்சியப் படுத்த முடிந்தது.

ஆனால், இவன்? காதல், கல்யாணம் என்கிற வரை போனவன், என்ன நடந்தது என்று விவரம் கேட்டிருக்க வேண்டாமா? அப்படித் தன்மையாகக் கேட்டால், அவள் பதில் சொல்லியிருக்க மாட்டாளா?

அந்த ஊருக்கு அன்னையும் அவளுமாக வந்த நாளிலிருந்து நடந்ததை எல்லாம் சொல்லியிருப் பாளே!

அப்போது அவளுக்கு மூன்றே வயது என்று, அம்மா சொல்லியிருக்கிறாள். அந்தச் சிறு வயதிலும், அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டு அம்மா நின்றது. அவளுக்குத் தெளிவாக நினைவிருக்கிறது.

அங்கே எல்லாமே புதிய இடம். ஆனால் சந்தோஷ மான இடமில்லை என்பது, தாயின் கலக்கத்தில் மகளைக் கட்டிக் கொண்டு நின்ற விதத்தில் புரிந்தது.

அதற்கு முன்பும், பாட்டியை யார் யாரோ தூக்கிக் கொண்டு போனதும் யாரோ ஓர் ஆள் வந்து கத்தியதும், வெகு லேசாக அவளுக்கு நினைவு இருந்தது.

ஆனால் சில ஆண்டுகள் சென்ற பிறகு, அவள் அம் மாவே அந்த விவரம் முழுதும் சாரூபாவிடம் சொல்லி யிருக்கிறாள். மகளுக்கு விவரம் தெரிகிற வயது என்று தோன்றிய பிறகு சொல்லியிருக்க வேண்டும்.

அது, அவளுடைய மாசு மறுவற்ற தாயின் கதை.

உனக்கு மட்டுமா தாய்? எனக்கும் அதே உறவுதான் என்று வசனம் பேசி காவேரியை மணந்தவன், சாரூபா வுடைய தகப்பன்.

அப்போது, காவேரியும் வேலைக்குப் போய் சம் பாதித்தாள். அவளுடைய தாய்க்கும் பஞ்சாலைகளில் கண்காணிப்பாளராக ஓரளவு நல்ல வருமானமே. அவனும் ஏதோ வேலை பார்த்தான் என்பதால், தாயார் சந்தோஷமாகவே மகளை திருமணம் செய்து கொடுத் தாள்.

அவர்களது நிலையில் வசதியாகவே வாழ்ந்தார்கள்.

வாரம் ஒரு சினிமா, அப்புறம் ஹோட்டல், உல்லாச மான வாழ்க்கையே!

மருமகனுக்கு வாய்க்கு ருசியாகச் சமைத்துப் போடுவது, மகளுடைய பிரசவம், பேத்தியை கொஞ்சி மகிழ்வது போன்ற சந்தோஷங்களில், பாட்டி தன்னை கவனிக்க மறந்தாளோ? அவளது உடல் நலம் குன்றியது.

வேலையை விட்டுவிட்டுப் பாட்டி வீட்டில் ஓய்வாக இருக்க நேர்ந்ததாம்.

அதிலிருந்து கோவிந்தன், அவன்தான் காவேரி யுடைய கணவன், ஆளே மாறிவிட்டானாம்.

தாயை வெளியே அனுப்பச் சொல்லிக் காவேரியை கொடுமை செய்தானாம். அவள் வேலையை விடக் கூடாது. ஆனால் அந்த வேலைக்கான தகுதியைத் தந்தவளை, அதிலும் நோய்வாய்ப் பட்டவளை; பெற்ற தாயை அனாதையாக வெளியே விரட்ட வேண்டும்

அல்லது, அந்த முதியவளை அங்கே தனியே விட்டு விட்டு, அவனோடு சென்றுவிட வேண்டும். இரண்டில் ஒன்றைத்தான் அவள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றான்.

அப்படி அவனோடு சென்று, அவள் என்ன மண வாழ்வை அனுபவிக்க முடியும்?

அவனது விருப்பத்தை மறுத்ததற்காகப் பேயாட்டம் ஆடியிருக்கிறான். அந்த ஆட்டத்தில், அடி உதைகளும் அடக்கம். தாயே பார்த்துவிட்டு, விலகிப் போக முயன் றாளாம்.

தடுத்து நிறுத்திப் பேத்தியை, பார்த்துக் கொள்ளும்படி ஒப்படைத்துவிட்டு, கணவனிடம் காவேரி தனிமையில் அமைதியாகப் பேசிப் பார்த்தாள்.

என்னவோ தாலி கட்டியதாலேயே அவளுக்கு அவன் வாழ்வு கொடுக்கிற கடவுள் மாதிரியும், அதற்கு நன்றி யாக அவன் சொல்படி நடப்பது அவளது கடமை என்றும் அவன் வசனம் பேசினான்.

அது மட்டுமின்றி, கட்டிக் கொடுத்த மகளை உறிஞ்சித் தின்கிற அட்டை ஜாதி என்று, அவளுடைய தாயைக் கேவலமாக வேறு பேசினான். கட்டிக் கொடுத்த மகள் வீட்டில், ஒட்டுண்ணி போல வெட்க மில்லாமல் உட்கார்ந்து உண்ணுகிறாளாம். மானரோஷம் உள்ளவள் என்றால், என்றைக்கோ வீட்டை விட்டுப் போயிருப்பாளாம்!

வீட்டோடு மாப்பிள்ளையாக இதுவரை உட்கார்ந்து தின்றவன், இப்போது வேறு மாதிரி இலக்கணம் படித் தான்!

அப்போதுதான் காவேரிக்கு விஷயம் புரிந்தது. தாயால் இனிச் செலவு மட்டுமே என்பதால், பழம் செருப்பாகத் தூக்கி எறியச் சொல்லுகிறான்.

உயிர் கொடுத்தவளை, வாழும் வழி அமைத்துத் தந்தவளை எப்படி விடுவது? காவேரி உறுதியோடு மறுத்து விட்டாள்.

''போடீ. நாளைக்கே கதறிக் கொண்டு ஓடி வந்து என் காலடியில் விழுவாய்!'' என்று சூளுரைத்து விட்டுப் பெட்டியை எடுத்துக் கொண்டு அவன் போய் விட்டான்.

யாரோ ஒரு நண்பன் வீட்டில் இருந்து கொண்டு, காவேரிக்கு 'டைவர்ஸ் நோட்டீஸ்' அனுப்பினான்.

தாய் பதறிய அளவுக்கு, மகளுக்கு எந்த உணர்ச்சியும் தோன்றவில்லை. மணவிலக்கை அவள் மறுக்கவு மில்லை. முழுச் சம்மதம் என்று தெளிவாக எழுதிக் கையெழுத்திட்டு அனுப்பினாள்.

அக்கம் பக்கத்தில் சமாதானம் செய்வதாக தாயை 'இல்லத்'தில் விட யோசனை சொன்னார்கள். ''நமக்கும் வயதாகும், அக்கா. இந்த நிலை வராது என்று என்ன நிச்சயம்?'' என்று காவேரி கேட்கவும், யோசனை சொன்னவர்கள் வாயை மூடிக் கொண்டார்களாம்.

அவள் முழுதாக ஒப்புதல் அளித்ததால், விரைவி லேயே மணவிலக்கு கிடைத்தது. தாலி 'சென்டி

மென்டை'க் கிளப்ப முயன்றவன் கையில், அவன் கட்டியதைக் கழற்றிக் கொடுத்தனுப்பி விட்டு காவேரி தாயுடன் தங்கி விட்டாள்.

இன்னொருத்தியை மணந்து, வேண்டும் என்றே அவள் முன்னே வந்து காட்டினான்.

சற்றும் கலங்காமல் ''சட்டப்படி பிரிந்துவிட்ட அன்னியன் நீ. இங்கே வராதே. வந்தால் போலீசில் புகார் செய்வேன்'' என்று திடமாக நின்றாள் காவேரி.

ஆனால், நோயின் பாதிப்பும் மன வருத்தமுமாகத் தாய் இறந்த பின், அந்தக் கணவனது தொல்லை தாங்காமல் தான், அந்த ஊரை விட்டே காவேரி கிளம்ப நேர்ந்ததாம்.

அன்னையை இழந்து மனம் கலங்கியிருந்த நிலையில், கோவிந்தன், இங்கே வந்து ஒட்டிக் கொள்ள முயன்றானாம் துணையில்லாமல் தனியே இருந்தால், கண்ட நாயும் உள்ளே வருமாம். அதனால் அவனது கௌரவம் கெட்டுப் போகுமாம்! அதனால் காவலுக்கு வந்ததாகக் காரணம் சொன்னானாம்!

அவன் வேறு மணம் புரிந்திருந்தும், இங்கேயும் குடும்பம் நடத்த முயற்சி செய்தானாம். அருவருப்புற்று, காவேரி அவனை விரட்டியிருக்கிறாள்.

ஆனால், பழமையில் ஊறியிருந்த அக்கம் பக்கம் கோவிந்தனை, அவளுடைய கணவனாகவே பார்க்க, தாயின் துணையை இழந்து சோர்ந்திருந்த காவேரி யால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அந்த ஊரை விட்டு அவள் வெளியேறிய காரணம் அது.

ஆனால் வாணலிக்குத் தப்பி அடுப்பு நெருப்பில் விழுந்த நிலை அவளுக்கு ஏற்பட்டது.

காவேரி தேடி வந்த சினேகிதியை இந்தச் சென்னை மாநகரத்தில் அவளால் கண்டு பிடிக்க முடியவில்லை.

அன்றளவில் தங்குமிடம் தேடியபோது, அவளது பாதுகாப்பற்ற நிலை புரிந்தது, நாலைந்து பேர் அவளைச் சுற்றி வளைத்து, எங்கோ இழுத்துப் போக முனைந் தனர்.

அது ஒன்றும் ஆள் நடமாட்டமே இல்லாத இடம் அல்ல. ஓரிருவராக என்றாலும் ஜனங்கள் போய் வந்து கொண்டிருந்த இடம்தான். ஆனால் மது மயக்கத்தில் லேசாகத் தள்ளாட்டத்துடன் தரக் குறைவாகப் பேசி மிரட்டி, ஒரு பெண்ணை வளைத்துக் கொண்டிருந்த வர்களிடம் வம்பு வைத்துக் கொள்ள, அவர்களில் யாரும் தயாரில்லை!

ஒரு பிளேடு சீவலில், ஒரு கத்திக் குத்தில் அவர்கள் குடும்பம் அல்லவா அழிந்து போகும்!

நம்பிக்கை இழந்து, கண்டபடி அசிங்கப்படுமுன், மகளோடு எப்படிச் சாவது என்று காவேரி வழி தேடியபோதுதான், ரொம்ப காலத்துக்குப் பிறகு, அவளது கண்களுக்கு ஒரு வெளிச்சம் தென்பட்டது.

சரியாகச் சொல்வதானால், தூரத்தில் வந்து கொண் டிருந்த ஒரு காரின் முன் விளக்குகளின் ஒளிதான், அது. ஏனோ வேகம் குறைந்து, கார் சற்று மெதுவாகவே வந்து கொண்டிருந்தது.

ஒரே கதி என்று எண்ணிய காவேரி, பற்றியிருந்த கையை உதறித் தள்ளிவிட்டு, மகளோடு காரின் முன் பாய்ந்து விட்டாள்.

ஆனால், ஏற்கனவே நின்று விட்டதால், கார் அவள் மேல் மோதவும் இல்லை, அவளைக் கீழே விழத் தட்டிச் சாகடிக்கவும் இல்லை.

அவளைப் போலவே சற்றுத் திகைத்திருந்த கும்பல் 'ஹே' என்று ஒருவரை ஒருவர் உற்சாகமாகத் தட்டிக் கொண்டு மீண்டும் அவளை நெருங்க முற்பட்டனர்.

கார்க் கண்ணாடியை இறக்கிப் பார்த்த ஒரு பெரியவர், முன்னே காரில் ஏறிக் கொள்ளச் சொல்லவும், காவேரியும் கணமும் தயங்காமல் முன் கதவைத் திறந்து ஏறிக் கொள்ள, கார் வேகமெடுத்துச் செல்லலாயிற்று.

''ஏ..ய் கார் என்றதும், உடனே ஏறிப் போகிறதைப் பாரு'' என்று ஒரு குரல் உரக்க கேட்க, இன்னும் மட்டரகமான சில வார்த்தைகளும் காதில் விழ, ''ஐயோ, சார். நான் அப்படிப்பட்டவள் இல்லை சார்'' என்று காவேரி பதட்டத்துடன் திரும்பிப் பார்த்துக் கும்பிட்டாள்.

''அந்த மாதிரிப் பட்டவள் என்றால், இந்தக் காரில் இடம் கிடைத்திராது'' என்று சுருக்கமாகக் கூறியபடியே அருகிருந்த கைப்பையை எடுத்தார் பெரியவர்.

கும்பிட்டபடியே அவரைப் பார்த்துக் கொண்டிருந்த காவேரியின் முகம் வாடியது.

பெரிய வீடு. அங்கங்கே, ஓர் அழகிய பெண்மணியின் படம் மாட்டியிருந்தது. வள்ளியம்மை, அப்போதே அங்கே சமையல் பணியில் இருந்தாள். அவளை அழைத்து, தாயும் பெண்ணும் தங்க ஏற்பாடு செய்யச் சொல்லிவிட்டுப் பெரியவர் மாடிக்குப் போய் விட்டார்.

அந்தப் பெரியவர்தான் சாந்தலிங்கம்.

மறுநாள் அவளைக் கூப்பிட்டுப் பேசினார். அவளைப் பற்றிய விவரங்கள், அவருக்குத் திருப்தியை தரவே, அவளது தகுதிக்கு ஏற்றபடி அவரது அலுவலகத்தில் ஒரு வேலை போட்டுக் கொடுத்தார்.

மற்ற அலுவலக ஊழியர்கள் வசிக்கும் பகுதியில் அவளும் மகளும் தங்குவதற்கு இடமும் கொடுத்தார்.

அத்தோடு விட்டு விடாமல், பத்து நாட்கள் சென்றதும் காவேரியை அவரது அறைக்கு வரச் சொன்னார்.


இங்கே அவளுக்குக் கொடுக்கப்படும் வேலைகளை, அவளால் செய்ய முடிகிறதா? தொழிற்சாலை குவார்ட்டர்சில் இருப்பிடம் வசதியாக இருக்கிறதா என்று விசாரித்தார்.

கௌரவமாகப் பிழைக்க வழி தந்ததாக, வேலையைப் பற்றி சந்தோஷமாக காவேரி பதில் சொன்னாள். ஆனால் தொடர்ந்து தங்குமிடம் பற்றிக் கூறும்போது அவளது பேச்சு லேசாகத் தடைப்பட்டது. ஆயினும் உடனேயே அந்தத் தயக்கத்தை உதறி, அதற்கும் நன்றி கூறலானாள்.

ஆன்றால், பாதிப் பேச்சியிலேயே சாந்தலிங்கத்தின் முகம் மாறுவதை கவனித்த காவேரிக்கு அவரது நிலைமை உடனே புரிந்து போயிற்று.

அப்போது, அதிரடியாக அவள் செய்த செயல், அவளோடு, மகள் சாருபாவின் எதிர்கால வாழ்க்கை நிலையையும் அடியோடு மாற்றியது!

# 3



அவளைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்த சாந்தலிங்கத்தின் பேச்சு திடுமென நிற்கவும், காவேரி திகைப்புற்று, அவரது முகத்தைப் பார்த்தாள்.

பார்த்ததுமே, அவரது உடனடித் தேவை என்ன என்றும், அவளுக்குப் புரிந்து போயிற்று.

அவசரமாகச் சுற்று முற்றும் பார்த்தபோது, அவருக்குப் பின் புறத்தில் இருந்த ஒரு ஸ்டாண்டின் மேல் அவரது கைப்பை இருப்பதை, அவள் கண்டு பிடித்தாள்.

கணமும் தாமதியாமல், கைப்பையைத் திறந்து, அதில் இருந்த மாத்திரையை அவள் எடுத்துப் பிரித்துக் கொடுக்க, அவரும் தயங்காமல் அதை வாங்கி வாயில் அடக்கிக் கொண்டார்.

விரைவிலேயே சாந்தலிங்கத்தின் முகம் இயல்பு நிலைக்கு மாற, உட்காரும்படி காவேரியிடம் சைகை செய்தார்.

சில பெரிய மூச்சுக்களின் பின், வாயை காட்டி ''எனக்கு இந்த மாத்திரையின் உடனடித் தேவை, இது எங்கிருக்கிறது என்பதெல்லாம், உனக்கு எப்படித் தெரியும்?'' என்று சன்னக் குரலில் மெதுவாக விசாரித்தார்.

ஒரு வினாடிக்கும் மேலாகவே கண்களை இறுக மூடியிருந்த காவேரி, பிறகு சன்னக் குரலில் பதில் சொன்னாள்.

''அன்று முதல் நாளே, நானும் சாருவும் ஏறிக் கார் செல்லத் தொடங்கியதுமே, இந்தப் பையினுள்ளிருந்து இந்த மாத்திரையை எடுத்து வாயில் அடக்கிக் கொண்டீர்கள். அது... என் தாயாருக்கும் இது போன்ற வியாதிதான். பக்கத்தில் இருந்து பார்க்க வழியில்லாமல், நான் வேலைக்கு கட்டாயம் போக வேண்டிய நிலைமை! ஒரு நாள் வேலையிலிருந்து திரும்பி வந்தபோது...'' என்றவளுக்கு அன்று கண்ட காட்சியில் மேலே பேச மாட்டாமல் தொண்டை அடைத்தது.

ஜன்னலின் கண்ணாடிக் கதவு வழியே வெளியே வானத்தைப் பார்ப்பது போல, முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றாள்.

சிறு அமைதியின் பின் ''அம்மாவுக்குப் பிறகு, அங்கே என்னால் இருக்க முடியவில்லை. ரொமபப் பிரச்சினை.

ஏற்கனவே... நான் ஒரு டைவர்சி'' என்றாள் அவள் தலையைத் திருப்பாமலே.

சற்று நேரம் ஏதோ யோசித்துவிட்டு ''இப்போது இருக்கும் இடம் உண்மையாகவே வசதியாக இருக் கிறதா?'' என்று சாந்தலிங்கம் கேட்டார்.

அவரது கேள்விக்கு, காவேரி நேரடியாகப் பதில் சொல்லவில்லை. உடனடியாகவும் சொல்லவில்லை. சில வினாடி அதிகத் தாமதத்தின் பின் 'இம்' என்ற அரை வார்த்தைகளோடு அந்தப் பேச்சை முடித்தவள் ''நான் போகட்டுமா, சார்? வேலை சேர்ந்து போகும்'' என்று அனுமதி கேட்டாள்.

தலையாட்டி அவளை அனுப்பிவிட்டு, சாந்தலிங்கம் அவருடைய காரோட்டியை வரவழைத்தார்.

டிரைவரிடம் ''அன்றைக்குக் காப்பாற்றினோமேப்பா. அந்தப் பெண்ணும் மகளும் குவார்ட்டர்சில் இருக்கிறார்கள். எப்படி, என்ன என்று முழுதாக விசாரித்துத் தெரிந்து வந்து சொல்லு. முடிந்த அளவு நீ விசாரிப்பது வெளியே தெரிய வேண்டாம். வேறு யார் மூலமாவது தெரிந்து கொள்'' என்று சொல்லி அனுப் பினார்.

சாந்தலிங்கத்துடைய காரோட்டி பழனி, அவருக்கு ரொம்ப நம்பிக்கையான ஆள்.

அவர் கேட்ட விவரங்களோடு இரண்டே நாட்களில் திரும்பி வந்தவனின் முகம், கோபமும் வருத்தமுமாகச் சிறுத்திருந்தது.

''ரொம்ப அசிங்கமாகப் பேசுகிறாங்கய்யா. ஐயா காதிலே, அது விழுகிறதே கேவலம்'' என்றான் இறுகிய குரலில்.

''பரவாயில்லை சொல்லு'' என்றார் சாந்தலிங்கம்.

''ஐயா... வந்து...'' என்று மேலும் தயங்கினான் அவன்.

''சும்மா சொல்லு, பழனி. காய்ந்த மரம் கல்லடி படும் என்று அம்மா என்னிடம் எப்போதும் சொல்லுவாள். ஊர் வம்புக்காகவே அலைகிறவர்கள் நிறைய பேர் உண்டு. நாக்கில் நரம்பில்லாமல், இட்டுக்கட்டியே, என்னென்னவோ பேசுவார்கள். இப்போது என்ன கதை, சொல்லு'' என்று ஊக்கினார் முதலாளி.

அவன் அதற்கு மேல் மறைக்கவில்லை ''எங்கியோ மறைத்து வச்சிருந்த சின்ன வீடாம். அம்மா போனதும் துணிஞ்சு இங்கியே கூட்டியாந்திட்டீங்களாம். ஆபீசிலே வேலை போட்டுக் கொடுத்ததே, அங்கேயும் நினைச்ச நேரம் கூப்பிட்டுப் பக்கத்திலே வைத்துக் கிடத்தானாம்! அதுங்கெல்லாம் மனுஷ ஜென்மமே கிடையாதுங் கய்யா.''

பழனி சென்றதும், வெகு நேரம் சாந்தலிங்கம் யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

காவேரியை கூப்பிட்டு அனுப்பி ''ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும். அதை, இந்த அலுவலகச் சூழ்நிலையில் பேச முடியாது'' என்றவர். மறுநாள் காலையில், ஏழு மணியளவில் வீட்டுக்கு வரச் சொன்னார்.

அப்படி வந்தவளிடம் ''பாரம்மா, என் மனைவி சில பணிகளைச் செய்யுமாறு என்னிடம் சொல்லி யிருக்கிறாள். அதைச் செய்து முடிப்பதற்கு, நான் சில பல ஆண்டுகள் உயிரோடு இருக்க வேண்டும். அதற்கு, இரவும் பகலும் ஒருவர் என் கூடவே இருந்து என் மருத்துவத் தேவைகளைக் கவனிக்க வேண்டும். அன்று நீ மருந்து எடுத்துத் தந்ததில் இருந்து, எனக்கு இதே யோசனை. ஒரு கௌரவமான உறவோடு, அந்த ஒருவராக, உன்னால் இருக்க முடியுமா?'' என்று கேட்டார்.

புருவங்களின் கவனச் சுளிப்பு மாற ''சா...ர்!'' என்று காவேரி திகைப்புடன் பின்னடைந்தாள்.

''பாரம்மா, என் மனைவி தவிர, எந்தப் பெண் ணையும் நான் அந்த மாதிரி நினைத்துக் கூடப் பார்த் ததே கிடையாது. நம்பிக்கை இருந்தால் இந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக் கொள். இல்லாவிட்டாலும் இந்த வேலையில் நீடிக்கலாம். ஒரு பெண்ணின் வயிற்றுப் பிழைப்பைப் பணயமாக வைத்து காரியம் சாதிக்கும் ஈனபுத்தி எனக்குக் கிடையாது'' என்றார் பெரியவர்.

லேசாகக் கையை விரித்து ''ஆனால், உனக்கு வேலையைத் தந்திருக்கும் இந்தத் தொழில்தான் எவ்வளவு காலம் நிலைக்குமோ, தெரியாது'' என்று பெருமூச்சு விட்டார்.

தொடர்ந்து ''அதை நன்கு பலப்படுத்தும்வரை, நான் இருப்பேனா என்பதுதான் சந்தேகம்'' என்றார்.

''என்னை எல்லோரும் தப்பாகப் பேசுவார்களே சார்! இப்போதே கூட, என்னென்னவோ சொல்லுகிறார்கள். அன்றைக்கு அலுவலகத்தில் கூப்பிட்டு விசாரித்ததைக் கூடத் தப்பாகப் பேசுகிறார்கள் சார்'' என்றாள் அவள் அழாக் குறையாக.

''தப்பாகத்தான் பேசுவார்கள். ஆனால் சும்மா இருக்கும்போது தப்பைத் தேடி, அது கிடைக்காதபோதும் கற்பனையிலேயே கதை கட்டுகிறவர்கள், எப்போதுதான் சும்மா இருப்பார்கள் என்று நினைக்கிறாய்?''

''சா...ர்.''

''சற்று யோசித்துப் பார், காவேரி. எனக்கு மனைவி இறந்து விட்ட இந்த நிலையில், எங்கிருந்தோ ஒரு குழந்தையோடு உன்னைக் கூட்டி வந்து வேலை கொடுத்ததற்கு, எவ்வளவு முடியுமோ, அவ்வளவு கேவலமான கற்பனைக் காரணங்கள் சுற்றி வருகின்றன என்று எனக்குத் தெரியும். சொல்லப் போனால், எனது இந்த யோசனைக்கு, அதுவும் ஒரு காரணம். திக்கற்ற பெண். என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்பது தானே, தெருநாய் வாலில் பட்டாசைக் கட்டிக் கொளுத் துவது, தும்பியின் வால் பக்கம் ஈர்க்குச்சியை செருகுவது என்று, திருப்பி அடிக்க முடியாதவர்களைத் துன்புறுத்தும் வக்கிரம் எப்போதும் இருக்கிறது.

''இதுவே என் மனைவி என்ற பெயரில் நீ என் கூடவே இருக்கும்போது யாரும் மூக்கை நுழைக்க மாட்டார்கள். அதற்கான தைரியம் வராது. என் வீட்டிலேயே தங்கலாம். அலுவலகத்திலும் என் அறையிலேயே வேலை.

ஆனால், என் மருந்து, உணவு தவிர, உனக்கு வேறு கடமை கிடையாது.

''கூடவே... இதை லஞ்சம் மாதிரி கருத மாட்டாய் என்று நம்புகிறேன். சாரூபாவை. என் மகளாகவே நீ விரும்புகிற விதமாகப் படிக்க வைக்கிறேன். இப்போது... நீ உடனேயே பதில் சொல்லத் தேவையில்லை. இரண்டு நாட்கள் நன்கு யோசித்து விட்டு பதில் சொல்லுபோதும்'' என்று முடித்துவிட்டு, சாந்தலிங்கம் எழுந்தார்.

''வந்தது போல நீயாகவே போய்க் கொள்வாய் அல்லவா? உன் முடிவு வேறாக இருக்கும் பட்சத்தில், உன்னைக் காரில் அனுப்புவது உன் முகத்தில் ஒரு கரும் புள்ளியைக் குத்தி அனுப்புவது போலத்தான் ஆகும். அதனால் கார் வேண்டாம். அலுவலகத்தில் பார்க் கலாம்'' என்றுவிட்டுப் போனார்.

சாரூபாவைச் சாப்பாட்டு மேஜை மேலே உட்கார வைத்து எதையோ அள்ளிக் கொடுத்துக் கொண்டிருந் தாள் வள்ளியம்மை.

உள்ளே வந்த காவேரியிடம் ''மூஞ்சி முகமெல்லாம் வாடிக் கிடக்குதே! பிள்ளைக்குத் தருகிறது தவிர, நீ ஒழுங்காகச் சாப்பிடுகிறது இல்லை போல! இப்படிப் போனால், எத்தனை நாள் தாங்கும்? வா உட்கார்ந்து, நீயும் இரண்டு தோசை சாப்பிடு. மனிதனோட பயங் கரமான எதிரி பசித்த வயிறு என்று எங்கம்மா சொல்லு வாங்க. வாம்மா ஒரு பிடி வயிற்றுக்குள்ளே போட்டு விட்டு, அப்புறமாக யோசி, யோசிச்சு நல்ல முடிவாப்

பண்ணு'' என்று தட்டில் தோசையை வைத்துக் கொடுத்தாள்.

அவளது பேச்சை நன்கு உள்வாங்கிய காவேரி சற்றுத் திணறிப் போனாள்.

''வவள்ளியம்மை, உஉங்களுக்கு.. உங்களுக்கு'' என்று தடுமாறினாள்.

''அட, என்னம்மா நீயி. எங்கம்மா கூட, சின்ன பிள்ளையாக இங்கே வந்தேன். அது பெரியம்மா காலம். நம்ம ஐயாவுக்கு அம்மா, இத்தனை காலம் சோறு போட்டது, இந்த வீடு. இடையிலே கண்ணாலம் கட்டிக்கிட்டு போய், போன சுருக்கிலேயே திரும்பியும் வந்திட்டேன். சின்னம்மாளும் ரொம்பப் பிரியமா இருப்பாங்க. அவங்களுக்குக் குழந்தையும் பிறக்கலை. அய்யா உடம்பு இருக்கிற நிலையிலே, தனி மரமா விட்டுவிட்டுப் போறேனேன்னு அழுவாங்க. அய்யாவுக்கு மருந்தெல்லாம் பார்த்துப் பார்த்துக் கொடுக்கணுமாமே!

தனக்குப் பெறகு யார் கொடுப்பாங்கன்னு வருத்தம். நீ என்னமோ, ஆபீசிலே மருந்து எடுத்துக் கொடுத்தியாமே. அதைச் செய்யக் கட்டாயமா ஆள் வேணும். அதைத்தானே, அய்யாவும் கேட்கிறாங்க? அங்கிட்டு உன்னைக் கண்டபடி பேசிறாங்களாமே. அது வேறே அய்யாவுக்கு வருத்தம். பிழைக்க வழி பண்ணிப் பேரைக் கெடுத்து விட்டோமோன்னு! இது எல்லாத்துக்கும் ஒரு நல்ல வழியாகத் தோணுதுன்னாங்க. அய்யா யோசிக்

காமச் சொல்ல மாட்டாங்க. சரின்னு சொல்லு தாயி. எல்லாத்துக்கும் நல்லது'' என்று நீளமாகப் பேசினாள் வள்ளியம்மை.

இது போன்ற விஷயங்களையே கலந்து கொள்வதானால், வள்ளியம்மை புத்திசாலியாகவே இருக்க வேண்டும். நல்லவளாகவும், கூடவே பெரியவருடைய மனைவியிடம் மிகுந்த அன்பும் இருக்கிறது. இருந்தும், இப்படிச் சொல்வதானால்...

ஒரு நோயாளியுடைய 'கம்பானியன்' மாதிரியான வாழ்க்கையில் தப்பொன்றும் இல்லையே!

உண்டு முடிந்த சாரூபாவை வள்ளியம்மை இறக்கி விட்டு விட்டுப் போக, அவள் தாயிடம் ஓடி வந்தாள்.

மறுநாளே, சாந்தலிங்கத்திடம் தன் ஒப்புதலைக் காவேரி தெரிவித்தாள்.

மகளிடம் இது பற்றி விலாவாரியாகக் காவேரி சொன்ன விதம், கண் முன்னே அந்தக் காட்சி நடப்பது போன்ற நிலையைச் சாரூபாவின் மனதில் உருவாக்கியிருந்தது.

தாயின் குறிக்கோளும் அதுவே. எந்தக் காலத்திலும், தப்புத் தவறான... வெறும் சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடிய விதமாகக் கூட, அந்தக் காலக் கட்டத்தில் நடந்த எந்த நிகழ்ச்சியையும் மகளுக்குத் தெளிவு படுத்தாமல் விட்டு விடக் கூடாது என்பதில் அவள் கவனமாக இருந்தாள்.

அந்த வகையில், அன்னைக்கு வெற்றிதான். தாயிடம் ஒரு சிறு தவறைக்கூட சாரூபா இன்று வரை கண்ட தில்லை.

விளக்கம் சொல்லப் பிடிக்காமல் சுதர்மனிடம் இருந்து விலகிப் போன அப்போதும் சரி, எந்த விளக்கமும் கேளா மல், அவன் வெகு கேவலமாகப் பேசும் இப்போதும் சரி, காவேரி செய்தது தவறு என்று ஒரு கணம் கூட அவளுக்குத் தோன்றவில்லை.

விரைவிலேயே சாந்தலிங்கத்துக்கும் காவேரிக்கும் பதிவுத் திருமணம் நடந்தது.

மகளுடன் காவேரி, சாந்தலிங்கத்தின் பெரிய வீட்டுக்கு குடி பெயர்ந்தாள்.

சாரூபா காரில் பள்ளிக்குப் போனாள். பள்ளியி லிருந்து கல்லூரி.

காரில் பயணம் செய்தாலும், மகள் எந்தவித அதிகச் செலவும் செய்யக் காவேரி அனுமதித்ததில்லை. சாரூபாவும் அன்னைக்கு அடங்கியவளாகவே இருந் தாள்.

அடுத்த பதினைந்து ஆண்டுகள் இப்படியே போன பிறகு, சாந்தலிங்கத்தின் உடல்நிலை பற்றி, மருத்துவர் எச்சரித்தார்.

''முதலில் இருந்தே, நீங்களும் அறிந்ததுதானே, லிங்கம்? எப்போதோ, என்னவோ ஆகியிருக்கும். இந்தக் காவேரியின் கவனிப்பால், இத்தனை ஆண்டுகள்

தள்ளிப் போயிருக்கிறது. ஆனாலும், இனி ரொம்ப நீட்டிக்க முடியாது'' என்றார் அவர்.

''எத்தனை நாள்?''

''ஏய் லிங்கம், நாள் கணக்குக்கு எல்லாம் நெருங்க வில்லையம்மா. சில மாதங்கள். பயப்படுகிறவன் இல்லை என்பதால், உண்மையைச் சொன்னேன். ஏதோ உயில் எழுதுகிற அவகாசம் இருக்கும்போதே சொல்லச் சொன்னாயே என்று, நிலைமையைத் தெரிவித்தேன்'' என்றார் வைத்தியர்.

சட்ட நிபுணர் போலவே, இந்த வைத்தியரும் பல காலம் பழகிய நண்பரே.

முன்பே, குணப்படுத்த முடியாத அளவு போய்விட்ட வியாதிதான். இனிச் சில காலமே என்கிற அளவு வியாதி முற்றும்போது, தன்னிடம் உண்மையைத் தெரிவித்து விட வேண்டும் என்ற நிபந்தனையோடுதான், சாந்தலிங்கம் தொடர்ந்து மருந்துண்ண ஒப்புக் கொண்டதே. மற்றபடி, மனைவிக்குப் பிறகு, வாழ்வதில் அவருக்குப் பெரிதாக ஆசை இருந்ததில்லை.

அதுவும் சிலது செய்ய வேண்டும் என்று, பாரிஜாதம் ரொம்பவும் ஆசைப்பட்டு, அவரிடம் சொல்லியும் இருந் தாள். அவள் விரும்பிய விதமாகவே அதைச் செய்வ தாக, சாந்தலிங்கம், மனைவிக்கு வாக்கும் கொடுத்திருந் தார்.

உயில் என்ற வார்த்தையில் நிமிர்ந்து பார்த்த காவேரி, சட்டநாதன் வந்தபோது பேசினாள். ''எங்களுக்கு எதுவும்

வேண்டாம், ஐயா. விரைவிலேயே சாரூபா சம்பாதிக்கத் தொடங்கி விடுவாள் என்பதால் நீங்கள் தர வேண்டிய அவசியமும் கிடையாது.''

''என்ன அசட்டுத்தனமாகப் பேசுகிறாய், காவேரி? என்னைப் பதினைந்து ஆண்டுகள் அதிகப்படியாக வாழ வைத்து, என் மனைவியின் விருப்பத்தை நிறைவேற்றும் வாய்ப்பைத் தந்திருக்கிறாய். அந்த நன்றி எனக்கு வேண்டாமா? உனக்கு எதுவும் தராமல் செத்தேன் என்றால் என் நெஞ்சு வேகவே வேகாது'' என்றார் சாந்தலிங்கம், பிடிவாதமாக.

காவேரியும் தன் நிலையில் பிடிவாதமாகவே இருந்தாள். ''சும்மாவே உங்களைப் பணத்துக்காக நான் மணந்ததாகப் பேச்சு இருக்கிறது. உங்களிடம் எதையும் நான் வாங்கிக் கொண்டால், அதுதான் உண்மை என்று ஆகிவிடும். அதை என்னால் தாங்க முடியாது, ஐயா'' என்றாள் உறுதியோடு.

ஆண்கள் இருவரும் மேலும் வற்புறுத்தியபோது ''ஐயா, பணத்துக்காக நான் உங்களை மணக்கவில்லை என்று நிரூபிப்பதற்கான ஒரே வாய்ப்பு இது. அதைக் கெடுத்து என்னை கேவலமானவள் என்று முத்திரை குத்தாதீர்கள்'' என்று கூறி அவர்கள் வாயை அடைத்தாள்.

சற்றுத் திகைத்துவிட்டு ''என்னம்மா நீ இப்படிப் பேசுகிறாய்? பார், உனக்கு ஓரளவு வயதாகி விட்டது. ஆனால் உன் பெண்? அவள் மனதில் என்னென்ன ஆசைகள் இருக்கிறதோ? அவளது திருமணச் செலவு

இருக்கிறது. உன் பிடிவாதத்துக்காக, அவளைக் கஷ்டப்படுத்துவாயா?'' என்று சட்டநாதன் காவேரியைக் கேட்டார்.

ஆனால் சாருபாவை வரவழைத்து நேரிலே பேசிய போது, மகளும் தாயின் மனதையே எதிரொலித்தாள். ''அங்கிள் நான் விரும்பிய கல்வியைச் சிறப்பாகப் பயிலும் வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தித் தந்திருக் கிறீர்கள். அது கண் தானம் செய்யும் அளவுக்கு உயர்ந்தது, அங்கிள். அதற்கு மேல், எனக்கு எதுவும் வேண்டாம்'' என்றாள் அவள்.

திருமணம் பற்றிய பேச்சை எடுத்தபோது அவள் முகம் கல்லாயிற்று.

நியாயமற்ற வார்த்தைகளைச் சொல்லி, சுதர்மனை அவள் விரட்டி, அப்போது சில மாதங்கள்தானே ஆகி யிருந்தன. தாயிடம் கூடச் சொல்லாமல் சாருபா காத்த ரகசியம்.

இப்போதும் அது பற்றி எதுவும் கூறாமல் ''இந்தப் படிப்பை முடித்துவிட்டு அதிலேயே நிறைய செய்ய வேண்டும் என்று இருக்கிறேன், அங்கிள். அதிலிருந்து நான் கவனத்தை கலையவிட முடியாது, அதனால் கல்யாணம் என்கிற பேச்சுக்கே என் வாழ்வில் இடம் கிடையாது. எனக்கு சொத்து பணம் எதுவும் தேவை யில்லை. இந்தப் படிப்பு முடியும் வரை அதற்கு உரிய பணம் கட்டினால் போதும்! அதற்கு மேல் எதுவும் வேண்டாம்!'' என்று குரலில் அழுத்தத்துடன் கூறி முடித்துவிட்டாள் அவள்.

பெற்றவளின் கதையை எண்ணிச் சூடுபட்ட பூனை போல திருமணமே வேண்டாம் என்கிறாள் பெண் என்று பெரியவர்கள் நினைத்தார்கள்.

காவேரிக்குமே, மகளைத் துன்புறுத்தும் வாய்ப்பை, யாரோ ஒருவனுக்கு ஏன் தருவது என்ற கருத்துதான். மகள் சந்தோஷமாகக் குடும்பம் நடத்தி, பிள்ளைகள் பெற்று, அடுத்த தலைமுறையை உருவாக்கட்டும் என்று எண்ணித் தாயார் செய்த தவறைத் தானும் செய்து விடக் கூடாதே என்று எண்ணினாள்.

உண்மையில் சூடுபட்ட பூனை அவள்தான். ஆனால் எந்த வகையிலும் மகளை எதிலும் வற்புறுத்தவும் அவளுக்குப் பிரியம் கிடையாது. அப்போது சாரூபாவே பெற்றவளின் கருத்தை ஒட்டிப் பேசவும், அவளுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது.

தாயும் மகளும் ஒரே மனமாகச் சொத்து, பணம் எதுவும் வேண்டாம் என்று பிடிவாதமாகச் சொல்லவும், சாந்தலிங்கமும் சட்டநாதனும் யோசித்து, சாரூபாவும் காவேரியும் வாழும் வரை, அந்த வீட்டை சகல வசதி களுடன் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை கொடுத்து உயில் எழுதினார்கள்.

சாந்தலிங்கமும் அதே பிடிவாதத்தோடு, ஏதேனும் எழுதி வைத்திருக்கலாம்தானே. ஆனால், இத்தனை ஆண்டுகளில் காவேரியின் மன உறுதியை, அவர் அறிந்திருந்தார். அவருடைய சட்டப்படியான மனைவி என்கிற நிலையில், பல போகங்களை அவளும் மகளும் அனுபவித்திருக்கலாம். ஆனால் அவள் வகித்த

பதவிக்குக் குறைவாகத் தோன்றாத அளவுக்கு மேல், அவள் எதையும் பயன்படுத்தியது கிடையாது.

இனியும் பயன்படுத்த மாட்டாள் என்று தெளிவாகத் தெரியும்போது, எழுதி வீணாக்குவானேன்? எனவே அந்த வீட்டில் தங்கும் உரிமையைக் கொடுத்து, வீட்டோடு எல்லா வசதிகளும், தாய் மகள் இருவருக்கும் தொடர்ந்து கிடைக்குமாறு ஏற்பாடு செய்தார்.

மற்றபடி இந்தப் பதினைந்து ஆண்டுகளாக வளர்த்த தொழிலின் நிர்வாகத்தை, நண்பர் சட்டநாதன் பங்குதாரராக இருக்கும் சட்ட ஆலோசக நிறுவனத்திடம் ஒப்படைத்தார். தொழிலை நடத்தி, அதற்குக் கட்டணமாகக் கணிசமான ஒரு தொகையை எடுத்துக் கொண்டு, லாபத்தை ஒரு தொண்டு நிறுவனத்திடம் கொடுக்க வேண்டும்.

அவருடைய மனைவி பாரிஜாதம் நடத்தவிரும்பியது, அந்தத் தொண்டு நிறுவனத்தைத்தான். இரு பிரிவாக கைவிடப்பட்ட குழந்தைகளையும், மிகவும் வயதான ஆதரவற்ற பெரியவர்களையும் பராமரிக்கும் 'பாரி' இல்லம். பிள்ளைகளை நன்கு வளர்த்துப் படிக்க வைத்து வாழ வழி செய்து கொடுத்தார்கள். பெரியவர்களுக்கு உடல் நலம் பேணியதோடு, மனதிற்கும் ஆறுதல் கிடைக்கச் செய்தார்கள்.

பாரிஜாதம் விரும்பிய விதமான இந்தப் பணியைச் செய்வதற்குச் செலவு அதிகமாகத்தான் ஆயிற்று. ஆனால், நல்ல லாபம் கிடைக்கிற அளவு தொழிலை வளர்த்து விட்டதால், செலவு ஒரு பொருட்டாக இருக்கவில்லை.

சட்ட ஆலோசக நிறுவனம், சட்டநாதனின் தலைமையில் இயங்குவது.

காவேரியோடான நண்பரின் இந்தத் திருமணம், குடும்பம் பற்றிய விவரம், கடைசி உயில் பற்றி எல்லாமே சட்டநாதனுக்கு நன்கு தெரியும் என்பதால், பெரியவர் இறந்த பிறகும், அந்த வீடு வழக்கம் போல இயங்குவதில் தடை எதுவும் நேரவில்லை.

ஆனால், காவேரியின் மறைவுதான் சற்றும் எதிர் பாராத இடியாக இருந்தது. மாடியில் இருந்து கால் தடுமாறிக் கீழே விழுந்து அடிபட்டு உள் காயத்தால் ஒரே நாளில் மறைந்து போனாள்.

அப்போதும் நிர்வாகம் சட்டநாதனிடமே இருந்ததால், இழப்பின் வருத்தம் தவிர, அன்றாட வாழ்க்கை முறையில் எந்தவித மாற்றத்தையும் சாரூபா உணர வில்லை.

அந்தப் பிரச்னை எழுந்திருப்பது இப்போதுதான்.

இப்போதும், இந்தக் கண்காட்சி முடிந்து விட்டால் எதிர்காலம் பற்றிய ஒரு நல்ல தெளிவு வந்துவிடும். அதற்காக முழு மனதாகச் சாரூபா முயன்று கொண்டிருக்கும் இந்த நேரத்திலா, அவளுக்குத் தொல்லை கொடுப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும் சுதர்மனிடமா, நிர்வாகம் போக வேண்டும்?

சுதர்மனிடம் இருந்து மனதைத் திருப்பி, மறுபடியும் வேலையில் ஈடுபட முயன்றால், மனம் வேலையில் நிலைக்க மறுத்து அலைபாய்ந்தது.

சலிப்புடன் வேலையை நிறுத்தினாள்.

சோர்ந்துகொண்டே போன மனது, சும்மா இருக்கவும் முடியாமல் பரபரவென்று வந்தது. என்ன செய்வது?


ஏற்கனவே வேளை தாண்டிவிட்ட 'மதிய' உணவைச் சாப்பிட்டு முடிக்கலாமோ?

வாரம் ஒரு நாள், சமைத்து வைத்துவிட்டு, கூடுவாஞ்சேரியில் இருக்கும் மகள் வீட்டுக்குப் போய் இருந்துவிட்டு, மாலையில் திரும்பி வருவது வள்ளியம் மையின் வழக்கம். அன்று, அப்படி ஒரு நாள்.

வள்ளியம்மை சமைத்து வைத்ததை மைக்ரோ அவனில் சூடு பண்ணிக் கொண்டிருக்கும்போதே, ஏதோ உணர்வு தோன்றவும் திரும்பிப் பார்த்தால் சுதர்மன்!

மெய்யாகவே அவன்தான். கதவு நிலையில் அலட் சியமாகச் சாய்ந்து நின்று, அவளைப் பார்த்துக் கொண் டிருந்தான்.

# 4



சுதர்மனையே அடிக்கடி நினைப்பதால் அவன் நிற்பது போலத் தோன்றுகிறதோ என்று ஒரு கணம்

நினைத்து விட்டுச் சாரூபா தன்னையே திருத்திக் கொண்டாள்.

இது அவனேதான். என்னவோ உரிமை உள்ள இடத்தில் நிற்பவன் போலச் சற்றுத் திமிரான போஸ் வேறு!

வாயில் காவலன், அவனைத் தடுக்கவும் இல்லை. மீறி வந்திருந்தால், அவளுக்குத் தெரிவிக்கவும் இல்லை!

திறந்த வீட்டில் என்னவோ போல வந்ததாகச் சொல்லலாம். ஆனால் அவன், அதை எதிர்பார்த்தே இருப்பது போலத் தோன்றவும், தொண்டை வரை வந்த வார்த்தைகளை நிறுத்திக் கொண்டாள்.

எதிர்பார்ப்பவன், அதற்குரிய பதிலையும் வைத்திருப் பான்தானே?

எனவே கேள்வியை மாற்றி ''எப்படி வந்தீர்கள், வெளிவாசலில் வாட்ச்மேன் இல்லையா?'' என்று வினவினாள்.

''என் நிர்வாகத்தில் உள்ள அலுவலகத்திலிருந்து சம்பளம் வாங்குகிற பணியாள். என்னைத் தடுப் பானா? நானே போய்க் கொள்ளுகிறேன். நீ காவல் வேலையை மட்டும் பார் என்று சொல்லிவிட்டு வந்தேன்.''

அவள் தனியே இருப்பது தெரிந்தே வந்திருக்கிறான். இவன் வருவதைப் பார்த்தவர்கள் என்ன எண்ணக் கூடும்? ஆனால் அது பற்றி சுதர்மனுக்கு கவலை... கவலை என்ன, அக்கறையே கிடையாது! தப்பாக

நினைத்தால், நினைக்கட்டுமே என்ற உதாசீனம்தான். இன்னும் அது ஒரு போனசாக சந்தோஷமாகக் கூட இருக்கலாம்.

அவளது வெறித்த பார்வையில், சுதர்மன் சுற்றிப் பார்க்கிறவன் போலத் தலையைத் திருப்பி, சாய்ந்த நிலை மாறி நின்றான். ''இந்த வீட்டில் நீ வசிக்கலாம்தான். ஆனால் அலுவலகத்துச் சொத்து எப்படி, எந்த நிலையில் இருக்கிறது என்று தெரிந்து கொள்வது, என் கடமை. அதுதான் பார்த்துப் போக வந்தேன்'' என்றான்.

இப்படி வருவதற்கு, எனக்குக் காரணம், உரிமை எல்லாமே இருக்கிறது பெண்ணே என்று, அவளுக்குத் தெளிவுபடுத்துகிறானாம்.

என்னவோ செய் என்கிற பாவனையில் லேசாகத் தோளைக் குலுக்கிவிட்டு, சூடாகிவிட்ட உணவை எடுத்து மேஜை மேல் வைத்துக் கொண்டு சாரூபா சாப்பிட உட்கார்ந்தாள்.

''இப்போதா சாப்பிடப் போகிறாய்? என்ன சாப்பாடு? ஆனால் வீட்டுக்கு வந்தவனைப் பார்க்க வைத்துக் கொண்டு தனியாகச் சாப்பிடப் போகிறாயே. உலகப் பிரசித்தம் வாய்ந்த தமிழ்நாட்டு விருந்தோம்பல் மறந்து விட்டதா? அல்லது அதுபோன்ற நல்ல விஷயங்கள் எல்லாம் உனக்குத் தெரியவே தெரியாதோ?''

என்னவோ அவள் வருந்தி வருந்தி அழைத்து வந்து, செய்ய வேண்டிய கடமை தவறி விட்டது போல, எப்படிப் பாவலாக் காட்டுகிறான்!

ஆனால், பேச்சு அவனுக்கு மட்டும் உரியது இல் லையே!

''விருந்துக்கு அழைத்து வந்திருந்தால், விருந்தோம்ப வேண்டியதுதான். ஆனால் ஒருவர் கருத்தோடு கட மையைச் செய்ய வந்திருக்கும்போது, அவருக்கு இடை யூறு செய்யக் கூடாது அல்லவா?'' என்றாள் புரியாத வர்களுக்கு எடுத்துச் சொல்லும் குரலில், ''அத்தோடு இது உண்ணும் நேரமும் அல்ல.''

விளக்கம் போதுமாப்பா என்று அவள் ஏளனமாக மனதுள் எண்ணும்போதே ''ரொம்பச் சரியாகச் சொன் னாய்!'' என்று மெச்சினான் சுதர்மன்.

அவள் யோசனையோடு பார்க்கவும், ''நீ கூறியது சரிதான். இது உண்ணும் நேரம் இல்லைதான். தெரிந்தும், இவ்வளவு தாமதமாக நீ ஏன் இப்போது சாப்பிடுகிறாய்?'' என்று அக்கறையோடு விசாரித்தான்.

முதலில் சொன்னது ஒன்றும் காதில் விழவில்லை. கடைசி ஒரு வரியைப் பிடித்துக் கொண்டு வளவளக் கிறான்!

ஆனால் சாருபாவுக்குப் பேச்சை வளர்க்கப் பிடிக்க வில்லை. எனவே ''வேலை இருந்தது'' என்றாள் சுருக்க மாக.

இவன் இங்கிருந்து போனால் சற்று நிம்மதியாகச் சாப்பிடலாமே என்றிருந்தது அவளுக்கு.

ஆனால், ஒரு நாற்காலியில் உட்கார்ந்து ''என்ன வேலை?'' என்று விவரம் கேட்டான் சுதர்மன்.

''எனக்கு எத்தனையோ வேலைகள். அதெல்லாம் உங்களுக்கு ரசிக்காது'' என்றாள் அவள் மரத்த குரலில்.

கால் மேல் கால் போட்டு வசதியாக அமர்ந்து ''அதை நானல்லவோ சொல்ல வேண்டும்'' என்று கேட்டான் அவன். ''மேலும் என் ரசனை பற்றி உனக்கு என்ன தெரியும்?''

தெரியும்! நன்றாகவேத் தெரியும். அவன் காதல், கல்யாணம் என்று தொடங்குமுன் நட்போடு பழகிய அந்த முதல் நாட்களில் இருவருமாகச் சேர்ந்து, சின்ன சின்ன பஞ்சுத் துண்டுகளைப் பறக்க விட்டது போல நீல வானத்தில் உடலை மறைத்துக் கொண்டு வரிக் குயில் கூவும் ஒலியை... இடியோசையைக் கூட மிருதங்கம் வாசிப்பது போலக் கேட்கிறது என்பானே! எல்லாவற் றையும் இருவரும் எப்படி ரசித்திருக்கிறார்கள்!

எதிலும் அழகையும், இனிமையையும் காணும் ரசிக உள்ளம் சுதர்மனுடையது!

அவனுக்கும் நினைவு வந்ததோ?

சட்டென முகம் கடுக்க ''ஏதோ ஒரு சமயத்தில், நல்லது கெட்டது தெரியாமல், குப்பைத் தொட்டிக்குச் செல்ல வேண்டியதில் கூட அழகைக் கண்டு ரசித்திருக்கிறோம். என்ன முட்டாள்தனம்! மூளை சரியாக வளர்ந்திராத வயதாயிருக்கும்'' என்றான் அவன்.

சுதர்மன் மேல் படிப்பை முடிக்கிற சமயம், அப்போது மூளை வளர்ந்திருக்கவில்லையாமா? அவனுக்கே

அப்படி என்றால், அவனை விடவும் ஐந்து வயது சின்னவளான அவள், தனக்காக எவ்வளவு சமாதானம் சொல்லலாம்!

ஆனால் இந்த வார்த்தைப் போராட்டத்தில் தன் நெஞ்சுதான் அதிகமாகக் குத்திக் கிழிபட்டது போலச் சாரூபா உணர்ந்தாள்.

எனவே பேச்சை முடிக்க விரும்பி ''ரொம்பச் சரி யாகத்தான் சொன்னீர்கள் சுதர்மன். கல்லில் பொறிக் கப்பட வேண்டிய வார்த்தைகள். ஆனால் இப்போதைக்கு அது சாத்தியம் இல்லை என்பதால், நீங்கள் உங்கள் வேலையைப் பார்க்கப் போகலாம்! வீடு தோட்டம் என்று பார்வையிட நிறைய இருக்கின்றன. போய்ப் பாருங்கள்!'' என்றாள், முயன்று வருவித்த இயல்பான குரலில்.

அவன் சற்றும் அசைந்தானில்லை. ''உண்டு முடித்து விட்டு நீயே எனக்கு இந்த வீட்டைச் சுற்றிக் காட்ட லாமே!'' என்று சாப்பாட்டு மேஜைமேல் விரல்களால் தாளம் போட்டபடி இலகுவாகக் கூறினான்.

எல்லாம் நடிப்பு! இந்த இலகுத் தோற்றம் எல்லாம் பொய்! அவளையே வீட்டைச் சுற்றிக் காட்டச் சொல்வதே, அந்தச் சமயத்தில் இன்னும் எப்படியெப் படியோ அவள் மனதைக் காயப்படுத்தும் வாய்ப்புக் காகத்தான்!

''நீங்களே பார்க்கலாமே! உங்கள் நிர்வாகத்தில் உள்ள அலுவலகத்தின் சொத்து, அதை ஆராய்ந்து பார்க்கும்

உரிமை இருக்கிறதுதானே?'' என்று அவளும் அசை யாமலே இருந்தபடி பதில் சொன்னாள்.

''செய்யலாம்... அப்புறம், அதை ஆனால், அப்புறமாக அதைக் காணோம், இதைக் காணோம் என்று நீ ஏதாவது சொல்லக் கூடாதே. எப்போதோ, எங்கேயோ தொலைந்தவைகளின் பழிகூட என் தலை மேல் விழக்கூடுமே!'' என்றான் அவன் அஞ்சியவன் போல.

''நீங்கள் திருட மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதனால்...'' என்று சாரூபா சொல்லி முடிக்கும் முன்பாகவே ஓங்கி அடித்தான் சுதர்மன்.

''ஆனால் நீ பொய்க் குற்றம் சுமத்த மாட்டாய் என்று உறுதி எனக்கு இல்லையே! நேர் மாறாகத்தானே, எனக்கு அனுபவம்?''

காருக்காக சுற்றினாய் என்றதைக் குறிப்பிடுகிறான்! பொய்யான குற்றச்சாட்டுதான். இல்லையென்று மறுக்க முடியாது.

ஆனால், அன்று எதற்காக அப்படிச் சொன்னாள் என்று எடுத்துச் சொன்னால், இன்றைய நிலையில் இன்னமும் ஏளனமாகத் தோன்றுமே!

வள்ளியம்மையின் சுவை மிக்க தயாரிப்பு, உப்பு சப்பற்று, விழுங்க முடியாமல் தொண்டைக்குள் சிக் கியது. இதற்கு மேல் சாப்பிட முடியாது என்று தோன் றவும், மீதமானதை எடுத்து மூடி வைத்தாள்.

அதுவும் சுதர்மனின் கவனத்தில் சிக்க "ஏன் இவ்வளவு கொஞ்சமாகச் சாப்பிடுகிறாய், நான் தான் காத்திருப் பதாகச் சொன்னேனே" என்று கடுப்பாகக் கேட்டான். கேட்கும்போதே சட்டென கையை நீட்டி பாத்திரத்தைத் திறந்து, ஒரு கரண்டி எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்.

அவள் திகைப்புடன் நோக்கும்போதே, சுவைத்து விழுங்கிவிட்டு, "நன்றாகத்தானே இருக்கிறது! ஏன் சரியாகச் சாப்பிடவில்லை?" என்று மறுபடியும் வின வினான்.

அவள் சாப்பிட்டாலோ, சாப்பிடாவிட்டாலோ, அவனுக்கு என்ன வந்தது? நச்சு நச்சென்று கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டு... இப்போது இவனுக்கு என்ன பதிலைச் சொல்வது?

உன் அருகாமை என்னைப் பாதிக்கிறது என்று உண்மையைச் சொன்னால் அவ்வளவுதான் அவனுக்குத் திருவிழாக் கொண்டாட்டம் ஆகிவிடும்.

அவசரமாக யோசித்து "வே வேலை செய்து கொண்டே இருந்ததில், ரொம்பவும் உணவு வேளை தாண்டி விட்டதால் பசி அடங்கிப் போயிற்று போல! சாப்பிடப் பிடிக்கவில்லை" என்று வாயில் வந்த பதிலைச் சொன்னாள் அவள்.

ஆனால் "அவ்வளவு தூரம் உணவு வேளையை ஏன் தாண்டவிட்டாய்? அப்படி என்ன பெரிய வேலை?" என்று சுதர்மன் மீண்டும் கேள்விக் கணைகளைத்

தொடுக்கவும், தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது சாரூபாவுக்கு.

கண்காட்சிக்காக ஓவியம் தீட்டியதில் நேரமானதைக் கவனிக்கவில்லை என்பதில் தொடங்கி, அது என்ன கண்காட்சி, எவ்வளவு முக்கியமானது என்பதெல்லாம், வீட்டைச் சுற்றிப் பார்த்தபடியே கேட்டு விவரம் அறிந்து கொண்டான் அவன்.

வீட்டில் ஹாலில் மற்றும் பொருத்தமான இடங்களில் அங்கங்கே மாட்டி வைத்திருந்த பல சித்திரங்களைப் பார்த்தான்.

''எனக்கு சித்திரங்கள் பற்றி ஆழமாகத் தெரியாது. ஆனால் இந்த பழைய ஓவியங்கள் எல்லாம் பல லட்சம் பெறுமானவை போலத் தெரிகிறதே!'' என்றான்.

சுதர்மன் பார்த்துக் கொண்டிருந்த சித்திரத்தைப் பார்த்த சாரூபா சிரிப்பை அடக்கிக் கொண்டாள். ஏனெனில் அது அவளே வரைந்தது. கொஞ்சம் பழங்காலத் தன்மை தோன்றும்படியாக, ஆடை அணிகலன்கள், சுற்று வட்டாரம் எல்லாம் அமைத்திருந்தாள். இவன் அந்தக் காலத்துப் பழைய ஓவியம் என்றே எண்ணி விட்டானே!

ஏதோ வகையில் அவனை விட ஒரு படிமேல் என்கிற பெருமிதம் உண்டாயிற்று.

ஆனால், அந்தப் பெருமிதத்தின் ஆயுள் கம்மியாக, அவளது படம் வரையும் ஸ்டுடியோவுக்குள் போய், அங்கே முற்றுப் பெறாத நிலையில் இருந்த

சிலவற்றைப் பார்த்ததுமே சுதர்மன் உண்மையைக் கண்டுபிடித்து விட்டான்.

"அப்படியானால் அங்கங்கே மாட்டி வைத்திருக்கும் சித்திரங்களில் உன் படைப்புகளும் இருக்கின்றன! சித்திரமும் கைப்பழக்கம்' என்பார்கள். ஆனால் புதிய படைப்பு என்று தோன்றாத அளவுக்கு சிறப்பாக இருந்தன. அந்தந்த இடங்களில் இருப்பது போலவே நினைக்கத் தோன்றுகிறது! கெட்டிக்காரிதான்!" என்று அவன் பாராட்டியபோது கண்டுகொண்டானே என்று இருந்தபோதும், மகிழ்ச்சியாகவும் உணர்ந்தாள் அவள்.

ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு "ஆனால் இதில் நீ ரொம்பத் திறமைசாலி என்று எனக்கு முன்பே தெரியுமே!" என்று அவன் தொடர்ந்து கூறியபோது அவளுக்குத் திகைப்பாக இருந்தது.

முன்பே என்றால், அப்போது அவள் ஒன்றும் வரைந்தது இல்லையே!

அவள் கேட்காமலே அவன் விளக்கினான் "அதுதான் சாரூபா, நீ விரும்புவது போல, அடுத்தவர்களை நினைக்க வைப்பதில்லை!"

அதாவது அவனை நினைக்க வைத்ததில் என்கிறான்.

முதலில் அன்பு காட்ட வைத்ததில், அப்புறம் அவளிடம் இருந்து ஓட வைத்ததில்.

இன்றைய அவனது அபிப்பிராயம், அன்று அவனை விட்டு அவள் ஒதுங்க முயன்றது சரியே என்று நிரூபித்தது.

ஆனால், சரியானதே என்பதால் மட்டும், அவனது பிரிவு சந்தோஷமாகவா இருந்தது, இல்லையே! அதுவும் அவனது எதிர்காலத்தையே கெடுத்து விட்டோமோ என்று எவ்வளவு வருத்தப்பட்டாள்.

அன்றும் தவிப்புதான். இன்றும் வேதனைதான்.

இதற்கு மேல் வலி தாங்காது என்று தோன்றவும் ''வீட்டில் இதற்கு மேல் பெரிதாகப் பார்ப்பதற்கு ஒன்றும் இல்லை. தோட்டம் இருக்கிறது. ஆனால் சில நாட்களாக பராமரிப்பதற்கு ஆள் இல்லாததால், வழக்கமான சுத்தத்தோடு இராது. பூச்சி பொட்டுகூட ஏதாவது இருக் கலாம். அதனால் உங்கள் நலத்துக்காகவுமே, வேண் டாம் என்று நினைக்கிறேன்'' என்றாள் உணர்ச்சியற்ற குரலில்.

''என்ன குத்தலா? மூன்று நாட்கள் கிட்டன் இல்லாததால் இங்கே தோட்டத்தில் பாம்பும் பூரானும் நெளிகிறதாக்கும்?'' என்றான் அவன் ஆத்திரமாக.

''உண்மை நிலையைச் சொன்னால், அதைக் குத்தலாக எடுத்துக் கொள்வானேன்? சுத்தம் செய்ய ஆளில்லை. சருகுகள் சேர்ந்தால் நீங்கள் சொன்ன பாம்பு பூரான் வரத்தான் செய்யும். அது இயற்கை. நீங்கள் எப்படி எடுத்துக் கொண்டாலும் நான் சொன்னது, இப்படி சாதாரணமாகத்தான். அப்புறம் இங்கே உள்ள அடுப்பு, ஏசி, சோபா செட் எல்லாமே அங்கிளுடைய தொழில் பணத்தில் வாங்கியதாகத்தான் இருக்கும். அதனால் அவைகளை எடுத்துப் போவதானால் சற்று முன்னதாகச் சொல்லிவிட்டுச் செய்யுங்கள். மாற்று ஏற்பாடு என்ன

செய்வது என்று பார்க்க அவகாசம் வேண்டும்'' என்றாள் அவள் அதே குரலிலேயே.

ஓரிரு கணங்கள் சுதர்மன் எதுவும் பேசவில்லை.

பிறகு ''இந்த வீட்டில் எதை வேண்டுமானாலும் நீ பயன்படுத்திக் கொள்ளலாம் என்று உயிலில் எழுதி யிருக்கிறது. அத்தோடு அடுப்பு, சோபாவையெல்லாம் தூக்கிச் செல்ல நான் ஒன்றும் ஈட்டிக்காரன் அல்ல, உனக்கு நான் வட்டிக்குப் பணம் கொடுத்தவனும் இல்லை'' என்று வார்த்தைகளைத் துப்பியவன், அதற்கு மேல் நின்று பேசாமல் கிளம்பிப் போய் விட்டான்.

கால்கள் வெடவெடக்க, அப்படியே தரையில் அமர்ந்தாள் சாரூபா.

இவனோடு எத்தனை நாட்கள் இப்படிப் போராட முடியும்?

ஊகூம். இந்த மாதிரி துவந்த யுத்தம் செய்ய அவளால் முடியாது.

இந்தக் கண்காட்சி முடிந்ததும் ஏதோ ஒன்று தெரிந்து விடும். எதுவானாலும், அதற்கு ஏற்ற வாழ்வு என்று, இங்கிருந்து போய்விட வேண்டும்!

சுதர்மன் முன் உடைந்து விடாமல், தன்மானத்தை யாவது காக்க வேண்டுமே!

அன்றைய பேச்சின் விளைவாக, மறுநாள் தோட்டக் காரக் கிட்டன் ''அம்மா...'' என்று அழைத்தபடி வந்து நின்றான்.

ஆச்சரியமாகப் பார்த்தவளிடம் ''இது ஆபீசு வீடா மேம்மா? அதனாலே சுத்தமாக வச்சிருக்கணுமாம்.

அதனாலே வாரத்துக்கு மூணு நாள் இங்கேயும், மூணு நாள் ஆபீசிலேயும் வேலை செய்யணுமாம். ஞாயித்துக் கிழமை லீவு நாளாம். அந்தப் புது ஐயா சொன் னாரும்மா!'' என்றான் சந்தோசமாக.

வள்ளியம்மை கொண்டு வந்து கொடுத்த காபியைக் குடித்துவிட்டு தோட்டத்தைச் சுத்தம் செய்யப் பார்க்கப் போனவனைப் பார்க்கையில் சாரூபாவுக்கு சற்று நிம்மதியாகத்தான் இருந்தது.

ஆறுதலாகவும் கூட!

ஆனால் எல்லாமே சீக்கிரமாக மறைந்தும் போயின.

கிட்டனுக்கு சாப்பாடு போட்டுவிட்டு, அவனுட னேயே தானும் அமர்ந்து உண்டு விட்டு வந்த வள்ளி யம்மை, சாரூபாவிடம் வேறு கதை சொன்னாள்.

சுதர்மன் திருமணம் செய்யப் போகிறான் என்றாள்.

தன்னை மீறி, சாரூபாவின் உடல் அதிர்ந்து குலுங்கி விட்டது.

வள்ளியம்மை சொன்ன மொழி அறியாதவள் போலப் பேந்த விழித்தாள். சின்னவளின் திகைப்பைப் பார்த்து, வள்ளியம்மை என்ன எண்ணினாளோ?

''ஆமாம். அது நெஜம்தானாம் கண்ணு. நம்ம கிட்டனை இங்கே அனுப்புகிறபோது அந்தப் பொண் ணும் கூடவே வந்து பேசிக்கிட்டு இருந்தாளாம். ஒரு தரம், இந்த வீட்டை வந்து பார்க்கணுமின்னு கூடச் சொன்னாளாம். வீட்டையும் முக்கியமா உன்னையும்!''

''என்னையா?'' என்று கேட்கும்போதே, சாரூபாவுக்கு உள்ளூர எரிச்சல் மூண்டது.

சுதர்மன் அங்கே வந்ததையாவது, அவன் அந்த நிறுவனத்தில் வகிக்கும் பதவிக்காக என்று சொல்லலாம். இவளுக்கு இங்கே என்ன வேலை?

''எதற்காகவாம்?'' என்றாள் ஒரு மாதிரிக் குரலில்.

இதற்கான பதிலையும் கிட்டன் வள்ளியம்மையிடம் ஒப்பித்திருப்பான் போல!

''இவ்ளோப் பெரிய வீட்டிலே, நீ ஒண்டியாக எப்படி இருக்கிறேன்னு பார்க்கணுமாம்'' என்ற வள்ளியம்மையின் குரலிலும் வெறுப்பு தெரிந்தது. ''நான் ஒருத்தி, அந்த வாட்சுமேன் நாங்களெல்லாம் அந்தம்மாளுக்கு மனிசாளாத் தெரியலை போல! நீ தனியா இருக்கிறதை நே...ரிலே' பார்க்கணுமாம். வரட்டும் வந்து, என் மூஞ்சியைப் பார்த்திட்டு 'தனீயா' இல்லைன்னு தெரிஞ்சுக்கிட்டுப் போகட்டும்! உங்கம்மா செய்த நல்லதுக்கு, உன்னைத் தனியா விட்டுட்டு நான் போயிடுவேனா? நான் மனுசச் சன்மமில்லை?'' என்று கொதித்தாள்.

வள்ளியம்மையுடைய மகளுக்குத் திருமணத்தின் போது, வாழ்க்கை வசதிகள் என்று காவேரி பல உதவிகள் செய்ததுண்டு. ஒரு கட்டத்தில் புகுந்த வீட்டிலிருந்து, மகளை விரட்டவே செய்தார்களாம். காவேரிதான், பெண் போலீசைக் கூட்டிப் போய் மிரட்டி, பெண்ணை நல்ல விதமாக வாழ வைத்துவிட்டு வந்ததாக, வள்ளி

யம்மை சாரூபாவிடம் சொல்லியிருக்கிறாள். அதன் பிறகு பிரச்சினை செய்யப் பயந்து, வள்ளியம்மை யுடைய சம்பந்திகள் ஊருக்கே போய்ச் சேர்ந்து விட்டார்களாம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக மகளின் வாழ்வு இன்று வரை நல்லபடியாக நடக்கிற தாம்.

அவ்வளவு செய்தவளுடைய மகளை, நன்றி கெட்டுத் தனியே விட்டு விட்டுப் போவாள் என்று, தன்னை எப்படி நினைக்கலாம் என்ற ஆத்திரம் அவளுக்கு.

அந்தப் பெண் அங்கே வருவது, ஒத்த மனமாய் அங்கே வசித்த இரு பெண்களுக்குமே பிடிக்கவில்லை என்றாலும், சாரூபாவின் பிரச்சினை வேறாக இருந்தது.

அதைப் பற்றி யாரிடம் சொல்லவும் அவளுக்கு மனமில்லை. நினைக்கவோ அடியோடு வெறுப்பாக இருந்தது!

மூளையே இல்லாத மாதிரி, என்ன இப்படி தனக் குள்ளேயே அவள் எரிச்சல் பட்டுக் கொண்டிருக்கும் போது, ''ஆனால் எனக்கு இதுதாம்மா புரியவே இல்லை'' என்றாள் வள்ளியம்மையும்.

சற்றுத் திகைத்து ''எது வள்ளியம்மை?'' என்று மெதுவே விசாரித்தாள் சின்னவள்.

''அந்தப் பெண்ணு'' என்று பெரியவள் தொடங்கவும் 'கடவுளே' என்றிருந்தது, சாரூபாவுக்கு ''எந்தப் பொண்ணு?'' என்று மரத்த குரலில் வினவினாள்.

''அதாம்மா, அந்த அய்யாவைக் கட்டிக்கப் போகிற பொண்ணு! அது, அந்தய்யாவுக்குப் பாட்டனார் பொண்ணாம். பாட்டனார் பொண்ணுன்னா, கலியாணம் கட்டுகிற முறை எப்படிம்மா சரியா வரும்?'' என்று கலக்கத்துடன் விசாரித்தாள்.

குழப்பத்துடன் ''பா...ட்டனாரா...'' என்று சொல்லிப் பார்த்த சாருபாவுக்குத் தன்னை மீறி சிரிப்பு பீறிட்டது.

சிரிப்பினால் வழிந்த கண்ணீரைத் துடைத்தபடி ''அது 'பாட்டனார்' இல்லை வள்ளியம்மை! பார்ட்னர்! அதாவது பங்குதாரர்! ஓஹோ! இப்போதுதான் விஷயம் புரிகிறது! சட்டநாதன் அங்கிளின் நிறுவனத்தில் மூன்று பங்குதாரர்கள் உண்டு. அவர்களில் ஒருவருடைய வாரிசு என்பதோடு, இன்னொரு பங்குதாரருடைய மகளையும் மணக்க இருப்பதால், இனி அந்த நிறுவனத்திலும் சுதர்மன் சர்வாதிகாரிதான்! வக்கீல் அங்கிள் வேறு, ஓய்வெடுக்கப் போய்விட்டதால், பிரச்சினையே இல்லாமல், இந்தப் பதவியும் கைக்குக் கிடைத்திருக்கிறது'' என்று விளக்கினாள்.

சொல்லும்போதே அவளது மனது நொந்தது.

இப்படி, இந்த சுதர்மன் கையில் அதிகாரம் போகும் என்று முன்பே தெரியாமல் போயிற்றே! தெரிந்திருந்தால், எதிர்காலம் பற்றிய திட்டமிடலை அதற்கான அடிப்படை வேலைகளைச் சற்று சீக்கிரமாகச் செய்திருக்கலாம்.

என்னென்னவோ யோசனையில் தாயின் படத்தைப் பார்த்தபடி, சும்மாச் சோர்ந்து கிடந்து நேரம் போக்கியது, இப்போது வேதனையோடு நினைவு வந்தது.

காலம் பொன்னானது என்ற கருத்து, எப்போதுமே மனதில் பதிந்திருக்க வேண்டாமா? இப்படிக் கடைசி நேரத்தில் ஓடு ஓடு என்று ஓட நேர்ந்திராதே!

பரவாயில்லை. எப்படியும் முடித்துவிடலாம். இந்தக் கண்காட்சியும் எதிர்காலம் பற்றிய ஒரு தெளிவைத் தந்துவிடும். அப்புறம், சுதர்மனை விட்டு எவ்வளவு தூரத்தில் இருக்கப் போகிறாள் என்று யாருக்குத் தெரியும்?

ஆனால் அதெல்லாம், இனி சற்றும் சோம்பி இராமல் வேலையில் மும்முரமாக ஈடுபட்டால்தான் நடக்கும் என்று உணர்ந்து, சாரூபா முழு மூச்சாகப் பாடுபட்டாள்.

இடையில் ஒரு நாள் சுதர்மன் 'பார்லர்' அலங்காரத்துடன் கூடிய ஒரு பெண்ணுடன் வந்தபோது, ஒரு 'வணக்கத்'துடன் ''வேலை இருக்கிறது'' என்று சொல்லி அவளது ஸ்டூடியோ அறைக்குள் சென்றுவிட்டாள்.

வேண்டுமென்றே கீச்சுக் குரலில் உரக்கச் சொன்ன ''மரியாதை தெரியாத முசுடாய் இருக்கிறாளே!''வைக் காதில் விழுந்ததாகவே அவள் காட்டிக் கொள்ளவில்லை.

முனைந்து செய்தால், எந்த வேலையும் முடிந்துதானே தீரும்?

கண்காட்சி தொடங்குவதற்கு முந்திய நாள், அவளது பல விதமான பதினைந்து சித்திரங்களும், அவள் விரும்பிய விதமாகச் சட்டமிடப்பட்டு, சிறு உராய்வு

கூட நேர்ந்துவிடாதபடி உரிய வகையில் பாக் செய்து, ஹாலில் அடுக்கி வைக்கப்பட்டு விட்டன.

அவளது ஓவியங்களைப் பற்றிச் சொல்ல வேண்டிய விளக்கங்கள் எல்லாம் ஏற்ற குறிப்புகளுடன் வரிசைப் படுத்தப்பட்டுத் தயாராக இருந்தன.

மறுநாள் காலையில், கண்காட்சி நடக்க இருக்கும் ஹால் கைக்கு வந்ததும், படங்களை அடுக்கி, ஒலி ஒளி ஏற்பாடுகள் பக்காவாகப் பழுதின்றி இருக்கின்றனவா என்று ஒரு முறை சரி பார்த்துவிட்டால், அவர்கள் தரப்பு வேலை முடிந்தது.

மற்ற எல்லாம் மாலையில் வரும் விருந்தாளிகள், பார்வையாளர்களின் கையில் முக்கியமான சிலர் சாவ தானமாகச் சுற்றிப் பார்ப்பதற்காக, மதியமே வருவ தாகவும் சொல்லியிருந்தனர். அதனால் பன்னிரண்டு மணிக்கே எல்லோரும் தயாராக இருக்க வேண்டும் என்று முடிவு செய்திருந்தனர். படங்களை அடுக்கி விட்டு, முகம் கழுவி வர, அவகாசம் சரியாக இருக்கும்!

பொழுது விடிவதற்காகப் பரபரப்புடன் காத்திருந்து, அன்றாடக் கடன்களை முடித்து, ''ஹால் கிடைத்து விட்டது'' என்று ஹால் அருகே வசிக்கும் ஒரு தோழி சொல்லவும், காரில் சித்திரங்களை எடுத்து வைப்ப தற்காகச் சாரூபா வாயிலுக்கு விரைந்தாள்.


சித்திரங்களை கவனத்துடன் காரில் ஏற்றினாள்.

ஆனால் அவளால் செய்ய முடிந்தது அவ்வளவு தான்.

அதற்கு மேல் ஒரு மீட்டர் தூரம் கூட முன்னே செல்ல முடியாமல், அவள் தலையில் பெரிதாக ஒரு கல்லைப் போட்டு அவளது கனவுகள் அத்தனைக்கும் சுதர்மன் பெரிதாக ஒரு சமாதி கட்டினான்.

அவனது வாய் மொழியாகவே சொல்வதென்றால் தான் எவ்வளவு மோசமான எதிரி என்று அவளுக்குத் தெளிவாகப் புரிய வைத்தான்!

# 5



**வா**யில்காவலனின் உதவியோடு, எல்லாப் படங்களையும் காரில் அடுக்கியவரை... எதுவும் நேரவில்லை. அப்புறமும் காரில் ஏறி, மெல்ல ஓட்டிச் சென்று, சுற்று மதில் சுவரை அடைந்தபோதுதான், அவளது வழியைத் தடுத்து, வேறு ஒரு பெரிய கார் உள்ளே முயன்றது.

சிறு எரிச்சலுடன் பார்த்தவளுக்கு அது போலீஸ் கார் என்று புரியவும் திகைப்பு உண்டாயிற்று.

போலீஸ் காருக்கு வழி விடாமல் முடியாதில்லையா?

காவல் நிலைய கார் உள்ளே வரும் அளவுக்கு வழிவிட்டுப் பின்னடைந்தவள், காரை விட்டிறங்கி, எதிர்க் காரில் இருந்த காவல் அதிகாரியிடம் பேசினாள்

சற்று நயந்த குரலில் ''பாருங்கள் சார். இன்றைக்கு எனக்கு ஒரு கண்காட்சியில் வேலை இருக்கிறது. நீங்கள் உள்ளே வந்துவிட்டால் நான் தாமதமின்றி கண்காட்சி வேலையைப் பார்க்கச் சரியாக இருக்கும்'' என்று நிலைமையை அமைதியாகவே விளக்கிக் கேட்டான்.

ஆனால் புரிந்து கொள்ள விரும்புகிறவர்களுக்கு அல்லவா, விளக்கம் தேவை.

விறைப்புடன் காரை விட்டிறங்கி வந்த காவல் அதிகாரி, ''பாரம்மா இந்த வீட்டில் இருந்து, விலை உயர்ந்த பல கலைப் பொருட்களை, நீ அனுமதியின்றி எடுத்துப் போக முயற்சிப்பதாக, அதாவது திருடிச் செல்வதாக எங்களுக்கு புகார் வந்திருக்கிறது. நீ ஓட்டி வந்த காரை சோதனையிட வேண்டும்'' என்று கூறி, அவளது காரினுள் எட்டிப் பார்த்தார்.

''அது... உள்ளே இருப்பவைகள் எல்லாம் ஓவியங் களா? அப்படியானால் புகார் மெய்தானே போல இருக்கிறது? இப்போது உன்னை...'' என்றவரின் பேச்சில் குறுக்கிட்டு ''சார், சார் இவையெல்லாம் நானே வரைந்த சித்திரங்கள். இன்றைக்கு கண்காட்சியில் வைப்பதற்காக எடுத்துப் போகிறேன். இந்த வீட்டில் ஏற்கனவே உள்ள படங்கள், அந்தந்த இடங்களில் இருக்கின்றன. நீங்களே போய்ப் பாருங்கள், தெரியும். எனக்கு தாமதம் ஆகிறது, சார். நுங்கம்பாக்கம் போய், அங்கே கண்காட்சி ஹாலில் அடுக்க வேண்டும். அதனால் தயவு செய்து என்னைப் போக விடுங்கள்'' என்று சாரூபா கேட்டுக் கொண்டாள்.

அவளுக்குக் கிளம்பத் தாமதம் ஆகிறதே என்ற தவிப்புதானே தவிர, காவல் அதிகாரி சொன்ன குற்றச்சாட்டை அவள் பெரிதாக எடுத்துக் கொள்ளவே இல்லை.

மடியில் கனம் இருந்தால்தானே, வழியில் பயம்?

ஆனால் போலீஸ்காரருக்கு கோபம் வந்தது. குரலை உயர்த்தி, ''ரொம்பக் கெட்டிக்காரிதான் போல! விட்டால் உன் திருட்டு வேலைக்கு என்னையே காவலுக்குக் கூட வரச் சொல்லுவாய் போல இருக்கிறதே! பார், வயதுப் பெண்பிள்ளை என்று பார்க்கிறேன். பேசாமல் படங்களை வீட்டுக்குள் கொண்டு வைத்து விட்டு கையை கட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திரு. அல்லது கைது பண்ணிக் கூட்டிப் போய் பெண் அதிகாரியிடம் ஒப்படைத்து விடுவேன். அப்புறம் நாளைக்கு யாரையாவது விட்டு ஜாமீன் எடுக்க ஏற்பாடு செய்து வெளியே வந்து கொள்'' என்று மிரட்டிப் பேசினார்.

என்ன இது? திருட்டு, கைது, ஜாமீன்...

போக்குவரத்தில் கூடச் சட்டத்தை மீறி அறியாத பெண்ணுக்கு, ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. மூளை இருந்த இடம் காலியாகிப் போனது போன்ற உணர்வு.

எல்லாவற்றுக்கும் மேலாக இப்போதேனும் கிளம்பினால்தான், போக்குவரத்தை சமாளித்து, கண்காட்சி ஹாலை அடைந்து, ஓவியங்களை உரியவாறு அடுக்கி வைக்க முடியும்! இவரானால் படங்களை வீட்டுக்குள் கொண்டு வைக்கச் சொல்லுகிறாரே!

தந்தையைப் போல அன்பு காட்டிய அங்கிள் உயிருடன் இருந்திருந்தால், இப்படி யாரும் பக்கத்திலே கூட வர முடியாது.

சட்டநாதன் அங்கிள் இங்கே இருந்தாலும் எந்தப் பிரச்சினையையும் அவரே கவனித்துக் கொள்வார். அவள் கேட்கக் கூடத் தேவையிராது!

இப்போது சுதர்மன் வந்த பிறகு... ஷாக் அடித்தது போல, சாரூபா அதிர்ந்து விறைத்தாள்.

இது அவன் வேலை! ஆனால் இப்படியா ஒருவனுக்கு பழிவெறி இருக்கும்?

எதற்கும் சந்தேகத்துக்கு ''இந்த மாதிரிப் புகார் கொடுத்தது... அவர் பெயர் சுதர்மனா, சார்?'' என்று விசாரித்தாள்.

கேட்டிருக்கவே கூடாது. சந்தேகத்துக்கே இடமில் லாமல் ''பின்னே? அவர்தானே, அந்த வீடு செத்துப் போன இந்த வீட்டின் உரிமையாளரின் சொத்து. தொழில் எல்லாவற்றுக்கும் பாதுகாவலராம்? பொறுப்போடு நடந்து கொள்கிறார்!'' என்றார் அதிகாரி, பாராட்டும் குரலில்.

''பார், படங்களைக் கூடப் பறிமுதல் செய்ய சொல்லவில்லை. வீட்டை விட்டு வெளியே போகாமல் கவனித்துக் கொள்ள வேண்டும் என்றுதான் கேட்கிறார். உனக்கு இந்த வீட்டை அனுபவிக்கும் உரிமை உண்டு என்பதால், படங்களைப் பார்த்து ரசிக்கும் உரிமையும்

அதில் அடக்கம் தானே என்கிறார். ஆனால் இந்த வீட்டுக்குள் வைத்து ரசித்துக் கொள்'' என்றார் தொடர்ந்து!

கடவுளே! இவ்வளவு வெறுப்பா, அவள் மேல்? நேர் எதிரி மாதிரி அல்லவா, செயல்படுகிறான்!

சுதர்மனைப் பற்றி அவரிடம் பேசிப் பயனில்லை என்று உணர்ந்து ''சார் இதெல்லாம் நான் வரைந்த சித்திரங்கள்தான் சார். வேண்டுமானால் சமையல் காரம்மாவிடம் கேட்டுப் பாருங்கள். அவர்கள் அடிக்கடி நான் வரைவதைப் பார்த்திருக்கிறார்கள். படங்களில் என் அடையாளம் கூட 'ரூபி' என்று எங்கேயாவது இருக்கும். கண்காட்சி நடக்கும் இடத்துக்கு வந்தால், கட்டைப் பிரித்து அடுக்கும்போது, நீங்களே பார்க்கலாம், சார்! என் கூட வாருங்கள் சார்!'' என்று கெஞ்சினாள்.

''படம் இந்த காம்பவுண்டை விட்டு வெளியே போகக்கூடாது என்கிறேன். நீயானால், படத்தோடு நீயும் வா என்கிறாயே! என்னைப் பார்த்தால் கேனயன் மாதிரியா தெரிகிறது? இதோ பார் நீ வேணுமானால், கோர்ட்டிலே போய், இதெல்லாம் உன்னோடது என்று நிரூபித்து, அப்புறமாக இந்தப் படங்களை எடுத்துப் போ, மற்றபடி, ஒன்றும் நடக்காது!'' என்றார் அதிகாரி ஒரே பிடியாக.

இவர் சொல்வது போலக் கோர்ட்டுக்குப் போனாலும் நிரூபிப்பது எப்படி? ஓவியங்கள் கையில் இல்லாமல், எதைக் காட்டி எப்படி நிரூபிப்பது?

இதுபோன்ற எந்தப் பிரச்சினையையும் சற்றும் எதிர்பார்த்திராததால் இந்தப் பிரச்சினையை எப்படி எதிர்கொள்வது என்றும் அவள் தெரிந்து வைக்க வில்லை!

இப்போது கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி, சுற்றும் முற்றும் எல்லாம் ஒரே இருட்டாகத் தோன் றியது.

இல்லை. அசட்டுத் தனமாக ஏதேதோ கற்பனை செய்யக்கூடாது. சில நாட்களாகச் சரியாகத் தூங்காமல் வேலை செய்ததால் கூட கண்கள் இருட்டலாம். கண்களை இறுக மூடித் திறந்தால் உடனே சரியாகி விடும்.

இப்போது என்ன செய்வது என்று, அதை முதலில் யோசிக்க வேண்டும்.

படிக்கும்போது கலை தொடர்பான பெரும்பாலான கண்காட்சிகளுக்கு மாணவர்கள் தனியாகவும், குழுக்களாகவும் சென்று குறை நிறைகளை ஆராய்வது வழக்கம்.

ஒரு கண்காட்சியில் ஒன்றாகப் படித்த சிலர் சேர்ந்து அவ்வப்போது அவரவரதைக் காட்சியில் வைத்து, வருவதைக் கொண்டு, ஆறு மாணவர்கள் சேர்ந்து எதிர்காலம் பற்றிய திட்டம் போட்டார்கள். அந்த ஆறு பேரில் சாருபாவும் ஒருத்தி.

அவர்கள் குழுவில் கொஞ்சம் நன்றாகப் பேசுகிறவள், அவள்தான். அவளுக்கே ஒன்றும் புரியாதபோது... எப்படித் தெரியும்? அவர்களது பேச்செல்லாம்,

வண்ணங்கள், சித்திரங்கள் என்றுதானே இருக்கும்! அதை விட்டால் அதிசயமாக ஒரு சில பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் பற்றிப் பேசுவார்கள்.

அது தவிர, இப்படி பழி வாங்குவது, சமயம் பார்த்து அடிப்பது எல்லாம் யார் பேச்சிலும் வராதே!

எதற்கும் இருக்கட்டும் என்று, குழுவில் இன்னொருத்தியான நளினியைக் கூப்பிட்டு விவரம் சொன்னாள், என்ன செய்வது என்று கேட்கக் கூட இல்லை.

அதற்குள் நளினி கீச் கீச்சென்று கத்தத் தொடங்கி விட்டாள். "என்னடி இந்த நேரத்தில் போய், இப்படிச் சொல்லுகிறாய்? என்ன செய்தாவது ஓவியங்களோடு வந்து சேர். பதினைந்து படங்கள், நீ வராவிட்டால் பதினைந்து இடங்கள் காலியாகக் கிடக்குமே! சும்மா விடுவார்களா? அடுத்த முறை இந்தச் சென்னை முழுக்க நமக்குக் கண்காட்சிக்கு இடமே கிடைக்காதே! உன்னால் எல்லோருக்கும் அல்லவா கஷ்டம்? ஏய் ஏதாவது பண்ணுப்பா! இல்லாவிட்டால் இல்லாவிட்டால், எல்லோர் வாழ்வையும் அழித்த பாவம் உனக்குத்தான் வந்து சேரும்!"

இந்த ரீதியில் அவள் புலம்ப, சாரூபா மறுபடியும் போலீஸ் அதிகாரியிடம் கெஞ்சிப் பார்த்தாள்.

அவர் அசைவதாக இல்லை.

என்ன தகராறு என்று வெளியே வந்து பார்த்த வள்ளியம்மையும், போலீஸ் பயத்தைக் கூட ஒதுக்கி, இன்ஸ்பெக்டரிடம் எடுத்துச் சொன்னாள்.

ஆனால் ''உன் சமையல்காரி உனக்கு மாறாகவா பேசுவாள்?'' என்றார் ஆய்வாளர்.

கத்தினாலும், நளினி சொன்னதில் ஓர் உண்மை இருந்தது.

கண்காட்சி வைக்கும் இடத்தில், வெற்றிடங்களைக் காட்டுவது தோல்வியாகத் தோன்றும். விற்றுவிட்டால் கூட 'ஸோல்டு' என்ற குறிப்போடு முடிந்தவரை அங்கேயே வைத்திருப்பார்கள். இப்போது இந்தப் பதினைந்து வெற்றிடங்களை என்ன செய்வது?

நெஞ்சு படபடக்க, அவர்களுடைய ஆசிரியர்களில் நன்றாகப் பழகுகிற ஒருவரைத் தொடர்பு கொண்டு நிலைமையை விவரித்து ஆலோசனை கேட்டாள்.

''உன் சித்திரங்களைக் கொண்டு செல்ல முடியா விட்டால், பெரிய இழப்புதான். ஆனால், அது முடியவே முடியாது என்னும் பட்சத்தில், அங்கே வெற்றிடம் தெரியாதபடி, மற்றவர்களின் படங்களை மாற்றி அடுக்கி சமாளிக்கப் பாருங்கள். அல்லது, உங்கள் எல்லோருக்குமே கெட்ட பெயராகிவிடக் கூடும்'' என்று எச்சரித்தார் அவர்.

''வேறு வழியே இல்லையா சார்?'' என்று வருத்தத் துடன் கேட்டாள் சாரூபா.

''வேறு என்ன வழி... ஓ, உன் சித்திரங்களைக் கொண்டு போகவா? யாராவது வக்கீல் வைத்து, கோர்ட் டில் வாதாடி... இதெல்லாம் எனக்குச் சரியாகத் தெரியா தும்மா? ஆனால் அதற்கெல்லாம் உனக்கு அவகாசம்

இல்லை என்று நினைக்கிறேன். இந்த முயற்சியே முழு தோல்வி ஆகிவிடாமல், அதற்கு ஆக வேண் டியதைச் செய்யப் பார். வரவேற்பு, பொது உரை இதுபோல எல்லாமே நீதானே செய்வாய்? போய் மற்ற வேலைகளையேனும் நல்லபடி செய்'' என்று முடித்தார் அவர்.

அவளுக்கு உதவியாக எதுவும் இல்லாவிட்டாலும் ஆசிரியர் சொன்னதிலும் முக்கியமான ஒரு கருத்து இருந்தது. அவளது இழப்பு மற்றவர்களையும் தாக்காமல் தடுக்க வேண்டும்.

காவலாளியின் உதவியோடு சித்திரங்களை மறுபடி யும் வீட்டுக்குள் எடுத்து வைத்தாள்.

காரில் ஒன்றுமில்லை என்று காவல் அதிகாரியிடம் காட்டிவிட்டு காரை எடுத்துக் கொண்டு கண்காட்சி இடத்துக்குச் சென்றாள்.

அதற்குள் விஷயம் பரவி, மற்ற ஐந்து பேருமே வந்து சேர்ந்திருந்தார்கள். ஆனால் அந்த நிமிஷத்தில் செய் வதற்கு யாருக்குமே எந்த வழியும் தெரியவில்லை.

எனவே மாற்று ஏற்பாடாக, மற்றவர்களின் படைப்பு களை இடம் மாற்றி பரவலாக வைத்து, காலியிடம் தெரியாமல் அடுக்கினார்கள்.

அழைப்பின் பேரில் வந்த விருந்தினர், விளம் பரத்தைப் பார்த்துவிட்டு வந்த பார்வையாளர்கள், பங்கேற்றவர்களின் உற்றார் எல்லோருடனும் நல்ல படியாகப் பேசிப் பழகி, விழா கிட்டத்தட்ட வெற்றி என்கிற நிலையில் முடிக்கும்போது மணி ஏழு.

உள்ளே ரத்தம் வடிவதைக் கொஞ்சமும் காட்டிக் கொள்ளாமல் வீடு திரும்பியவள், அங்கே உணவுடன் காத்திருந்த வள்ளியம்மையிடம், கண்காட்சி இடத்தி லேயே மற்றவர்களோடு உண்ண நேர்ந்து விட்டதால், அவளைச் சாப்பிட்டுப் படுக்கச் சொல்லிவிட்டு தன் அறைக்குச் சென்றாள்.

கூடவே சென்று ''போலீசிலே ஒரு ஆள் மட்டும் நின்னான் தாயி. இருட்டின பிறகு, அவனும் போயிட் டான்'' என்று விவரம் சொன்னாள்.

'ஏன்? இரவில் படங்களை கடத்த முடியாதாமா' என்று ஆத்திரமாக நினைத்துவிட்டு, அலுப்புடன் உச்சுக் கொட்டினாள் சாரூபா.

பெண்ணின் முகத்தைப் பார்த்துவிட்டு ''கஷ்டப் பட்டு வரைஞ்சது, வீணாப் போச்சுதே, தங்கம்!'' என்று உருகினாள் வள்ளியம்மை.

இந்த உருக்கமும், இரக்கமும் இன்னமும் வேத னையைத் தர, உடைந்து விடாமல் சிரமப்பட்டு சமாளித்தாள் சாரூபா ''விவீண் என்ன வள்ளியம்மா? இதென்ன அழுகுகிற பொருளா? நாளானால் ஊசிப் போகுமா? சீக்கிரமே சட்டப்படி நடவடிக்கை எடுத்து, அடுத்த கண்காட்சியில் வைத்துவிடலாம். வருத்தப் படாமல், போய்ச் சாப்பிட்டு விட்டுத் தூங்கு'' என்று அவளைத் தேற்றி அனுப்பினாள்.

அவள் சென்றபின் கதவைத் தாளிட்டுக் கொண்டு படுக்கையில் அமர்ந்தவளுக்கு நெஞ்சு உடையப் போவது போல வலித்தது.

கண்காட்சிக்கு வந்தவர்களில் பலர் முன்பும் வந்தவர்கள். அவளது சித்திரங்கள் எங்கே? அவளது படைப்புகளில் எதையாவது வாங்கலாம் என்று வந்தோமே என்று கேட்டபோதே அவளுக்கு வேதனை யாக இருந்தது.

அதிலும், அந்த வெளிநாட்டுக் கலை ஆர்வலர்கள்! தற்செயலாக முந்தைய கண்காட்சியைப் பார்த்து வியந்து, அவளோடு பேசிப் பழகியதில், அவள் அழைத் ததும் இப்போதும் வந்தார்கள்.

''உன் ஓவியங்களைப் பார்த்துவிட்டு, இப்போதும் அதே தரம் இருந்தால் பாரீசிலும் லண்டனிலும் நாங்கள் நடத்த இருக்கும் விழாக்களில் பங்கேற்கிறாயா என்று கேட்க வந்தால், உன் சித்திரங்களையே காணோமே!'' என்று அவர்கள் ஏமாற்றத்தோடு கேட்டபோது எப்படி முகம் மாறாமல் காத்துப் பதில் சொன்னாள் என்று அவளுக்கே தெரியாது!

எவ்வளவு அருமையான வாய்ப்பு! எப்படிக் கெடுத்து விட்டான்!

ஆனாலும் இவ்வளவு வன்மமா?

இத்தனைக்கும் இன்னொருத்தியை, அதுவும் பணக்காரியை மணக்கப் போகிறவன்! அழகானவளும் தான்!

அப்புறமும், இந்த அனாதைப் பெண்ணைப் பழி வாங்க வேண்டும் என்று, அப்படி என்ன வெறி?

வார்த்தைகளில் மனதில் உருவாகி, வாக்கியமாக உருவெடுக்கும்போதே, சாரூபா விதிர்விதிர்த்துப் போனாள்.

அவளா, தன்னைத்தானே அனாதை என்று நினைத் தாள்?

"கடவுளை யாராவது அனாதை என்பார்களா? உன் பெயரிலேயே கடவுள் தன்மை இருக்கிறது. அதனால் நீயும், உன் அம்மாவான நானும் ஒருபோதும் அனா தைகள் ஆக மாட்டோம்" என்று காவேரி அடித்துச் சொல்லுவாள்.

படித்து முடித்து, சொந்தக் காலில் நிற்க வேண்டும். நம் காலில் நாம் நிற்கும்போது, நம்மை யாரும் எதுவும் பண்ண முடியாது என்று தாயார் சொல்வதைச் சாரூபா அப்படியே மனதில் ஏற்றிருப்பவள்.

ஆனால் இப்போது இப்படி, அவளது எதிர்காலத் தையே நாசம் பண்ணி விட்டானே! இதை என்ன வென்று சொல்வது?

அன்னையுமே, கொடுமைக்காரக் கணவனால், சொந்த ஊரிலிருந்து வெளியேற்றப்பட்டவள்தான். இங்கும் சாவையே எதிர்கொள்ளத் துணிந்தவள்தான்.

ஆனாலும் இப்படிச் சொல்வதென்றால், அந்தத் துணிவுமே ஒரு கேவலமான நிலைமையிலிருந்து தப்புவதற்காகத் துணிந்து எடுத்த முடிவுதான். வாழ்வை எதிர்கொள்ளப் பயந்து, கோழைத்தனமாக எடுத்த முடிவல்ல!

அதுவே, அவளது வாழ்வில் திருப்பத்தையும் கொண்டு வந்தது. சாந்தலிங்கம் போல ஒரு நல்ல மனிதருக்கு, அவரது பணியில் உதவும் வாய்ப்பையும் தந்தது.

ஆனால், அன்னையை நினைக்கையில் சாரூபா வுக்குப் பெருமையாகவும், வெட்கமாகவும் இருந்தது. தாய் அனுபவித்த துன்பத்தில் நூறில் ஒரு பங்குகூட, தனக்கு நேரவில்லை அதற்குள் துவண்டு போவதா? கூடவே கூடாது என்று எண்ணினாள்.

ஆனாலும், இந்த நேரத்தில் அலுவலக நிர்வாகத்தில் தலைமை மாறாமல் இருந்திருக்கலாமே என்று ஏங்கா திருக்க அவளால் முடியவில்லை!

மறுநாள், அந்தப் பெண் மாலியுடன் சுதர்மன் அந்த வீட்டுக்கு விஜயம் செய்தான்.

ஓரளவு அந்த அச்சம், அன்று விடிந்ததிலிருந்தே சாரூபாவுக்கு இருந்தது. ஆனால் கொஞ்சமாவது நாகரீகம் இருந்தால், வரமாட்டான் என்று ஒரு சிறு நம்பிக்கையும் இருந்தது.

ஆனால் அந்த நம்பிக்கையை அழித்துக் கொண்டு, அவன் மட்டுமாக அல்ல, அவன் மணக்கப் போகும் பெண்ணையும் அழைத்துக் கொண்டே சுதர்மன் அங்கே வந்து சேர்ந்தான்.

அதாவது, நாகரீகம் சிறிதும் இல்லை! அவனுக்கும் இல்லை, அவன் மணக்க இருக்கும் அந்தப் பெண் ணுக்கும் இல்லை!

வள்ளியம்மை கொடுத்த காபியை அருந்தியவாறே, அப்போதும் ஹாலில் ஓரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த, ஒழுங்காக 'பாக்' செய்யப்பட்டிருந்த சித்திரங்களை வெறித்துப் பார்த்தான்.

பிறகு "இந்த வீட்டில் வசிக்கும் உரிமை, வாழ்நாள் முழுவதுக்கும் உனக்கு உண்டு. ஆனால் இங்கிருந்து பொருட்களைத் திருடிச் செல்லும் உரிமை கிடையாது. அதற்கு நான் விடமாட்டேன். ஊகூம். அது முடியவே முடியாது!" என்று பெரிய நியாயவான் போலத் தலையசைத்துக் கூறினான்.

"எதையும் திருடுகிற பழக்கம் எனக்கும் கிடையாது. இவையெல்லாம், நானே வரைந்தவை" என்றாள் அவள்.

சொல்லும்போதே குறுக்கிட்டு "அதைக் கோர்ட்டில் நிரூபித்து எடுத்துப் போயிருக்க வேண்டியதுதானே?" என்றான் அவன் ஏளனமாக.

வெறும் அடாவடிப் பேச்சு! இதற்கு, அவள் பதில் வேறு சொல்ல வேண்டுமா? அவள் கோர்ட்டில் நிரூபித்து முடிக்குமுன், அங்கே கண்காட்சி முடிந்துபோகும் என்று தெரிந்துதானே, சரியான நேரத்தில் காவல் அதிகாரியிடம் புகார் கொடுத்துத் தடுத்தான்!

எவ்வளவோ உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரக் கூடிய அடித்தளம். அது எவ்வளவு உயரத்துக்கு என்று அவனுக்கே தெரிந்திருக்காது. அது தெரிந்தால் இன்னமும் ஆனந்தமாகக் குதிக்கக் கூடும்!

ஆனால், சித்திரங்களை விற்றுப் பணம் சம்பாதிப் பதைக் கூட, சுதர்மன், திட்டமிட்டுத் தடுத்திருக் கிறான். அதிலும் திருப்தி அடையாமல், அவளது வேதனையைப் பார்த்து கெக்கலி கொட்டிச் சிரிக்க வந்திருக்கிறான்.

இவ்வளவுதானா நீ என்பது போன்ற அவளது வெறித்த பார்வையை நேராகச் சந்தித்தவன், லேசாகத் தலையைச் சிலுப்பி அப்போதுதான் சொன்னான். ''நான் எதிரி என்று உனக்குத் தெரியும். எவ்வளவு மோசமான எதிரி என்று தெரிய வேண்டாம்?'' என்று.

ஆனால் வெறுமனே தெரிய வைப்பதில் என்ன இருக்கிறது? வேதனையில் அவள் புழுவாகத் துடிப் பதைப் பார்த்தால்தானே, பழிவாங்கு படலம், முழுமை யாக நிறைவேறும்? அதுதான் பார்க்க வந்திருக்கிறான். அதற்கு சாட்சி வேறு! சாட்சியா, உதவியாளா? அல்லது கூடச் சேர்ந்து சிரிப்பதற்காக ஓட்டிக் கொண்டு வந் தாளா?

சாரூபாவின் முதுகுத் தண்டு தானாக நிமிரலாயிற்று.

அவனோடு கூட வந்தவள், சுதர்மனை மணக்கப் போகிறவள் என்று கிட்டன் சொன்ன அந்தப் பெண் மாலினியும், அவளைக் கூட்டி வந்ததற்கு நன்றி காட்டு கிறவள் போல, அவனுக்குக் குளிரும்படி, சாரூபாவை மட்டம் தட்டிப் பேச முயன்றாள்.

''ஏன் சுதா, அந்தப் படங்களை விற்க முடியா விட்டால், இவள் சாப்பாட்டுக்கு என்ன செய்வாள்? பா..

வமில்லை? இங்கே நம் சென்னையை அழகு படுத்தும் சுவர் சித்திரங்கள் வரையும் வேலையின் அளவு ரொம்பப் பெரியது. முயன்றால், இவளுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்காமலா போகும்? நான் வேண்டுமானால், எங்கள் தொகுதி கவுன்சிலரிடம் சிபாரிசு பண்ணட்டுமா? என் அப்பா சொன்னால் அவர் தட்டாமல் செய்வார். என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று சுதர்மனிடம் கேட்டாள்.

என்னவோ, அவன்தான் சாரூபாவின் எதிர்காலத்தை உருவாக்குகிற அதிகாரம் படைத்தவன் போல!

அவனை முந்திக் கொண்டு ''ஹையோ! நீங்கள் பெரிய தர்மதாதாவாக இருப்பீர்கள் போலத் தோன்றுகிறதே!'' என்று சாரூபா ஆச்சரியப்பட்டாள்! ''ஆனால் பாவம் உங்களுக்கு எதற்கு அந்த மாதிரி சிரமமெல்லாம்?'' என்று குரலாலேயே லேசாக எச்சரித்தாள்.

ஆனால் பெருமை காட்டும் வாய்ப்பை அந்த பெண்மணி மாலினி விடுவதாக இல்லை. ''சிரமமா? எனக்கு சிரமம் ஒன்றும் இல்லை. ஒரு போன் கால் போதும். மனிதர் விழுந்தடித்துக் கொண்டு செய்வார். என் அப்பா போட்ட பிச்சையில் கவுன்சிலர் ஆனவர்'' என்றாள் கர்வத்துடன்.

''அதைத்தான் நானும் சொன்னேன்'' என்று சாரூபா புன்னகை புரிந்தாள்.

மற்றவள் புரியாமல் விழிக்கவும், ''அதுதான் கவுன்சிலர் உங்கள் பிச்சையில் பதவி வந்தது. அதற்காக

உங்களுக்கு ஒரு சகாயம். அப்புறம் இதற்கு பதில் உதவி கேட்பாரில்லையா? அதை நீங்கள் செய்தாக வேண்டும்! பழிக்குப் பழி மாதிரி, இது இந்த உதவிப் பிச்சை தொடர்கதையாக எந்த அளவுக்குப் போகுமோ? அதுவும் எனக்காக? ஐய்யய்யோ வேண்டவே வேண்டாம்ப்பா!'' என்று பெரிதாகப் பாவனையோடு சாரூபா மறுத்தாள்.

சாரூபா தன்னை மட்டம் தட்டுகிறாள் என்று ஒருவாறு புரிந்து ''பாருங்கள் சுதா, எனக்கு இரக்க மனம்! ஐயோ பாவம், பிழைப்புக்கு என்ன செய்வாள் என்று பரிதாபத்தில் உதவப் போனால், இந்தப் பெண் என்ன திமிராகப் பேசுகிறாள்!'' என்று சாரூபா அங்கே இல்லாததுபோல, அவளைப் பற்றி, அவனிடம் புகார் சொன்னாள்.

ஆனால், இன்றைய கலையரசி, நேரடியாகவே பதில் சொன்னாள் ''பாருங்கள் மாலினி, இன்றைக்கு யாரும் யாருடைய பிழைப்பையும் கெடுத்து விட முடியாது. உழைத்தால், எல்லோருமே பிழைத்துக் கொள்ளலாம். எனக்கும் அப்படித்தான்'' என்றாள்.

''எப்படி? எப்படிப் பிழைப்பாய்? அதுதான், ஒரு படம் கூட விற்க முடியாமல் போய்விட்டதே! சுதாவாகப் பார்த்து அலுவலகத்திலிருந்து ஏதாவது அலவன்ஸ் கொடுத்தால்தான் உண்டு. நீ கெஞ்சிக் கேட்டால், நானே அதற்கு ஏற்பாடு செய்வேன்'' என்றாள் வந்தவள்.

எப்படியாவது சாரூபாவைத் தனக்கு முன் மண்டியிட வைத்துவிடும் வேகம்! வெறி! ஏன்?

காரணம் எதுவாக இருந்தபோதும், அடுத்தவர்களைத் துன்புறச் செய்து மகிழ்வதில் இருவரும் பொருத்தமான ஜோடிதான். இவர்கள் முன் தைரியத்தை இழந்து தொய்ந்து விடாமல், சாரூபா நிமிர்வையே காட்ட வேண்டும்!

''நான் முதலிலேயே சொன்னேனே, மிஸ் மாலினி, யார் வாழ்வையும் யாரும் அழித்துவிட முடியாது என்று, என் கலை எனக்கு சோறு போடும். உங்கள்.. வேறு யாருடைய தயவும் எனக்குத் தேவையில்லை. உங்களுக்கு இங்கே வேறே வேலை இல்லை என்றால் போய் வாருங்கள்'' என்றாள் அமைதியான, ஆனால் உறுதியான குரலில்.

என் வீட்டில் நீ வேண்டாத விருந்தாளி, வெளியே போ என்று சொல்லாமல் சொன்னாள்.

இது அலுவலகத்துக்குச் சொந்தமான வீடு, வருவதும் போவதும் எங்கள் விருப்பம் அது, இதென்று வாக்கு வாதத்தை எதிர்பார்த்த சாரூபா, அதற்கும் தயாராகவே இருந்தாள். எப்படியும் உயிருள்ளவரை அங்கே வாழும் உரிமை அவளதுதானே?

ஆனால் அந்த மாதிரிச் சச்சரவு எதுவும் எழவில்லை.

குத்திக் கிழித்து விடுவது போல மாலினி பார்த்த போதும், சுதர்மன் எதுவும் பேசாமல் திரும்பி நடக்கவும், ஒரு கணம் திகைத்து நோக்கினாள்.


ஆனால், சுதர்மனின் துணை இல்லாமல் தனித்து நின்று போராடத் தைரியம் இல்லையோ, அல்லது அவனை விட்டு வினாடி நேரம் பிரியக்கூட மனம்

இல்லையோ, அவனை ஒட்டிக்கொண்டு வந்தது போலவே, மாலினி திரும்பியும் போய் விட்டாள்.

சுதர்மனது மௌனம் ஆச்சரியத்தைத் தந்தபோதும், அவனைப் பற்றிய எண்ணங்களைப் பிடிவாதமாக ஒதுக்கி, அடுத்து செய்ய வேண்டியதைப் பற்றி, சாரூபா யோசித்து முடிவெடுத்தாள்.

ஆனால் என்னவோ அவள் யோசித்து எடுத்த அந்த முடிவும் அவளுக்குப் பின்னர் பெரும் இடும்பையாகத் தான் முடிந்தது!

# 6



பள்ளியில் படிக்கிற காலத்திலேயே, பத்திரிகைகள் நடத்தும் மாணவர்களுக்கான ஓவியப் போட்டிகளுக்கு சாரூபா படங்கள், வரைந்து அனுப்பியது உண்டு. பலமுறை பரிசும் பெற்றிருக்கிறாள்.

ஒரு சில பத்திரிகை அலுவலகங்களில் பகுதி நேர பணி புரிய கூப்பிட்டும் இருக்கிறார்கள்.

அவர்கள் தருவதாகக் கூறிய ஊதியத்தைக் கேட்டதும், சாரூபாவுக்கும் ஆசைதான். ரொம்பப் பெரிய தொகை இல்லை என்றாலும், பள்ளியில் படிக்கும் போதே, யாரால் இப்படிச் சம்பாதிக்க முடியும் என்று பெருமை உண்டாயிற்று!

ஆனால் காவேரிக்கு அப்போதே மகள் வேலையில் சேர்வது பிடிக்கவில்லை.

என்னதான் வேலை செய்துகொண்டே படிக்கலாம் என்று சொன்னாலும், அப்போது பணியில் சேருவது, படிப்புக்கு முத்தாய்ப்பு வைத்துவிடும் என்று கருதினாள்.

எப்படியும் படிப்பில் கவனம் குறைந்து போகும்!

இது கற்கும் வயது. கற்பது மனதில் நன்கு பதியும். சாந்தலிங்கத்தின் தயவில் நிறையப் படிக்கும் வாய்ப்பும் இருக்கிறது. சாரூபா வேலைக்குப் போய்த்தான் ஆக வேண்டும் என்கிற அவசியமும் இல்லை. இயன்றவரை படித்து முடித்துவிட்டு, அப்புறமாக எதிர்காலத்தை திட்டமிடலாமே என்பது, அவளது கருத்து.

சாந்தலிங்கமும் முழுதாகக் காவேரியையே ஒத்துப் பேசினார். ''இப்போது என்னென்ன அறிந்து கொள்ள விரும்புகிறாயோ, அத்தனையையும் கற்றுக் கொள், சாரும்மா. கல்வி கடலுக்குள் கரை காண ஒரு நாளும் முடியாது என்றாலும், இயன்றவரை மூளையில் ஏற்றிக் கொள்ளலாமே! அப்புறமாக, வேலையா, திருமணமா, அல்லது இரண்டுமேயா என்று முடிவெடுக்கிற ஒரு தருணம் வரத்தான் போகிறது. இந்த வேலை பார்க்கிற விஷயத்தை அப்போது பார்த்துக் கொள்ளலாம். இப்போதே நீ பணம் சம்பாதிக்க வேண்டும் என்று என்ன அவசியம்? அதைவிட, இயன்றவரை முழுக் கவனத்தையும் படிப்பதில் செலுத்தி, நிறையப் படி'' என்றார் அவர்.

அதாவது நீ எவ்வளவு படித்தாலும், அதற்கான செலவு என் பொறுப்பு என்று சொல்லாமல் சொன்னார்! பெற்ற தந்தை கூடப் பணக் கணக்கே பாராமல் இந்த அளவு யோசிப்பாரோ, என்னவோ?

அதிலும் அவளுடைய பிறப்புக்குக் காரணமான தந்தை நிச்சயமாக மாட்டார்! முதலில் வேலையில் சேர்ந்து, சம்பளத்தை முழுதாகக் கொண்டு வந்து என் கையில் கொடு என்று விரட்டியிருப்பார்!

பெரியவர்கள் இருவரும் விரும்பாததால், அப்போது பணிக்குச் சென்று பணம் சம்பாதிப்பது நின்று போயிற்று.

அப்புறமாக நண்பர்களோடு சேர்ந்து, கலைக் கண் காட்சிகளை நடத்தத் தொடங்கிய பிறகும், அந்தக் காட்சிகளுக்கு வந்து பார்த்துவிட்டு, இரண்டு பத்திரிகை களில் அவளைப் பணிக்கு அழைத்தார்கள்.

இரண்டுமே தமிழ்நாட்டின் முக்கியமான வாரப் பத்திரிகைகளே!

ஆனால், விருப்பம் போல வரையும் இந்த சுதந்திரம், ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கி வேலை செய்வதில் இருக்குமா என்ற சந்தேகம். சாருபாவுக்கு அப்போது வந் திருந்தது. எனவே, அவள் அந்தப் பேச்சைத் தொடராமல் விட்டு விட்டாள்.

ஆனால், வாய்ப்பு எப்போதும் இருப்பதாக ஒரு பத்திரிகையின் ஆசிரியர், அவளிடம் நேரிலேயே சொல்லியிருந்தார். எனவே வயிற்றுப் பிழைப்பு பற்றி,

அவள் என்றைக்குமே பெரிதாகக் கவலைப்பட்ட தில்லை.

இப்போதுகூட, ஒரு நல்ல வேலையைத் தேர்ந் தெடுத்துக் கொண்டால், அவளுக்குத் தேவைக்கு அதிகப்படியாகவே கிடைக்கும்.

அதேபோல, இந்தக் கண்காட்சியும் அடுத்த ஆறு மாதங்களில் மறுபடியும் நடக்கும்.

எச்சரிக்கையோடு சட்டப்பூர்வமாக வேண்டியதைச் செய்து வைத்துக் கொண்டால், அடுத்து ஏமாற்றத்துக்கு வழியிராது. யாராலும் எந்த மோசமான எதிரியாலும் இடையூறு செய்யவும் முடியாது.

ஆனால், அதுவரை ஏதேனும் வேலை செய்வதும் அவளுக்கு இப்போது கட்டாயமே.

முன்பானால், சாந்தலிங்கத்துடன் நெருங்கிப் பழகி, அவர் மனதை நன்றாக அறிந்திருந்ததால், வீட்டின் தேவை உணர்ந்து சட்டநாதனே பொருளாகவும் பண மாகவும் வீட்டுக்கு அனுப்பி விடுவார். அவள் வாய் திறந்து கேட்கவே தேவையிராது.

படங்கள் விற்ற பணம் இருப்பதாகச் சொல்லி, அவளே அவரிடம் பணத்தை மறுத்தும் இருக்கிறாள். அதேபோல, கண்காட்சி நடத்தும் ஹாலுக்கு கட்டத் தேவை என்றால், அவரிடம் கேட்டு வாங்கியதும் உண்டு. கொடுப்பதோ கேட்பதோ அவர்களிடையே பணம் ஒரு பிரச்சினையாக இருந்ததே கிடையாது.

இப்போதோ, பணம் பற்றிப் பேசுவதே கேவலமாகப் பட்டது.

ஆனால், கையில் இருக்கும் பணத்தை வைத்து அதிக நாட்கள் சமாளிப்பது கஷ்டம்! அடுத்த கண் காட்சி வரை என்றால், செலவை மிகவும் குறைக்க நேரும்! அது இப்போதைய வசதிகளைக் குறைப்பதாக இருப்பதோடு, வள்ளியம்மைக்கு மனக் கஷ்டத்தையும் தரும்.

அவளது முழு கதையையும் அறிந்தவள் என்பதால் ''அய்யா உன்னையப் பெத்த மகளாத்தானே நினைச் சாங்க! உன்னைப் பார்த்துப் பார்த்து சந்தோசப்படு வாங்களே! அவராகத் தருகிறப்போ, சும்மா இருந் திருக்கப்படாதா?'' என்று அவ்வப்போது கூறுவாள்.

செலவைக் கட்டுப்படுத்த வேணும் என்றால் ''எப்படி வாழ வேண்டிய பொண்ணு! இப்படி கஷ்டப்படணுமா'' என்று அழுது புலம்புவாள். தேவையற்ற வருத்தம்!

இப்படி எண்ணித்தான், தமிழ்நாட்டின் தலை சிறந்த பத்திரிகைகளுள் ஒன்றில் சாரூபா பணியில் சேர்ந்தாள்.

பத்திரிகை நிறுவனமும், அவளை சந்தோஷமாகவே வரவேற்றது.

ஆனால், சந்தோஷத்தை அவர்கள் வெளிக்காட்டிய விதம்தான். யாரும் எதிர்பாராத விதமாக அவளது சந்தோஷத்துக்குக் குழிபறித்தது!

அவளுக்கு பணி தந்த பத்திரிகை நிறுவனம் எப் போதுமே, கலைஞர்களுக்கு மிகுந்த மதிப்பளிப்பது, உற்சாகமூட்டுவது.

அதே பழக்கமாக, சாரூபாவின் படத்தைப் பெரிதாகப் பத்திரிகையில் பிரசுரித்தார்கள்.

அவளது தகுதிகள், சின்ன வாழ்க்கை குறிப்போடு, புதிய அலுவலர் என்று பெருமையோடு அறிவித் தார்கள்.

அவர்களது டி.வி. சானலிலும் இது முதல் ஒரு வாரம் ஒளிபரப்பாயிற்று.

அதைப் பார்த்துவிட்டு, அடுத்த கண்காட்சி பற்றி கவலையோடு விசாரிக்க வந்த கலைத்துறை நண் பர்கள், அதற்கு எந்தவிதமான தடையும் இராது என்று அறிந்ததும், மகிழ்ச்சியோடு வாழ்த்துச் சொன்னார்கள்.

கூடவே "ஏய் சாரூபா, இனி நம் கண்காட்சிகளுக்கு உன் பத்திரிகையில் முழுப் பக்கம் ஓசி விளம்பரம் போட்டு விடுப்பா! அந்தப் பணம் மிச்சமாகும்!" என்றான் திலீப் மகிழ்ச்சியோடு.

"கூடவே, அவளையும் வீட்டுக்கு அனுப்புவார்கள், தம்பி. அது அவளுடைய பத்திரிகை அல்ல. அவள் பணிபுரிகிற பத்திரிகை. முதுகு ஓடிய வேலை செய்ய லாமே தவிர, உரிமை எடுக்க முடியாது" என்றாள் அவர்கள் அனைவரிலும் மூத்த சுகுணா.

கிட்டத்தட்ட ஒத்த வயதும் மனப்பான்மையும் உள்ள வர்களோடு கலகலப்பாக உரையாடியது. சாரூபாவுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. வள்ளியம்மையும் எல்லோருக்குமாகச் சமைத்தாள்.

சிரிப்பும் விளையாட்டுமாக மாலை வரை அன் றையப் பொழுது ஆனந்தமாகக் கழிந்தது. ரொம்ப

நாளைக்குப் பிறகு, சாரூபா அன்றிரவு நன்றாகத் தூங்கினாள்.

மறுநாள் சாரூபாவின் கெட்ட நேரம், மறுபடியும் தலையைத் தூக்கிற்று.

டி.வி. சானலில் அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்ததும், கோவிந்தனுக்கு உள்ளம் ஏதோ உறுத்தியது.

இந்த முகம், அவனுக்கு அறிமுகம் ஆன முகம்! அந்தப் பெரிய கண்களும், புன்முறுவலும்... அவனுக்கு நன்கு பழக்கமான... இருபது ஆண்டுகளுக்கு முன் தாலியைக் கழற்றி வீசிவிட்டுப் போன, அந்தத் திமிர் பிடித்த கழுதை காவேரியின் முகம்.

அவள் பெற்ற பெண்ணா? நன்றாகப் பார்த்தால், அதே மூஞ்சிதான். வயதும் சரியாகத்தான் இருக்கும்!

பெயர்கூட... என்னமோ பிள்ளை கடவுள் மாதிரி இருப்பதாகச் சொல்லி, அந்த அர்த்தத்தில் சாரம் கோரம் என்று, அதுபோலத்தான் ஏதோ பெயர் வைத்தாள்.

கோவிந்தன் கூப்பிடுவது 'ஏய் குட்டிச்சாத்தான்' என்றுதான்!

ஆனால் இப்போது, தாயைப் போலவே நல்ல அழகாக இருக்கிறாள்! இப்படி விளம்பரம் போட்டு வரவேற்பதனால், சம்பளமும் கூடுதலாகவே இருக்கக் கூடும்!

சின்னதாக வாழ்க்கைக் குறிப்பை, மறுதரம் விளம்பரம் வரும்போது, ஊன்றிப் படித்தான், தாயார் பெயர் காவேரியேதான்.

வளர்ப்புத் தந்தை என்று மறைந்த பிரபல தொழி லதிபர், யாரோ சாந்தலிங்கமாம்!

தொழிலதிபர் என்றால், பெண்ணுக்கு சொத்து பத்து எழுதி வைத்திருப்பானா?

என்னவோ மண்டையைப் போட்டு விட்டதால், அவனால் பிரச்சினை இராது!

எதற்கும் போய்ப் பார்த்துவிட வேண்டியதுதான் என்று முடிவு செய்து, கோவிந்தன் சென்னைக்குக் கிளம்பினான்.

'கள்ளனுக்கு திருட்டு புத்தி' என்பார்கள். சாரூபா அவனுடைய மகளாயிற்றே! அவளது ரத்தத்திலும் தகப்பனைப் போன்ற ஊதாரித்தனம் ஏறியிருந்தால்?

எல்லாவற்றையும் செலவு செய்துவிட்டு கடன் கிடனை வாங்கி வைத்திருந்தால், தந்தை என்று தானாகப் போய் மாட்டிக் கொள்ளக் கூடாது!

எனவே, தான் யாரென்று காட்டிக் கொள்ளாமலே, சாரூபா பற்றிக் கோவிந்தன் விசாரித்தான்.

விசாரித்த அளவில் நல்ல கொழுத்த வேட்டையாகத் தான், அவனுக்குத் தோன்றியது.

மகள் வசித்த வீட்டைப் போய்ப் பார்த்தான். திறந்த வாய் மூட முடியவில்லை அவனால்!

எவ்வளவு பெரிய வீடு! பாதியை வாடகைக்கு மேல் விட்டாலே போதுமே! எவ்வளவோ கிடைக்குமே! இரண்டு அறைகளில் ஒடுங்கிக் கொண்டு மீதியில்

நாலைந்து குடித்தனம் வைத்தால், சுகத்திலே மிதக்கலாம்!

கார் வேறே! அவளே ஓட்டிக் கொண்டு போவதையே பார்த்தானே!

இதைவிடக்கூடாது என்று தோன்றியது கோவிந்த னுக்கு!

விஞ்ஞானத்தின் வளர்ச்சி சாரூபாவின் அலைச் சலைப் பெரிதும் குறைத்தது. கதைகள், சம்பவங்களுக்கு ஏற்ற வகையில் சித்திரங்களை வரைந்து கொடுப்பது தான், சாரூபாவின் வேலை. ஆனால் நகரின் மறு கோடியில் இருந்த பத்திரிகை அலுவலகத்துக்கு தினம் தினம் சென்று படங்களை வரைவதற்கு பதிலாக, பத்திரிகையில் இருந்து லாப்டாப் மூலமாக தேவையைத் தெரிவிக்க, அவளும் பொருத்தமான படங்களை வரைந்து லாப்டாப் மூலமாகவே அனுப்பிவிட அனுமதி கிடைத்தது.

இந்த வேலை போக மீதி நேரத்தில் அவளது சொந்தப் படங்களின் வேலையில் சாரூபா ஈடுபடுவாள்.

ஆனால், முன்னெச்சரிக்கையாக 'ஸ்கெட்ச்' போடுவ திலிருந்து படம் வளர வளர, செல்லில் படம் பிடித்து வைத்துக் கொண்டாள். படம் அவளதுதான் என நிரூ பிக்க எளிதாக இருக்குமே!

அப்படி வரைந்து கொண்டிருந்தபோது ஒரு நாள் ''நான் தான் உன் தகப்பன்!'' என்று சொல்லிக் கொண்டு திடுமென ஒருவன் வரவும், சாரூபா முதலில் திகைத்துப் போனாள்.

இத்தனை காலம் இல்லாமல், திடீரென இந்த ஆள் எங்கிருந்து முளைத்தார்?

பொய்யோ என்று எண்ணுவதற்கு வழியில்லாமல் வந்தவன் காட்டிய பழைய படங்களில், அன்னையின் அருகே உரிமையோடு நின்றவன், இவனேதான்.

ஆனால், தாயின் சிறு வயதில் கணவன் என்ற பெயரோடு அவன் செய்த அநியாயங்கள், கொடுமைகள் பற்றி, அவளது பதினைந்தாவது வயதில் தாயார் சொன்னது எதையும், இன்றளவும் அவள் மறக்கவில்லை.

ஆனாலும் மகளென்று தேடி வந்து விட்டானே!

மனதில் வெறுப்புதான் என்றாலும் மரியாதையற்று நடக்கப் பிடிக்காமல் உட்கார வைத்து, பழச்சாறு கொணர்ந்து கொடுத்தாள்.

அவ்வளவுதான்! கோவிந்தனுக்கு வாயெல்லாம் பல்லாகிப் போயிற்று.

"இவ்வளவு பெரிய வீட்டிலே, தனியாகவா இருக்கிறே, கண்ணு? நினைக்கவே மனது தாங்கலியே! இதுக்கு ஒரு வழி பண்ணியாகணுமே!" என்று தீவிரமாக யோசிப்பது போலப் பாவனை செய்தான்.

அவளது தனிமையை கோவிந்தன் அடிக்கோடிடுவது போல அழுத்திப் பேசவும், சாரூபா விழித்துக் கொண்டாள்.

"தனி என்ன? வீட்டில் வள்ளியம்மை எப்போதும் கூடவே இருக்கிறாள். இன்னும் வாட்ச்மேன் எப்போதும்

காவல் இருப்பான். இன்று வரை, எனக்கு ஒரு பிரச்சினையும் வந்ததில்லை'' என்றாள் அவள் எந்த விதமான உணர்ச்சியும் இல்லாத குரலில்.

''அவர்கள் இருவரும் வேலைக்காரர்கள் கண்ணு! எவனாவது திருட்டுப் பயல் வந்து, கத்தியைக் காட்டி மிரட்டினால், பின்னங்கால் பிடரியில் பட பாய்ந்தோடிக் காணாமல் போய் விடுவார்கள். அத்தோடு, அதுகள் வெறும் வேலையாட்கள். நம்முடைய ஒரு கண் பார்வையில் விலகி ஓட வேண்டியவர்கள். அந்த இடத்தில்தான் அவர்களை வைக்க வேண்டும். இவர்களை எல்லாம் துணை என்று ஒரு வினாடி கூட நம்ப முடியாது. அதனால் உருப்படியாக நான் ஓர் ஐடியா வைத்திருக்கிறேன்.''

தகப்பன் முடிக்கு முன், சாரூபா மறுபடியும் தட்டிப் பேசினாள்.

''அது மட்டுமல்ல, என் கலை வகுப்புத் தோழர்கள் நான் எப்போது கூப்பிட்டாலும் எனக்குத் துணை வருவார்கள். அதனால் தனிமைப் பயமே எனக்குக் கிடையாது. என்னைப் பற்றி அனாவசியமாகக் கவலைப் படாதீர்கள்'' என்றாள் பழைய குரலிலேயே.

துணை என்ற வார்த்தையே மகளுக்குப் பிடிக்கவில்லை என்று கோவிந்தனுக்குத் தெளிவாகப் புரிந்தது.

அதன் காரணம், கட்டுப்படுத்த ஆள் இல்லாமல் தறிகெட்டு விருப்பம் போல வாழும் ஆசை என்று, தனக்குள் காரணமும் கற்பித்துக் கொண்டான்.

ஆனால், இதற்கெல்லாம் பயந்தால், அவனது சுகபோகக் கனவுகள் என்னாவது? முதலில் இங்கே வந்து உட்கார்ந்து விட்டால், அப்புறம் இவளை அதட்டி மிரட்டி அடக்கி வைப்பது பெரிய காரியம் அல்ல!

''கலை வகுப்புத் தோழர்களா? பெண்ணா? ஆணா?''

''இரண்டும்தான்'' என்றாள் அவள் அசட்டையாக.

''ஆங்! ஆண் பிள்ளைப் பசங்களும் இருக்கிறார்களா? இது கொஞ்சமும் சரி வராதே!'' என்று வேகமாகத் தலையை அசைத்து, கோவிந்தன் உரக்கப் பேசினான்.

''இதோ பார் சாரூபா, நீ என் மகள். உன்னை நாலு பேர் தப்பாகப் பேச நான் இடம் கொடுக்க முடியாது. நீ தனியாக இருக்கும் வீட்டுக்குக் கண்ட தடிப் பயல்களும் வந்து போக இருந்தால், பார்க்கிறவர்கள் என்ன சொல்லு வார்கள்?''

குறுக்கிட்டு ''அவர்கள் கண்ட தடிப்பயல்கள் அல்ல! என்னோடு கூடப் படித்த நண்பர்கள்!'' என்றாள் மகள் சுள்ளென்று.

''இருக்கலாம். ஆனால் வெளியே இருந்து பார்க்கிற வர்களுக்கு, அது தெரியாது பார்! நெற்றியிலே எழுதி ஒட்டிக் கொண்டு வந்தாலும் நம்ப மாட்டார்கள். அய்யோ கண்ணு, எல்லோரும் உன்னைத் தப்புத் தப்பாக பேசுவார்களே! சே! உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டுப் பொறுப்பில்லாமல் உன் அம்மா போய்விட்டாளே...!'' என்று வருத்தப்பட்டான் தகப்பன்.

''யாராலும் சாவை தடுத்து நிறுத்த முடியாது, எனக்கோ, ஏன், உங்களுக்கோ கூட எந்த வினாடியும் சாவு வரலாமே'' என்றாள் சாரூபா கடினக் குரலில்.

'என்னையா சாகச் சொல்லுகிறாய்? அப்புறமாக உன்னை ஒரு கை பார்த்துக் கொள்ளுகிறேன்' என்று உள்ளூரக் கறுவியபடி ''அய்யோ நான் அதைச் சொல்லவில்லை, கண்ணு. நீயோ பொட்டைப் பிள்ளை! பத்து மாசம் சுமந்து பெற்றவள், அந்த காவேரி சாகும் போது, பொறுப்பாய் யாரிடமாவது உன்னை ஒப்படைக்க வேண்டாம்? அதுவும் பெற்ற தகப்பன் நான் இருக்கும்போது நாதியற்றவள் போல, உன்னைத் தனியே நின்று தவிக்கும்படி விட்டுவிட்டுப் போய் விட்டாளே, அதைத்தான் சொன்னேன்'' என்று விளக்கம் கொடுக்கிற சாக்கில் தன் விருப்பத்தைக் கோவிந்தன் வெளியிட்டான்.

இதை ஓரளவு ஊகித்திருந்த சாரூபா ''ஒருவேளை, தன்னைப் போல தனித்து நின்று சாதிக்கும் வீரப் பெண்ணாக என்னை உருவாக, என் அம்மா நினைத்திருக்கக் கூடும். அடுத்தவரை நம்பி வாழ்வது நல்லதில்லை என்று தெளிவாக உணர்ந்தவர்கள் ஆயிற்றே!'' என்று வலிக்கக் குத்தினாள்.

தன்னைத்தான் மகள் தாக்குகிறாள் என்று புரிந்து முகம் கறுத்தபோதும், கோவிந்தன் அதைப் பொருட்படுத்துவதாக இல்லை! அவனுக்குத் தேவை, இந்த வீடும், உழைக்காமலே கிடைக்கக்கூடிய கார், ஏசி என்பன போன்ற சுகபோகங்களும், அவைகளுக்காக, எந்தக் கேவலமும் பட்டுக் கொள்ளலாம்!

எனவே ஓர் அசட்டு நகை புரிந்து ''பார் கண்ணு, ஏதோ ஒரு காலத்தில் என்ன காரணத்துக்காக என்ன செய்தோம் என்று புரிய, அந்த நாளைக்கே திரும்பிப் போக வேண்டும். அப்படி போய், அதைப் பற்றிப் பன்னிப் பன்னிப் பேசுவதால் என்ன பிரயோசனம்? அது முடிந்து போன கதை. அதை அடியோடு மறந்து விட்டு, இன்றைக்கு நல்ல பேருடன் கௌரவமாக வாழ என்ன வழி என்று அதைத்தான் பார்க்க வேணும்.

''எப்படியும் மூத்த தலைமுறை உறவுகள் இல்லாமல் தனித்து வாழுகிற பெண்ணைத் தப்பாகத்தான் பேசு வார்கள். ஆனால் இதற்கு அதாவது இந்த அசிங்கப் பேச்சை நிறுத்த, ஒரு நல்ல வழி இருக்கிறது. இதே வீட்டில் உன் கூட நான், உன் சின்னம்மா, தம்பி, தங் கைகள் எல்லோரும் ஒன்றாக இருந்தோம் என்று வை. எவன் வந்தாலும் போனாலும் பல்லு மேலே நாக்கைப் போட்டு, எந்தக் கழுதையும் ஒரு வார்த்தை பேச முடி யாது பார்! நம் குடும்பக் கௌரவம் ஒரு கறை இல் லாமல் அப்படியே இருக்கும். நீயும் எப்பவும் போல வாழ லாம். அதிலே யாரும் குறுக்கிட மாட்டோம். அதனாலே உன் சின்னம்மா பிள்ளைகள் எல்லோரும் உனக்குத் துணையாக இங்கேயே வந்து விடுகிறோம். நீயும், பேர் கெடாமலே சுகமாக வாழலாம்'' என்றான் கோவிந்தன்.

தகப்பன் பேசப் பேச சாரூபாவுக்கு அருவருப்பாக இருந்தது.

அவள் எப்போதும் போல வாழலாம் என்றால் என்ன அர்த்தம்? அதுவும், பேர் கெடாமலே சுகமாக வாழலா மாம்! இவனுக்கு பெயர் தகப்பன்!

இந்த வீட்டில் வந்து ஓசிச் சோறு உண்ண வேண்டும். அது மட்டும்தான் இவனுக்கு ஆசை என்று, அவளுக்குப் புரிந்தது. இங்கே ஒன்றும் பணம் கொட்டிக் கிடக்கவில்லை என்று உண்மை நிலை தெரிந்தால், அவனே பின் வாங்கிவிட மாட்டானா என்று தோன்றியது.

எனவே தகப்பனிடம் ''நான் உயிரோடு இருக்கும் வரை, இந்த வீட்டைப் பயன்படுத்திக் கொள்ளலாமே தவிர, வேறே வருமானமெல்லாம் கிடையாது. நான் வேலை செய்து சம்பாதிப்பது மட்டும்தான் பணமாகக் கைக்கு வரும். அதில் உங்கள் குடும்ப முழுதுக்கும் சோறு போடுவது. என் சக்திக்கு மீறியது. பசியும் பாதிப் பட்டினியுமாகத்தான் வாழ நேரும். அந்த வாழ்வுக்காக, நீங்கள் ஏன் இங்கே வரவேண்டும்?'' என்று கேட்டாள்.

இந்தக் கேள்விக்கு பதில் கிடைத்த அப்போதுதான், தந்தையின் திட்டமும் முழுதாகச் சாருபாவுக்குத் தெரிந்தது.

சொகுசாகக் காரை ஓட்டிச் செல்லும் பெண், அந்த சுகத்துக்குப் பணம் இராமல் போய்விடும் என்று அஞ்சுவதாகக் கோவிந்த் நினைத்தான். அப்படியல்ல. அந்த வீடே ஒரு தங்கச் சுரங்கம் என்பதை எடுத்துச் சொன்னால், அதற்கு மேல் மகள் தடை சொல்ல மாட்டாள் என்று எண்ணித் தன் திட்டத்தை அவளுக்குத் தெரியப்படுத்தினான்.

''பைத்தியக்காரப் பெண்ணம்மா நீ! அம்மா மாதிரியே, பணத்தை பெருக்குகிற வழி தெரியாமல்,

மக்குத்தனமாகப் பேசுகிறாயே. கை நிறைய வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவார்களா? மாடியும் கீழுமாக இவ்வளவு பெரிய வீட்டை வைத்துக் கொண்டு செலவுக்குப் பணம் இல்லை என்று சொன்னால், கேட்பவர்கள் சிரிக்க மாட்டார்கள்? வீட்டில் பாதியை வாடகைக்கு விட்டாலே, பணம் கொட்டுமே! நாம் எல்லோரும் கொஞ்ச இடத்தில் முடங்கிக் கொண்டு இன்னும் நிறைய பேருக்குக் குடக் கூலிக்கு கொடுத்தால், லட்சத்துக்கு மேலேயே வருமானம் வரும். இன்னும் வாடகைக்கு கொடுக்கும்போது முன்பணமாகவே பல லட்சம் கிடைக்கும். இதெல்லாம் எவ்வளவு, என்ன என்று உன் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே! இந்த சள்ளை பிடித்த பணக் கணக்கு முழுவதையும் நானே பார்த்துக் கொண்டு உன்னை ராணி மாதிரி வாழ வைக்கிறேன்!'' என்று முழங்கினான் அவன்.

ராணி போல வாழ வைப்பார்! அதுவும் இந்த மனிதர்! தண்ணீரில் எழுதிப் பத்திரமாகப் பிடித்துப் பெட்டிக்குள் பூட்டி வைத்துக் கொள்ள வேண்டியதுதான்!

''இல்லை. அது சரிப்பட்டு வராது. இந்த வீட்டை வாடகைக்கு கொடுக்கும் உரிமை இல்லை என்று எண்ணுகிறேன். சும்மா ஏதாவது ஏற்பாடுகளை செய்து விட்டு அசிங்கப்பட முடியாது. அதனால் வந்தது போலவே திரும்பிப் போய் விடுங்கள். இங்கே எனக்கு வேலையிருக்கிறது. நீங்கள் கிளம்புங்கள்'' என்றாள் சாரூபா சற்று உறுதியான குரலில்.

என்னை வெளியே போகச் சொல்லிவிட்டு எவ னோடு கூத்தடிக்கத் திட்டம் என்று கோவிந்தன் ஆத்திரத்தோடு யோசிக்கும்போதே, பைக்கைப் படபட வென்று ஓட்டிக் கொண்டு திலீபன் வந்தான்.

இவனுக்காகத்தானோ? கோவிந்தன் குறுகுறுப்போடு பார்க்கத் தொடங்கினான்.

''ஏய் சாரூ, ஏன் போனே பண்ணவில்லை? மொபை லில் சார்ஜ் இல்லையா? இன்றைக்கு வெஸ்டர்ன் காலரிக்குப் போக வேண்டுமே, நினைவிருக்கிறதா? எதற்கும் உன்னிடம் சொல்லி, உன் காரிலேயே உன் னைப் பிடித்து இழுத்துப் போகலாம் என்று வந்தேன்'' என்று படபடவென்று மொழிந்தான் திலீபன்.

தகப்பன் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்று, சாரூபாவுக்குப் புரியாமலில்லை. ஆனால் அந்த மனிதனை விரட்டுவதற்கு இது நல்ல வழியாகப் பட ''ஓ! உனக்காகத்தான் நானும் காத்துக் கொண்டிருந்தேன். திலீப்! வா கிளம்பலாம்'' என்று உற்சாகமாகக் கிளம்பியவள், அப்போதுதான் நினைவு வந்தவள் போல, கோவிந்தன் புறம் திரும்பி, ''பாருங்கள் நான் வெளியே போக வேண்டியிருக்கிறது. நீங்களும் கிளம்புங்கள். நான் சொன்னதை யோசித்துப் பார்த்தால் அவரவர் இருக்கும் இடத்தில் இருப்பதுதான் நல்லது என்று, உங்களுக்கும் புரியும்'' என்றவள் கையசைத்து வாயில்காவலனை அழைத்தாள்.


அவன் ஓடி வந்ததும், கோவிந்தனைக் காட்டி, ''இதோ பார், இவர் இப்போது கிளம்புவார். அவர் போனதும்

கதவைப் பூட்டிக் கொண்டு கவனமாக இரு. வேறு யாரையும் உள்ளே விட வேண்டாம்'' என்றுவிட்டு உள்ளே போய் கார்ச் சாவியை எடுத்து வந்தாள்.

கோவிந்தன் காம்பவுண்டுக் கதவைக் கடந்து செல்வதைக் காணவும், அவளுக்கு அப்பாடி என்றிருந்தது.

ஆனால் அவள் மட்டும் கோவிந்தனின் மூளைக்குள் ஓடிக் கொண்டிருந்த எண்ணங்களை அறிந்திருந்தால் திலீப்போடு அவ்வளவு நிம்மதியோடு அவளால் சென்றிருக்க முடியாது!

# 7



கோவிந்தனின் மனம் உலைக்களமாக எரிந்து கொண்டிருந்தது.

பெற்ற தகப்பன்! பிள்ளை என்று தேடி வந்து நிற்கிறான். அதற்கே சாரூபா அவன் காலில் விழுந்திருக்க வேண்டும்.

சரி, அதுதான் இல்லை. தன்னந்தனியாக கிடக்கிறதே கழுதை என்று, குடும்பத்தோடு துணை வருகிறதாகச் சொல்லுகிறானே, அந்தத் தியாகத்துக்காகவேனும் 'அப்பா' என்று அவன் காலைத் தொட்டுக் கும்பிட்டிருக்க வேண்டும்.

சரி, காலைத் தொட்டு வணங்கி... பணிந்து... அந்த மாதிரி நல்ல பழக்கங்கள் எதையும் பெற்ற கழுதை கற்றுக் கொடுக்கவில்லை போல, என்று மன்னித்து விடலாம் 'அப்பா...' என்று ஒரு வார்த்தை அழைக்கக் கூட வாய் வரவில்லையே!

அதையும் பொருட்படுத்தாமல் மன்னித்து, எவ்வளவு பெருந்தன்மையோடு வளமான வாழ்வுக்கு வழி சொல்லித் தருகிறான்! அந்த நன்றி கூட இல்லையே!

என்ன அலட்சியமாக 'அது சரிப்பட்டு வராது' என்கிறாள்!

என்ன இவள் இப்படி இருக்கிறாள். அவள் தாய், அந்தக் காவேரியின் அரை கிறுக்குத்தனம் வாரிசாக இவளுக்கும் அப்படியே வந்து விட்டதோ? இதை எப்படிக் குணப்படுத்துவது என்று பெற்றவன் கஷ்டப் பட்டு யோசித்தால், அவளது திமிர்த்தனத்துக்குக் காரணம், ஆறடி உயரத்தில் உள்ளே வந்து நிற்கிறதே!

வெள்ளைக் கோதுமை நிறத்தில் வடக்கத்திப் பையன்.

இவன் கூட இஷ்டம் போல ஆட்டம் போடுவதற்கு அப்பன் தடையாக இருப்பான் என்றுதான் விரட்டு கிறாள்.

அவரவர் இடத்தில் இருக்க வேண்டுமாமே! என் வீட்டுக்கு வராதே என்ற வார்த்தைகளை நேரடியாகச் சொல்லாமல், வேறு மாதிரி உணர்த்துகிறாளாம்!

இந்தத் திமிரை அடக்காமல் விடக்கூடாது. விட்டால், கோவிந்தன் குடும்ப மானமல்லவா, சந்தி சிரிக்கும்!

இவளுடைய தாய் இன்னொருத்தனை கட்டிக் கொண்டு வாழ்ந்த கேவலமாவது, அங்கே யாருக்கும் தெரியாது. கமுக்கமாக இருந்து மறைந்தும் போயிற்று. ஆனால் இவள் பத்திரிகையில் படத்தை வேறு போட்டுக் கொண்டு... ஊகூம்... அதை அனுமதிக்க முடியாது. அனுமதிக்கக் கூடாது!

தாயைப் போல இவளும் ஆட்டம் போட நினைத்தால், அது நடக்காது! அதற்கு ஆப்பு வைக்க அப்பன் இருக்கிறான் என்று விரைவிலேயே அவளுக்குப் புரியும்! அதைப் புரிய வைப்பதற்கு, இந்த வீடு அவன் கைக்கு வந்தாக வேண்டும். அதன் மூலம் அவன் கையில் பணமும் துள்ள வேண்டும்!

இதை எப்படி நடத்துவது என்று தீவிரமாக யோசித்தவனுக்குத் திடுமென ஒரு வழி தென்பட்டது.

அந்த வீட்டில் வெளி வாசலில் நிற்கும் காவல் காரனைத் தவிர, வேறு ஆண்கள் கிடையாது. இந்தக் கோதுமை ரொட்டி உயரமாக இருந்தாலும், வெறும் புல் தடுக்கிப் பயில்வான்தான். கட்டுமஸ்தான உடம்பும் ஒன்றும் கிடையாது. கோவிந்தனுடைய பெரிய பையனே, அவனை தூக்கி எறிந்துவிடுவான்.

என்ன இருந்தாலும் எஜமானியுடைய தகப்பன் என்றதும், காவல்காரன் சலாம் போடத்தான் செய்தான்.

பேசாமல், குடும்பத்தோடு அதிரடியாக உள்ளே போய் உட்கார்ந்து விட்டால், யார் என்ன செய்ய முடியும்? கேட்பதற்குத்தான் அவளுக்கு யார் இருக்கிறார்கள்?

அப்படி யாரும் இல்லை என்பதால்தானே, இப்படித் தைரியமாக கண்டவனோடு சுற்றத் தோன்றுகிறது!

இருக்கட்டும் பெண்ணே, எல்லாம் இன்னும் வெகு சில நாட்கள் மட்டும்தான். அப்புறம், இந்த அப்பனுக்குப் பணிந்துதான் ஆக வேண்டும்!

சாரூபா போலீசுக்குப் போவாளோ என்று ஒரு கணம் கோவிந்தனுக்குத் தயக்கம் வந்தது. அவனுக்குப் பயந்து பாத்திரம் பண்டங்களை எல்லாம் விட்டுவிட்டு, இர வோடு இரவாக ஓடிப் போனவளுடைய மகள்! வெறும் வாய் வீச்சுக்கு மேல் எதற்கும் துணிவிராது என்று, அவன் நிச்சயமாக நினைத்தான்.

அத்தோடு போலீசைக் கூப்பிட்டு அவர்களே வந்தாலும், அவளுக்குத்தான் மான கேடாக முடியும் என்று ஒரு மிரட்டு மிரட்டினால் அத்தோடு ஓய்ந்து விடுவாள்!

உள்ளே போய் உட்கார்ந்து விட்டால், அப்புறம் அவனது அதிகாரம்தானே? பையன்களை ஏவி நாலு மொத்து மொத்தினால் அப்புறம் வாய் திறக்க தைரியம் வருமா? அவள் தாயைப் போட்டது போல, அவனே இரண்டு போடு போடலாம். ஆனால் அவனுக்கும் கை வலிக்கும். கையிலும் முன்னைப் போல பலம் இல்லை. இரண்டு கிண்டன்களைச் சோறு போட்டு இத்தனை ஆண்டு காலம் வளர்த்து வைத்திருப்பது எதற்காக? பயல்களுக்குப் படிப்புதான் வரவில்லை. இதற்காவது பயன்படட்டுமே!

அந்த வீட்டைக் கொண்டு என்னென்ன மாதிரி வருமானத்தைப் பெருக்கலாம் என்று கணக்கிடும் போதே கோவிந்தனுக்கு வாயில் எச்சில் ஊறியது. எத்தனை ஆயிரம் கிடைக்கும்? அடேயங்கப்பா!

அவனுக்குத் தெரிந்தவரை முன்னேற்பாடுகளை கோவிந்தன் கவனமாகவே செய்தான். சாரூபாவுக்கு வெளியிலிருந்து எந்த உதவியும் வருவதற்கு வழியிருக் கிறதா என்று விசாரித்து அறிந்தான்.

சாந்தலிங்கத்தின் அலுவலகத்துக்கு ப்யூனை ஒரு மாதிரி 'கவனி'த்துக் கேட்டபோது, காதுகளில் தேன் மழையே பொழிந்தது போல, நல்ல நல்ல சமாச்சாரங்கள் சிக்கின.

முதல் விஷயம் அந்த சாந்தலிங்கத்தைப் போலவே, சாரூபா மேல் பிரியமாக இருந்த சட்டநாதன் ஓய்வு பெற்று வெளிநாட்டுக்குப் போய்விட்டது.

அடுத்ததோ இன்னமும் தித்திப்பானது. சட்டநாத னுக்கு பிறகு நிர்வாகப் பொறுப்பேற்ற வக்கீலுக்கும் சாரூபாவுக்கும் கொஞ்சமும் ஒத்துப் போகவில்லை என்பது!

அதனால், பல வசதிகளைச் சாரூபாவுக்கு அவன் குறைத்து விட்டது. அவள் அலுவலகத்துக்கே வந்து சண்டை போட்டு, ஒன்றும் செய்ய முடியாமல் தோற்றது. இது போலப் பல கதைகள். எல்லாம் கறுப்பு வாந்தி. காக்காய் வாந்தி ஆவது போல, கண்டபடி வண்ணம் பூசப்பட்ட கதைகள்!

கேட்கக் கேட்கக் கோவிந்தனுக்கு மிகவும் ஆனந்த மாக இருந்தது.

ஆக, இந்த பெரிய தொழில் நிறுவனத்திலிருந்து மகளுக்கு ஒரு சின்ன உதவி கூட கிடைக்காது! அதாவது சாரூபாவை என்ன செய்தாலும் அவனை எதிர்க்கவோ, தடுக்கவோ யாரும் வர மாட்டார்கள்.

அவள் படிந்து வரும்வரை அடித்து நொறுக்குங்கடா என்று மகன்களைக் கட்டவிழ்த்து விட்டுவிட வேண் டியதுதான்.

ஆனால் மட அடி அடித்து உயிரையே எடுத்து விடாமல், பார்த்துக் கொள்ள வேண்டும். அவள் வாழு கிற வரைதானே, வீடு சொந்தமாம்! அதனால் அவள் உயிருக்கு ஆபத்தில்லாமல் அடிக்க வேண்டும்!

மனைவி கொஞ்சம் வல்லரக்கியாக இருந்திருந்தால், அவளையும் இதற்குப் பயன்படுத்தலாம். ஆனால் அவளை முதலில் கோவிந்தன் அடக்கிய விதத்தில், அவள் உரக்கப் பேசக்கூடப் பயப்படுவாள். அவளைக் கொண்டு சாரூபாவை மடக்குவது எப்படி? அப்புறம், வேலை கீலை என்று வெளியே போக விடக்கூடாது. அந்தப் பத்திரிகையில் நல்ல சம்பளம்தான் கிடைக்கும் என்றாலும், அங்கிருந்து யாரையாவது, துணைக்குக் கூட்டி வர அவள் முயற்சித்தால் வம்பாகிவிடும்.

மகளை முதுகெலும்பு இல்லாத புழுவாக்கித் தன் சொல்லுக்குப் பணிய வைத்துவிட்டு, அந்த வீட்டை எந்தெந்த முறையில் பணம் காய்ச்சி மரமாக்கலாம்

என்பது பற்றி பல்வேறு திட்டங்களோடு நல்ல நாள் பார்த்து, தன் இரு மகன்களோடு, கோவிந்தன் அந்த வீட்டுக்குள் மறுபடியும் காலடி எடுத்து வைத்தான்.

பெரியதாகப் பந்தாக் காட்டி, வாயில் காவலனை சலாம் போட வைத்து, அவனையே பெட்டி தூக்க வைத்து, ஹாலுக்குள் செல்லும் வரை எல்லாமே அவனது திட்டம் போலவே நடந்தது.

என்ன சத்தம் என்று எட்டிப் பார்க்க வந்த வள்ளியம்மாளிடம் ''ஸ்ஸ்... அப்பா, என்ன வெயில்! மகளுக்குத் துணையிருக்கலாம் என்று வந்தால், தொண்டையே காய்ந்து போய்விட்டது. என்ன சும்மாக் கண்ணை முழித்துப் பார்த்துக் கொண்டு நிற்கிறாய்? போ. போய் எங்கள் மூன்று பேருக்கும் ஜில்லென்று குடிப்பதற்கு ஏதாவது கொண்டு வா'' என்று கோவிந்தன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ''அப்பா எனக்கு ஜிகர்தண்டா!'' என்றான் இளைய மகன்.

''எனக்கு பன்னீர் சோடா'' என்றான் மூத்தவன்.

''போ, போ. போய் ஏதாவது ஜல்தியா எடுத்து வா!'' என்று அதட்டினான் கோவிந்தன்.

அதுவரை எல்லாம் ரொம்ப சரியாகவே போயிற்று.

ஆனால் ஓடோடிப் போய், அவர்கள் கேட்ட பானங்களை எடுத்து வராமல், அவர்களை ஒரு பார்வை பார்த்து விட்டு, வள்ளியம்மை மாடிப்படி அருகே சென்று ''சாரும்மா'' என்று உரக்கக் கூப்பிட்டாள்.

தெளிவற்ற குரலில் ஏதோ பதில் வந்தது.

என்ன என்று சாரூபா கேட்டிருப்பாள் என்று கோவிந்த னுக்குத் தோன்றியது.

குடிப்பதற்கு ஏதேனும் கொண்டு வா என்றால் சமையலறைக்குப் போகாமல் இங்கே என்ன என்று அதட்ட எண்ணிய கோவிந்தன் நாவை அடக்கிக் கொண்டான்.

பெண்ணரசியும் இப்போது வந்துவிடட்டும். அவளே மிரளுவதைப் பார்த்துவிட்டால், அப்புறம் இந்தக் கிழட்டு வேலைக்காரியும் பம்பரமாய் சுழலு வாள்.

''கொஞ்சம் வந்துவிட்டுப் போம்மா. இங்கே சில பேர்... அதான் அன்றைக்கு உன்னோட அப்பான்னு சொல்லிக்கிட்டு வந்தாரே, அவர் இன்னும் இரண்டு பையனுகளைக் கூட்டிக்கிட்டு வந்திருக்கிறாரு'' என்று பழைய குரலிலேயே கூறினாள் வள்ளியம்மை.

ஒரு சில வினாடி நேரம், மேலே சத்தமே இல்லை.

பெட்டைக் கழுதைக்குப் பொட்டில் அறைந்தது போல அதிர்ச்சி போல! பேச்சே வரவில்லையே என்று உள்ளூரக் கெக்கலித்தான் கோவிந்தன்.

''இதோ வருவதாகச் சொல்லு'' என்று குரலை அடுத்து, மெய்க்காப்பாளன் மாதிரி அந்த ஒல்லிக் குச்சி திலீபன் பின் தொடர, சாரூபா படியிறங்கி வந்தாள்.

இங்கேயே குடித்தனம் செய்கிற மாதிரி கூடவே இருக்கிறானே என்று ஆத்திரத்துடன் கோவிந்தன் எழுந்தான்.

''என்ன இது? எப்போது பார்த்தாலும் ஆண் பிள்ளைகளைக் கூடவே வைத்துக் கொண்டு! இது சமுசாரிகள் வசிக்கும் வீடா? அல்லது வே... வேறே மாதிரி நினைப்பு ஏதும் வைத்திருக்கிறாயா?'' அதட்டலாகக் கேட்டான் அவன். ''முதலில் அவனை வெளியே போகச் சொல்லு'' என்று கட்டளையும் பிறந்தது.

திலீபனின் பக்கமாகத் திரும்பி மெல்லிய குரலில் சாரூபா ஏதோ முணுமுணுக்க அவன் வாயிற்புறமாக வெளியே சென்றான்.

பரவாயில்லையே! ஒரு வார்த்தையில் அடங்கிப் போகிறாளே என்று கோவிந்தன் அகமகிழ்ந்தான். மகன்களைப் பெருமையாக ஒரு பார்வை பார்த்துவிட்டுப் பேச வாய் திறந்தால், அவனை முந்திக் கொண்டு சாரூபாவே பேசினாள்.

தம்பிகளை ஏறெடுத்தும் பாராமல் ''அவரவர் இடத்திலே இருப்பதுதான் நல்லது என்று, அன்றே சொன்னேனே. அதற்கு மேல், இதெல்லாம் என்ன?'' என்று லேசான தலையசைவால் பெட்டிகளைக் காட்டி கேட்டாள்.

விசாரணை என்று சொல்லலாம். மற்றபடி, லேசான புருவச் சுளிப்புடன் சற்று அழுத்தமான குரலில் அவள் வினவியதை வெறுமனே விவரம் கேட்டதாகச் சொல்லவே முடியாது.

பையன்கள் இருவரும் வழி காட்டுதலுக்காகத் தந்தையைப் பார்க்க, அவனுமே அந்த வினாடியில்

என்ன சொல்வது என்று அறியாமல் திகைத்து வாயடைத்து நின்றான்.

அடங்கிப் போகிறாள் என்று பார்த்தால், அதட்டுகிறாளே!

ஒருகணம் திகைத்துத் திணறினாலும், கோவிந்தன் உடனே சமாளித்துக் கொண்டான். இங்கே அவன்தான் தகப்பன், அதிகாரம் செய்ய உரிமை உள்ளவன். இவள் பணிந்து நடக்க வேண்டிய மகள், மாறித் திமிர் காட்ட முயற்சித்தால், அடக்கிப் பணிய வைக்க வேண்டியது, அவனது உரிமை!

சட்டெனத் தலையை உலுக்கி விட்டுக் கொண்டு ''என்னடி சத்தம் மாறுது? பெற்ற தகப்பன்! வாங்கப்பா, உட்காருங்க, எனக்குத் துணையாக இங்கேயே இருங்க என்று காலிலே விழுந்து கெஞ்சிக் கேட்க வேண்டிய கழுதை நீ! நான் சொன்ன பேச்சைக் கேட்டுக்கிட்டு, மரியாதையாக வாயை மூடிக்கிட்டு இருக்கணும். அதை விட்டு, என்கிட்டே குரலை உயர்த்தினாக்கா, பேச வாயே இல்லாமல் பண்ணி விடுவேன், தெரிஞ்சுக்க! இப்ப முதல்ல, சாம்பிளுக்கு ஒரு...'' என்று கையை உயர்த்திக் கொண்டு அவன் மகளை நோக்கி முன்னேற, ''அப்பா, வேண்டாம்ப்பா, வேண்டாம்'' என்று பையன்கள் பதறினார்கள்.

பதறியதோடு மட்டுமில்லாமல் ஓடி வந்து தகப்பனின் கையையும் பிடிக்கவே, கோவிந்தனுக்கு ஆத்திரம் பொங்கியது.

பெண்ணை அடித்து நொறுக்குவதற்காக அழைத்து வந்தால், இந்த மடையன்கள், அவனையும்

தடுக்கிறார்களே! அடியாத மாடு படியுமா? அல்லது அடித்துப் பிடித்துப் பிடுங்காமல் மயில்தான் சும்மா இறகைக் கொடுத்து விடுமா?

மகன்கள் அவனது கையைப் பிடித்து நிறுத்தியது, அவனுக்கு சினமூட்டியது என்றால், அந்த மகன் களை மீறிக் கொண்டு போக முடியாத உடல் பலக் குறைவு, இன்னமும் அவனது ஆத்திரத்தை அதிகப்படுத் தியது.

''விடுங்கடா!'' என்று அதட்டிக் கையை விடுவித்துக் கொண்டு, முதலில் இவன்களுக்கல்லவா நாலு சாத்து சாத்த வேண்டும் போலத் தெரிகிறது என்று ஆவேசத் துடன் திரும்பியபோதுதான், மகன்கள் பற்றியதன் காரணம் அவனுக்குப் புரிந்தது.

ஹாலுக்குள் வரும் கதவை அடைத்துக் கொண்டு, மூன்று பேர் நின்றார்கள்.

ஒருவன் வாசலில் நின்ற காவல்காரன், அவன் கையில் ஒரு கத்தி! அடுத்து கடப்பாரையோடு நின்ற வன், கட்டாயமாக ஓர் அடியாளேதான்! அந்த கோதுமை நிறத்து ஒல்லிக் குச்சியோ, கராத்தே போஸ் கொடுத்த படி முன்னேறிக் கொண்டிருந்தான்.

அவனது விறைப்பேறியிருந்த தசை நாண்களைப் பார்க்கும்போது, ஒரே அறையில் சுருளுகிறவனைப் போல கொஞ்சமும் தெரியவில்லை. மாறாக, அவனது ஓர் அறையில், அடுத்தவர் எலும்பை முறிக்கிறவன் போலத்தான் தோன்றியது!

இப்போது அவனது எலும்பையா? அல்லது, முதலில் பையன்கள் எலும்பா? அல்லது எல்லோருக்குமே ஒரே மாதிரி மரியாதை நடக்கப் போகிறதா?

அந்த மூன்று பேருமே, அனுமதிக்காக சாரூபாவைப் பார்க்கவும், கோவிந்தனுக்கு வெலவெலத்து விட்டது.

வார்த்தைகளை ரொம்பவே விட்டு விட்டானோ!

தனித்து வாழும் பெண், வாயைத் திறந்து மறுத்துப் பேசுமுன், முதுகெலும்பை ஒடித்து அடக்கி விட வேண்டும் என்று, கையை ஓங்கியது, மிகப் பெரிய தப்போ?

வளர்ப்புத் தகப்பன், தாய் இரண்டு பேரும் இறந்து, கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக இந்த வீட்டில் தனியே வசிப்பவள், அதற்குரிய பாதுகாப்பு இல் லாமல் இருப்பாளா என்று யோசிக்காமல் விட்டு விட்டானே!

கடப்பாரை, கராத்தே, கத்தி... கொன்று புதைத்தே விடுவார்கள் என்றல்லவா தோன்றுகிறது! ஒரு வேளை அதுதான் பழக்கமா?

இந்தத் துணிவில்தான், இந்தச் சிறுக்கி இங்கே தனியே இருந்து லூட்டி அடிக்கிறாளா?

விஷயம் தெரியாமல் இங்கே வந்து சரியாக மாட்டிக் கொண்டோமே என்று கோவிந்தனுக்குப் பயத்தால் உடம்பு நடுங்கத் தொடங்கியது.

பொதுவாகச் சத்தத்தை உயர்த்தி, தன்னைவிடப் பலம் குறைந்தவர்களை மிரட்டிப் பயமுறுத்திக் காரியம்

சாதிக்கிறவர்கள் உள்ளே மிகவும் கோழைகளாக இருப் பார்கள் என்று சொல்வார்கள். அவர்களைவிட பல சாலிகளைக் கண்டால், தலை தெறிக்க ஓடி விடு வார்களாம்.

அதைப் போலவே எதிர்ப்பவர்களின் வலுவைக் கண்டு அரண்டு போன கோவிந்தன், இப்போது இவர் களிடமிருந்து எப்படித் தப்புவது என்று, வேக வேகமாக யோசித்தான்.

மகன்கள், கைகால்கள் நடுக்கத்தைக் கட்டுப்படுத்த முயற்சிப்பதைப் பார்த்தவனுக்கு, அவர்களிடமிருந்து எந்த உதவியும் கிடைக்காது என்று புரிந்து போயிற்று. இப்போது, அவர்களையுமே காப்பாற்ற வேண்டும்! இல்லாவிட்டால் அவர்களைப் பெற்றவள் கண்ணீர் வெள்ளத்தில் வீட்டையே மிதக்க விட்டு விடுவாள்!

அவசரமாக யோசித்து, மிகவும் கஷ்டப்பட்டு முகத்தில் புன்னகையைக் கொண்டுவர முயற்சித்தான்.

பெருமுயற்சி செய்து, மிகுந்த சிரமத்தின் பேரில், உதடுகளை இழுத்து இளித்து ''சசப்பாஷ், இஇப்படித் தான், எந்தவித நிலைமைக்கும் தயாராக இருக்க வேணும். ஓஓர் ஆபத்து என்றால் டக்கென்று சமா..ளி சமாளிக்கிறயான்னு பார்க்கத்தான், இஇப்படி மிரட்டினேன். ரொம்பப் பரவாயில்லை. தங்கம்! டேய் பசங்களா, வவாங்கடா, அக்கா எந்த ஆபத்தையும் தனியாகவே சமாளித்துக் கொள்வாள். வீட்டை விட்டு நாம்... நாம் வந்து அவளுக்குத் துணையாக இங்கே இருக்கத் தேவையில்லை! அவளாக இருக்கச்

சொன்னால், வேணுமானால்... வந்து சாருக் கண்ணுக்குத் தேவை என்றால், அப்போது இங்கே வந்து உதவுவோம். இப்போது...'' என்று அப்போதும் நப்பாசை விடாமல் இழுத்தான்.

தாயின் நினைவு வந்தது, சாரூபாவுக்கு.

திருப்பிக் கையை ஓங்கிக் காட்டியிருந்தால் கூட, இந்த ஆள் கையைக் கட்டிக் கொண்டு நின்றிருப்பான். அந்தத் துணிவின்றி, அன்னை எவ்வளவு துன்பத்தை அனுபவித்து விட்டாள்!

தாயின் முகம் மனதைப் பாறையாய்க் கடினப்படுத்த ஒரு விரலசைவில் சாரூபா வாயில் காவலனை அழைத்தாள்.

அருகில் வந்தவனிடம் ''பார் தரம் சிங், இவர் இப்போது கிளம்புகிறார். இனிமேல் இவர் பேரைச் சொல்லி யார் வந்தாலும், ஏன் இவரே வந்தாலும் காம்பவுண்டு தாண்டி உள்ளே விடக்கூடாது. இதில் எப்போதேனும், ஏதேனும் சந்தேகம் வந்தால், உனக்கு செல்போன் தந்திருக்கிறேன் அல்லவா? அதில் என்னிடம் கேட்டு, நான் சொல்வதைச் செய், மற்றபடி இந்த வீட்டுக்குள் உனக்குத் தெரிந்திராத யாரையுமே காலெடுத்து வைக்க விடாதே! அதிலும் மிக முக்கியமாக இவர்களை!'' என்றாள், அழுத்தம் திருத்தமாக!

மகள் சொன்னதைக் கேட்க கேட்க கோவிந்தனின் முகம் கன்றிக் கறுத்துச் சிறுத்துப் போயிற்று.

சொல்லப் போனால் சாரூபாவுக்கே கொஞ்சம் பாவமாகக்கூட இருந்தது. ஆனால், அவளுடைய

தந்தையாகிய இந்தப் பேராசைக்கார மனிதனிடம் அவள் அணுவளவு இரக்கம் காட்டினால் கூட, சிந்துபாத் கிழவன் போல அவளது தலையில் ஏறி உட்கார, அவன் தயங்கவே மாட்டான். அப்புறம் வாழ்நாள் முழுக்க, அவனைச் சுமக்க வேண்டியதாகிவிடும்!

அதுவும் சும்மா அல்ல, மிகவும் கஷ்டப்பட்டு!

இவன் கொடுத்த துன்பம் தாளாமல் அவளுடைய அண்ணன் ஊரை விட்டு ஓடி வந்து என்ன மாதிரி ஆபத்தில் சிக்கிக் கொண்டாள்! சரியான சமயத்தில் அங்கிள் மட்டும் அவர்கள் இருவரையும் காப்பாற்றியிரா விட்டால், அவர்களைப் புதைத்த இடத்தில்... புல் என்ன மாபெரும் மரக் கூட்டமே வளர்ந்து, காடாகிப் போயிருக்கும்!

தேவையற்ற பெரு நாசம்!

அந்த மட்டும் தாயார், தன் கதையை வெளிப் படையாகச் சொல்லி, மகளிடமாவது துணிவை வளர்த் தாளே!

அதனால் அல்லவா, இந்தப் பதரிடமிருந்து அவ ளுடைய அருமை மகள் சாரூபா தப்பிகக முடிந்தது!

பெற்றவனும் மாற்றாந்தாயுடைய பிள்ளைகளும் விட்டால் போதும் என்று ஓடாத குறையாக வேகமாகச் செல்வதைப் பார்த்த சாரூபாவுக்கு உள்ளூர பெருமை யாகக் கூட இருந்தது. அவளைக் காலடியில் போட்டு துவைக்கலாம் என்று வந்தவர்களை துணிவோடு நின்று விரட்டி விட்டாளே!

தலை குனிந்து செல்கிறவர்களைப் பார்க்கும்போது, என்னவோ, தாயாருக்காகவும் பழி வாங்கிவிட்ட நிம்மதி ஏற்பட்டது.

கிட்டனைப் பார்த்து ''நீ கையில் கடப்பாரையுடனே வந்தது, வசதியாகப் போயிற்று கிட்டா. கடப்பாரை யால் அவர்களைத்தான் போடப் போகிறாய் என்று பயந்து ஓடி விட்டார்கள்!'' என்றுரைத்து புன்னகை பூத்தாள்.

அவனுக்கும் ஒரே சந்தோஷம் ''மண்ணை புரட்டி விட்டுக் கொத்திக்கிட்டிருந்தேன்மா. தம்பி வந்து கூப்பிட்டதும், அப்படியே ஓடி வந்தேனா, கடப் பாரையைக் கையோடுக் கொணர்ந்திட்டேன். ஆணாக்கா அதுவே நல்லதாப் போச்சுது!'' என்று சிரித்துவிட்டுத் தன் வேலையைப் பார்க்கப் போனான்.


அடுத்து திலீபனுக்கு நன்றி சொன்னாள் சாரூபா ''உன் கராத்தேக்கு ரொம்ப நன்றி திலீப். ஒல்லிப் பையன் என்று அலட்சியமாக வந்தவர்கள். உன் போஸைப் பார்த்தே பயந்து போனார்கள்! நல்லவேளை உன்னை 'ஃபூ' என்று துணிந்து ஊதிப் பார்க்கவில்லை. ஊதி யிருந்தால், பறந்து போய் எங்கே விழுந்திருப்பாயோ? எப்படியும் மற்றவர்களை விரைந்து கூட்டி வந்ததற்கும், மறுபடியும் உன் கராத்தே போசுக்கும் நன்றி!'' என்று நகைத்தவாறே கையை நீட்டினாள்.

நீட்டிய கையைப் பற்றி குலுக்கியவாறே ''ஒரு நாள் நிஜமான கராத்தே 'கட்' ஒன்று உனக்கு கொடுக்கிறேன், பார். அப்புறம் நான் வெறுமனே போஸ் கொடுப்பதாகச்

சொல்லி ஒருநாளும் கிண்டலடிக்க மாட்டாய்!'' என்றுரைத்து அவனும் சிரித்தான்.

வெளிக்கேட்டைத் தாண்டிச் செல்லும் போது ஏக்கமும் தவிப்புமாக அந்த வீட்டைத் திரும்பிப் பார்த்த கோவிந்தனின் கண்களில் இந்தக் கை குலுக்கலும் சிரிப்பும் பட அவன் நெஞ்சு எரிமலையாய்க் கனன்றது!

# 8



பெரிதான ஒரு வண்ணக் கனவோடு அந்த வீட்டுக்கு வந்தவன், கோவிந்தன்.

தினமும் கோழியும் கறியுமாகத் தின்ன வேண்டும். காரில் ஏறி ஊரைச் சுற்ற வேண்டும் என்றெல்லாம் பெரிய ஆசைகள் பல உண்டு.

காவேரியை மணந்து, மூன்று வருமானங்களைக் கையில் வைத்து செலவு செய்தபோது, அவனுமே சந்தோஷமாகத்தான் இருந்தான்.

ஆனால் காவேரியைப் பிரிந்த பிறகு, பெரிதும் கைக்கும் வாய்க்கும் போராட்டமாக இருந்த வாழ்வு, அவனுக்கு ஒரு போதும் பிடித்ததே இல்லை. குறைந்த பட்சமாகக் காவேரியின் வருமானமாவது கைக்கு வரும் என்றுதான் மறுபடி அவளை நெருங்க முயன்றான்.

ஆனால் அவளோ, ஊரைவிட்டே ஓடிப் போனாளே தவிர, அவனிடம் சரணடையவில்லை.

பிழைக்கத் தெரியாதவள் என்று எண்ணியதற்கு மாறாக, அவளும் கொழுத்த இரையைத் தேடிப் பிடித்து, கார் வேலையாட்கள் என்று போக வாழ்வு வாழ்ந் திருக்கிறாள் என்று அறிந்ததும் நெஞ்சு காந்தியது அவனுக்கு.

ஆனால், பெற்ற மகள் மூலமாக அவள் வாழ்ந்த அதே பெருவாழ்வைத் தானும் வாழலாம் என்று புரிந்து கொண்டதும், போகிறது கழுதை என்று, மறுமணம் புரிந்த காவேரியை மனதில் மன்னிக்கக்கூடச் செய் தான்!

சொல்லப் போனால் அப்படி அவள் பிடித்த பணக் காரனின் சொத்துதானே, அவனது சுகவாழ்வுக்கு அஸ்தி வாரமாக அமையப் போகிறது? இடைப்பட்ட வாழ்வு எப்படியோ போய்த் தொலையட்டும்.

ஆனால், அந்த வீட்டை வைத்து அவன் எழுப்பிய கனவு மாளிகை அடியோடு தகர்ந்ததைத்தான், அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லையே! இனிப் பழைய இழுபறி வாழ்வுதானே, அவனுக்கு எப்போதும்?

கட்டின புருஷனை விட்டு, இன்னொருத்தனுக்கு முந்தி விரித்த காவேரி, எல்லா சுகங்களையும் நன்றாக அனுபவித்துவிட்டு செத்திருக்கிறாள். அவனுடைய சொந்த மகளும், அத்தனை சுகங்களையும்

அனுபவிக்கிறாள். ஆனால் பெற்ற தகப்பனுக்கு மட்டும் ஒன்றும் கிடையாது என்று விரட்டி விட்டாள்! என்ன அநியாயம்!

குமுறிக் கொண்டே போனவனுக்கு, சாருபாவும் திலீபனும் கை குலுக்கிச் சிரித்த காட்சி, எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றியது போல ஆயிற்று!

அவனை வெளியேற்றியது பற்றித்தானே, இந்தக் கொண்டாட்டம்!

அடிப்பாவி! பெற்ற தகப்பன் நான் பார்க்க, கண்டவன் கையைப் பிடித்துக் குலாவுகிறாயா என்று, ஓங்கி ஓர் அறை வைக்கக்கூட, அவனால் முடியவில்லையே!

இதைச் சகித்துத்தான் இங்கே இருக்க வேண்டும் என்று நிபந்தனை வைத்திருந்தால், அதையும் கண்களை மூடிப் பொறுத்துப் போக, அவன் தயாராகத்தானே இருந்தான்! போன தடவை வந்தபோது, அது பற்றி ஜாடையாகக் குறிப்புக் கூடக் காட்டினானே!

ஆனால், அப்படிப்பட்ட பெற்றவனை, வயதானவன், கொஞ்சநாள் சுகமாக வாழட்டும் என்று எண்ணாமல் இரக்கமற்று விரட்டி விட்டாளே, ராட்சசி!

விரட்டிய பெருமையில் அவனோடு இளிப்பு வேறு! இதைச் சும்மா விடுவதா என்று கொதித்தான் கோவிந்தன்.

அவள் முகத்தில் இருந்து, இந்தச் சிரிப்பை அழிக்க வேண்டும்! அந்த ஆறுதலாவது அவனுக்குக் கட்டாயம் வேண்டும்!

எப்படி? எப்படி என்று அதே யோசனையாக இருந்த வனுக்கு, சாரூபாவைப் பிடிக்காத ஒரே ஒருவனது பெயர், ஒருவாறு நினைவு வந்தது.

அவன் ஒன்றும் அற்ப சொற்பமானவன் அல்ல! இன்றைக்கு எட்டி உதைக்கக் கூட சக்தியற்றுப் போன கோவிந்தனைப் போல அல்லாமல், மற்றவனது முடிவு கள் சாரூபாவை மிகவும் பாதிக்கக்கூடிய வலிமை வாய்ந் தவை. ஏற்கனவே பாதித்தும் இருக்கின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக தகுதியாக, அவனும் அந்தப் பிசாசு சாரூபாவை அடியோடு வெறுக்கிறவன்.

அந்தக் கழுதை காவேரியுடைய பின்னாள் புருஷன் சாந்தலிங்கத்தின் அலுவலகத்தைச் சுற்றி வந்து கோவிந்தன் சேகரித்த கதைகளில் பாதியளவே உண்மை யாக இருந்தாலும், அவன் சாரூபாவை அழிக்கத் துடித்துக் கொண்டிருப்பவன்!

மொத்தத்தில் கோவிந்தனின் இந்தப் பழிவாங்க படலத்துக்கு ஏற்ற கதாநாயகன்!

அவன்தான் சுதர்மன்!

சுதர்மனின் பெயர் நினைவு வந்ததும், கோவிந்த னுக்குப் பாதி உற்சாகம் திரும்பி விட்டது! இனி, சாரூபாவின் தூக்கத்தை நிச்சயமாகக் கெடுத்து விட லாம்!

அதனால், அவனுக்கு ஒரு லாபமும் இல்லாது போக லாம். ஆனால் சாரூபாவுக்குக் கஷ்டம்தானே, அந்த சுகமேனும் அவனுக்கும் கிடைக்கட்டும்!

பெற்ற மகளின் நிம்மதியை அழிப்பதற்காக கோவிந்தன் மிகவும் யோசித்துத் திட்டம் போட்டான்.

இயற்கையாகக் கோவிந்தனுக்கு நல்ல உடல் அமைப்புக் கிடையாது. வயது ஐம்பதைத் தாண்டப் போவதைத் தெளிவாகக் காட்டி விடும் தோற்றமே.

இப்போது இன்னும் கொஞ்சம் அதிக வயது போலத் தெரியுமாறு ஒப்பனை செய்து கொண்டதோடு, ஒரு கைத்தடியையும் வாங்கி லேசாக விந்தி நடந்தான்! கண்களையும் நன்றாகக் கசக்கி சிவக்கச் செய்தான்.

சோக உருவாக சுதர்மனைக் காணவேண்டி, அவனது அலுவலகத்தில் காத்திருந்தான்.

யார் என்று தெரிவிக்கப்பட்டபோது, அவனைச் சந்திக்க சுதர்மன் ஆவலாக இல்லை என்பதே, கோவிந்தனுக்கு சந்தோஷமாக இருந்தது. அவளுடன் நல்ல உறவில் இருந்திருந்தால், உடனே கூப்பிட்டிருப் பானே!

இருவருக்கும் இடையே, எவ்வளவு பகைமை இருக் கிறதோ, அவ்வளவுக்கு நல்லது! ஊதி விடுவது, இலகு வாக இருக்கும்!

இரண்டு மணி நேரம் காத்திருக்க வைத்து, சுதர்மன் அவனை அழைத்தபோதும், அவனுக்கு அதே மகிழ்ச்சி தான்.

சுதர்மனின் அறைக்குள் செல்லும்போதே ''ஐயா வணக்கம்'' என்று குனிந்து பெரிதாக ஒரு கும்பிடு போட் டான்.

எந்தவிதமான சலனமும் காட்டாமல் சிலை போல அமர்ந்திருந்தவனிடம் ''தயவு பண்ணி, இந்தத் தகப் பனின் பெயர் நாறாமல் காப்பாற்ற வேண்டும்'' என்று கெஞ்சி கேட்டுக் கொண்டான்.

அப்போதும் மேஜைக்கு அப்பால் அவனுக்கு எதிர்ப்புறமாக இருந்த நாற்காலியைப் பார்வையால் காட்டிவிட்டு, முகம் மாறாமல் சும்மாவே இருந்தான் சுதர்மன்.

'அடப்பாவி! உன் எதிரியைப் பற்றின விஷயம்டா! ஆஹா, அப்படியா? என்ன செய்தாள் என்று சொல் லுங்கள், அவளை உண்டு இல்லை என்று ஆக்கி விடு கிறேன்' என்று ஆவலாகக் கேளாமல் இப்படி அசமஞ்சம் போல் உட்கார்ந்திருக்கிறாயே என்று உள்ளூரப் பொருமியபோதும் அதை வெளிக்காட்டாமல் சோகப் போஸ் கொடுத்தான் கோவிந்தன்.

கைக்குட்டையை எடுத்து, கண்ணையும் துடைத்துப் பார்த்தான்.

சுதர்மன் ஒரு வார்த்தை கூட என்ன என்று கேளாமலே சும்மா இருந்ததோடு, பக்கவாட்டு சுவரில் மேலே மாட்டியிருந்த கடிகாரத்தை ஓரக் கண்ணால் ஒரு தரம் பார்க்கவும், கோவிந்தன் பயந்து போனான்.

ஒருவேளை, அந்த ப்யூன் சொன்னது அவ்வளவாக நிஜமில்லையோ? சாரூபா எக்கேடு கெட்டாலும், இவ னுக்கு அக்கறை இல்லையோ? சாரூபாவை ஒன்றுமே செய்ய முடியாதோ என்று கலங்கினான்.

அல்லது... ஒருவேளை, இவன் மகா அழுத்தக் காரனோ? சரக்கு மலிந்தால் சந்தைக்கு வந்தே தீரும். ஏதோ சொல்லத்தானே வந்திருக்கிறான்? சொல்லாமல் போக மாட்டான். எதற்கு அனாவசியமாக ஆர்வம் காட்டி மதிப்பேற்றுவது என்று நினைக்கிறானோ என்றும் தோன்றியது.

எப்படியும் சொல்லித்தான் தீர வேண்டும். இவன் முதலில் கேட்கட்டும் என்று பிகு பண்ணினால், சொல்ல முடியாமல் போனாலும் போகலாம். ஏற்கனவே ஒரு தரம் குறிப்பாய் மணியைப் பார்த்து விட்டானே, படுபாவி!

துக்கத்தினால் அடைத்துக் கொண்ட தொண் டையைக் கொஞ்சம் செறுமி சரிப்படுத்துவது போலப் பாவனை செய்துவிட்டு, கோவிந்தன் பேசத் தொடங் கினான். தொண்டையைத் தடவியவாறே, ''ரொம்பவும் மனசு கஷ்டம் சார். பெண்டாட்டி... அதான், என் பொண்ணோட அம்மாக்காரியே மோசம். எப்பவும் பணம், பணமின்னு பறப்பாள். கடைசியாக, வசதியாக ஆள் தேடி, வீட்டை விட்டே ஓடிப் போனாள். கண் காணாமல் போயிட்டதாலே ஏதோ ஆசிரமத்திலே சேர்ந்திட்டாள் அப்படீன்னு பொய் சொல்லி சமாளிச் சேன். அதனாலே வெளியே பெரிசாக அவமானம் ஆகவில்லை. ஆனால் அவள் ஆசைப்பட்ட மாதிரியே, பணம் கொழுத்த ஆளைப் பிடித்து, ரொம்ப சுகமாக வாழ்ந்திருக்கிறாள்னு இப்பத்தான் தெரிஞ்சுக்கிட்டேன்! எப்படியோ, அது கண் காணாமல் நடந்தது. போய்த் தொலையட்டும்!

''ஆனால் இந்தப் பொண்ணு செய்கிறதைப் பாருங்கள், தம்...'' என்று இழுத்தவன், சுதர்மனின் கண்கள் சிறு வெறுப்புடன் சுருங்குவதைக் கண்டதும் அவசரமாகத் திருத்திக் கொண்டான்.

''இந்த சாரூபா பண்ணுவதைப் பாருங்கள், சார். பத்திரிகையிலே வேலை என்றால், கமுக்கமாக அதைப் பார்க்க வேண்டியதுதானே? படத்தைப் போட்டு, அம்மாக்காரி பேர் போட்டு, விளம்பரப் படுத்தி விட்டாள். அக்கம் பக்கத்திலே உன் மகள்தான், போய்ப் பாரு என்று ஒரே பிடுங்கல்!

''எனக்கும் பிள்ளை மேலே பாசம்! பார்க்கலாம் என்று தேடிப் போனால்...'' என்று ஒரு கணம் பேச்சை நிறுத்தி சுதர்மன் முகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

எதிரில் இருந்தவனின் கண்களில் கவனம் கூடியதோ, என்று தோன்றினால், அப்போதும் சுதர்மன் வாய் திறந்து எதையும் கேட்டானில்லை.

சரியான கல்லுளி மங்கன் என்று மனதிற்குள் வைத படியே கோவிந்தன் தொடர்ந்தான். ''அங்கே போய்ப் பார்த்தால், கூடவே ஓர் ஒல்லிக் குச்சியை வைத்துக் கொண்டு கூத்தடிக்கிறாள், சார். ராத்திரி பகல் என்று இல்லை! எந்த நேரம் வேணுமானாலும் அந்தப் பயல் வருகிறான், போகிறான், கல்யாணம் பண்ணப் போகி றாயா என்று கேட்டால், வெறும் சினேகிதன் தான் என்கிறாள்! அதெல்லாம் பார்க்க நன்றாக இருக்காதம்மா, துணையாக வந்து இருக்கிறேன் என்றால் அவளது திட்டங்களுக்கு இடையூறாக இருப்பேன் என்று

எண்ணியோ, என்னவோ ஒரே பிடியாக மறுக்கிறாள், சார். நான் இந்தப் பக்கமே வரக் கூடாதாம்!

''அடித்து விரட்ட, அடியாள் கூட வைத்திருக்கிறாள். கூப்பிட்டதும் கடப்பாரை கம்பியோடு ஒருவன் வந்து நிற்கிறான். துணைக்கு வாட்ச்மேன் வேறே. அந்த ஒல்லிப்பிச்சே கராத்தே படித்திருக்கிறான், சார்! போஸ் கொடுத்துக் கொண்டு நிற்கிறான்!

''அவன் மட்டும் இல்லை! இன்னும் கண்ட விடலைப் பயல்களிடம் பழகுகிறாள். தாயைப் போலக் கொழுத்த இரை தேடிக் கொண்டிருக்கிறாளோ என்று எனக்கே ஒரு சமுசயம். மற்றபடி பெற்ற தகப்பன் கூட வந்து துணையிருப்பதை, எவளாவது வேண்டாம் என்று சொல்வாளா? அதுவும் இவ்வளவு தீவிரமாக!

''வெளியே கூட, அப்படி ஒரு பேச்சுத்தான் பரவியிருக்கிறது. மற்றவர்கள் ஜாடையாகப் பேசுவதைக் கேட்டால் தூக்குப் போட்டுக் கொண்டு சாகலாமா என்று இருக்கிறது! எப்படியோ, அவள் தாய் காவேரி பண்ணினதாவது வெளியே தெரிந்து நாறவில்லை. இந்தக் கழுதை... அய்யோ கடவுளே, என்னை இன்னும் உயிரோடு வைத்திருக்கிறாயே!'' என்றவன் மேலே பேச மாட்டாதவன் போலக் குனிந்து தலையைக் கைகளில் புதைத்துக் கொண்டு உடல் குலுங்கினான்.

சுதர்மன் எப்படி, என்ன செய்தானோ? யாரோ ஒருவன் உள்ளே வந்து, ஒரு குவளைத் தண்ணீரைக் கோவிந்தனின் முன் வைத்து விட்டுப் போனான்.

''அதைக் குடித்துவிட்டு, ஒழுங்காக உட்காருங்கள்'' என்ற சுதர்மனின் உணர்ச்சியற்ற குரலைக் கோவிந்தன் முதல் முதலாகக் கேட்டான்.

அவசரமாகத் தண்ணீரைக் குடித்துவிட்டு நேரே நிமிர்ந்து அமர்ந்தான்.

''இது உங்கள் மகளுக்கும் உங்களுக்கும் உள்ள தகராறு. இதை என்னிடம் ஏன் கொண்டு வந்தீர்கள்?'' என்று சுதர்மன் தொடர்ந்து கேட்கவும், வயதில் பெரியவன் திணறிப் போனான்.

இதற்கு என்ன பதிலைச் சொல்வது?

உனக்கு அவளைப் பிடிக்காது. எதிரிக்கு எதிரி நண்பன் என்ற முறையில், அவளுக்கு ஏதாவது கெடுதல் செய்வாய் என்ற எதிர்பார்ப்பில் உன்னைத் தேடி வந்தேன் என்று உண்மையைக் கூற முடியுமா? இவ்வளவு நேரம் போட்ட பொறுப்பான தந்தை வேஷம் பொய்யாகி போகும்.

அதன் விளைவாக, அவனையே கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினாலும் தள்ளக்கூடும்!

வேறே என்ன சொல்வது என்று வேகமாக யோசித்து ''இஇந்தக் கம்பெனி கட்டுப்பாட்டில்தானே, எல்லாம் நடக்கிறதாம்! அப்பாவைக் கூட்டி வைத்துக் கொண்டு ஒழுங்காக இருக்கிறதானால் இரு. இல்லை, முடியாது என்றால் நடையைக் கட்டு என்று, அவளை நீங்கள் மிரட்டலாமே, சார்! அதற்காகத்தான் வந்தேன் சார்'' என்று வாய்க்கு வந்த ஒரு விளக்கத்தைச் சொல்லி சமாளித்தான்.

இன்னும் யோசித்தபோது, அது நல்ல ஐடியாவாகவும் அவனுக்குத் தோன்றிற்று.

ஆனால் சுதர்மன் உதட்டைப் பிதுக்கினான்.

''சாரூபாவுக்குப் பதினெட்டு வயது தாண்டி, மேலும் ஐந்தாண்டுகள் சென்று விட்டதாக, அலுவலகக் குறிப்பு சொல்கிறது. நாட்டை ஆளும் அரசாங்கத்தையே தேர்ந் தெடுக்கும் அறிவும் உரிமையும் உள்ளவள். அவளைக் கட்டுப்படுத்த வேறு யாருக்கும் உரிமை கிடையாது. பெற்ற தந்தையாகிய உங்களுக்கும் கூட கிடையாது! அதே போல இந்த அலுவலகத்துக்கும் அப்படித்தான்! அதனால் நீங்கள் கிளம்பலாம்'' என்றான் உதாசீனக் குரலில்.

யாரிடம் உதாசீனம்? சாரூபா மீதா? அல்லது அவளை ஒன்றும் செய்ய முடியாமல் மற்றவர்களை முடக்கி வைத்திருக்கும் சட்டத்தின் மீதா?

அப்படியானால் சாரூபாவை ஒண்ணுமே பண்ண முடியாதா?

பெற்ற தகப்பன் என்ற மரியாதையே இல்லாமல், வீட்டை விட்டு வெளியேற்றிய அரக்கி!

அங்கே ஒற்றைப் படுக்கையறைக் குச்சு வீட்டில் கோவிந்தன் குடும்பத்தோடு கஷ்டப்படும்போது, இவள் தன்னந்தனியாக இந்தப் பெரிய வீட்டில் கூத்தடிப் பாளா?

அநியாயம் இல்லை?

அவ்வளவு பெரிய வீட்டில், தந்தை ஒண்டிக்கொள்ள ஒரு சிறு இடம் கொடுக்கவும் மனம் வரவில்லை. இரக்கமற்று விரட்டி விட்டாள்!

தங்க சுரங்கமான அந்த வீட்டை பெற்ற மகளின் சுயநலத்தால், கோவிந்தன் இழந்து விட்டானே! அந்த வீட்டை வைத்து எத்தனை கனவு கண்டான்!

இனி, அந்தப் பெரிய வீட்டை முழுதாக அவளே ஆளப் போகிறாள்! கண்ட பயல்களை வரவழைத்து அவர்களோடு கூத்தடிப்பாள்!

ஏன்? அவசரத்தில் வாயை விட்ட தகப்பனின் யோசனையைப் பின்பற்றி, சம்பாதிக்கக் கூடச் செய்யலாம்! எவ்வளவு பணம் எவ்வளவு பெரிய வீடு! வீ...டு!

உள்ளூரப் புலம்பியபடியே எழுந்த கோவிந்தனின் கிரிமினல் மூளை, மகளைப் பழி வாங்குவதற்கு, இன்னொரு குறுக்கு வழியைக் கண்டு பிடித்தது.

"சா...ர்! இன்னும் ஒன்றே ஒன்று சார்!" என்றான் அவசரமாக.

ஒரு வேக மூச்செடுத்துப் பின் "சொல்லுங்கள்" என்றான் சுதர்மன் சுருக்கமாக.

"அதாவது சார், இது ரொம்ப பெரிய விஷயம்..." என்று பெரிய பீடிகையுடன் தொடங்கியவனின் பேச்சில், சுதர்மன் குறுக்கிட்டுப் பேசினான்.

"பாருங்கள் கோவிந்தன். எனக்கு நிறைய வேலை இருக்கிறது. தகப்பன் மகள் தகராறில், அமைதிப்

புறாவாக அலைகிற வேலையெல்லாம் என்னால் செய்ய முடியாது. முக்கியமாக வேறு ஏதேனும் சொல்ல வேண்டியிருந்தால், இந்த அலங்காரப் பூச்சு வேலை இல்லாமல் விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்'' என்றான் கறார்க் குரலில்.

''சார் சார், இது ரொம்ப முக்கியமான விஷயம் சார். உஉங்கள் நிறுவனத்தின் நல்ல பேரையே பாதிக்கக் கூடியது. அதனால்தான். இதோ சொல்லி விடுகிறேன் சார். இந்தப் பிரச்சினையை, இப்படிப் பாருங்கள் சார். அந்த வீடு உங்க பொறுப்பிலே இருக்கிற வீடு, சாரூபா அங்கே தனியே வசிக்கிறவள்! அங்கே வந்து போகிற வர்கள் நிறையப் பேர். பபலான தொழில் நடப்பதாக அசிங்கப் பேர் வந்து விட்டால், பொறுப்பை கையில் வைத்திருக்கிற உங்களுக்கும்தானே சார் கேவலம்? உங்களுக்குத் தெரிந்துதான். ஏன், நீங்களே வந்து போவதாகக் கூட... இஇல்லை சார். நீங்கள் மமகா உத் தமர். அப்படி ஆள் கிடையாது என்று எனக்கு நன்றாகத் தெரியும். நிநிச்சயம் சார்! சத்தியம்!'' என்று அவனைப் பற்றிய வார்த்தைகளில் கோபமாக எழுந்த சுதர்மனின் காலில் விழாத குறையாக அவனைச் சமாதானப் படுத்தினான் கோவிந்தன்.

ஆனால் பேச்சின் இழையை விடாமல் தொடர்ந்து ''ஆனால் சார், நரம்பில்லாத நாக்கு யாரைப் பற்றி என்று இல்லாமல், எப்படி வேணுமானாலும் பேசும் சார். அதனாலே தான், அப்படிச் சொல்லும்படி ஆயிற்று!'' என்று விளக்கிவிட்டு மேலும் தொடர்ந்தான்.

''அந்த மாதிரிப் பேச்சு உங்கள் நிறுவனச் சொத்தைப் பற்றி, அதுவும் உங்கள் நிர்வாகத்தில் இருக்கிறதைப் பற்றி வரலாமா, சார்? அதனால் சாரூபாவை கூப் பிட்டுக் கண்டித்துச் சொல்லுங்கள் சார். இந்த வீட்டின் பேர் கெட்டுப் போகக் கூடாது. ஒன்று, துணைக்கு உன் தகப்பனை கூட வைத்துக் கொள். அவரை வேண்டாம் என்று விரட்டினால், நீயும் வீட்டை விட்டு நடையைக் கட்டு என்று மிரட்டுங்கள்... தயவு பண்ணி ஏதாவது பண்ணுங்கள் சார்'' என்று கெஞ்சலில் முடித் தான்.


ஆனால், கல் கூடக் கரையுமாயிருக்கும் போல! இந்த சுதர்மனின் மனம் சற்றும் இளகாத பாறாங்கல்லாக இருந்தது.

''உங்கள் விருப்பத்துக்கெல்லாம் நிறுவனம் ஆடாது. போய் வாருங்கள். இனி இதுபோலச் சொத்தையான உங்கள் சொந்த விஷயங்களை எடுத்துக் கொண்டு இங்கே வந்து என் நேரத்தை வீணாக்காதீர்கள், போங்கள்'' என்று சொல்லி அவனை இரக்கமற்று வெளியேற்றி விட்டான்.

தோற்றுப் போய்த் தலையை தொங்கப் போட்டபடி அங்கிருந்து கோவிந்தன் வெளியேறினான்.

ஆனால், சுதர்மனின் நெஞ்சில் எப்படிப்பட்ட தீயை ஏற்றி வைத்திருக்கிறோம் என்று மட்டும் அவனுக்குத் தெரிந்திருந்தால், சொந்தப் பயன் எதுவும் இல்லாவிட் டாலும், சாரூபாவைப் பழி வாங்கி விட்ட திருப்தியேனும் அவனுக்குக் கிடைத்திருக்கும்!

# 9



கோவிந்தனின் வார்த்தைகளை சுதர்மன் அப் படியே நம்பி விட்டான் என்று சொல்ல முடியாது. தோட்டத்தில் நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த கிட்டனிடம், பூச்செடிகள் பற்றிய பேச்சோடு, அன்று சாரூபாவின் வீட்டில் நடந்தது பற்றியும் விசாரித்து அறிந்து கொண் டான்.

நிச்சயமாக சாரூபா தகப்பனாரை மிரட்டியே விரட்டி யிருக்கிறாள். ஏன்?

எந்தவிதமான உறவும் இல்லாமல் தனியே வாழ்கிற பெண் அவள்.

வள்ளியம்மை, தோட்டக்காரன், வாசலில் காவலுக்கு நிற்கும் வாட்ச்மேன் உட்பட எல்லோருமே அவளிடம் மிகுந்த அன்பு உள்ளவர்களே என்றாலும், வேலையாள் என்கிற நிலையில் நின்று அவளிடம் பழகுகிறவர்கள் தான். இன்னமும் கொஞ்சம் உரிமையோடு பழகுகிற வள்ளியம்மையும், சாரூபாவின் கண்ணசைவில் பணிந்து போகிறவளே.

அவள் என்னவோ பட்டத்து இளவரசி என்பது போலவே மதிப்புக் கொடுப்பார்கள்.

ஆனால் உண்மையான உறவுக்கான ஏக்கம், சாரூபா வுக்கு இருக்கத்தானே செய்யும்? இருந்தால், பெற்ற தந்தை தேடி வரும்போது அவனை இப்படி வேண்டாம் என்று விலக்குவானேன்?

சாரூபா அவளது மூன்றாவது வயதில் இங்கே வந்தவள், பெற்றோருக்கிடையே என்னென்ன நடந் திருந்தாலும், அதைப் பற்றி தெளிவாக, அவள் அறிந் திருக்க வாய்ப்பில்லை.

பிறகுமே, தாயார் என்ன சொல்லியிருந்தாலும் இரண்டாவது ஒருவனைக் கணவனாக ஏற்றவள், அவளது முதல் கணவனைப் பற்றிய வர்ணனை, முழு உண்மையாக இருக்கும் என்று, இந்த வயதை அடைந்த பிறகும், மகள் எப்படி நம்புவாள்?

அதிலும், அவள் கோவிந்தனின் வாரிசு! தானாடா விட்டாலும் சதை ஆடாதா? ஆடியிருக்க வேண்டாமா? அதுகூட இல்லாமல் எப்படி?

மாற்றாந்தாய்ப் பிள்ளைகளைப் பார்த்ததும் மனது வெறுத்து விட்டதா?

இது நல்ல நியாயம்! இவளுடைய தாய் இரண்டாவது திருமணம் செய்ததில் தப்பில்லை. ஆனால் தந்தை மறுபடி மணந்து பிள்ளை பெற்றது மட்டும் தாங்க வில்லையாம்! என்ன மாதிரி நியாயம் இது?

ஆனால் சாரூபா என்றைக்குத்தான் நியாயமாக நடந் திருக்கிறாள்?

அன்று பதினெட்டு வயதிலும் அப்படித்தான்! இன்று இருபத்தி மூன்று வயதிலும் அதே தன்மைதான்!

பழைய நினைவில் சுதர்மனின் முகம் கனன்று சிவந்தது.

அந்தக் கணக்கு வேறு, முடிக்கப்படாமல் அப்படியே இருக்கிறது! எந்தக் கணக்கையும் முடிக்காமல் இடையிலேயே விட்டு விடுகிறவன் அல்ல இந்த சுதர்மன். இதையும், நிச்சயமாக விடவே மாட்டான்! சீக்கிரமே அவளுக்கும் புரியும்!

அவளது காருக்காக அவளைச் சுற்றினானாமா? இருக்கட்டும், இருக்கட்டும்! அவளை... பழைய நினைவிலிருந்து மீண்டு, இயல்பு நிலையை அடைவதற்கு, அந்த அறையின் குறுக்கிலும் நெடுக்கிலும் சுதர்மன் பலமுறை நடக்க வேண்டியிருந்தது.

சாரூபாவைச் சந்திக்கச் செல்லுமுன், கோவிந்தனின் குற்றச்சாட்டில் நம்பகத்தன்மை குறித்து, சதர்மன் வெகுவாக ஆராய்ந்தான்.

அந்த வீட்டுக்குத் திலீபன் அடிக்கடி வருவது பற்றிய புகார் உண்மையே.

குறைந்த பட்சமாக வாரத்துக்கு மூன்று நாட்கள் திலீபனோடு சந்திப்பு நடந்தது. அதிலும் வள்ளியம்மை மகளைப் பார்க்கச் செல்லும் நாட்களில் அவன் கட்டாயமாக, இந்த வீட்டில்தான் இருந்தான். சில நாட்களில் வள்ளியம்மை வெளியே போவதும், திலீபன் வருவதும் அடுத்தடுத்தே நடந்தன.

திலீபனுக்கு காபி பலகாரம் வைத்துக் கொடுத்து விட்டுக் கூட, வள்ளியம்மை செல்வதுண்டு.

வெய்யில் சரிந்து வள்ளியம்மை திரும்பி வரும் வரையும் கூட, அவன் அங்கேயேதான் இருந்தான். ஒரு நாள் வள்ளியம்மை மிகவும் தாமதமாகத் திரும்பி வந்தபோது, அவன் இரவிலும் அங்கேயே தங்கி விட்டானாம்.

இதைக் கேட்டதிலிருந்து, சுதர்மனின் ரத்தம் கொதி நிலையிலேயே இருந்தது.

இந்த மாதிரி நேரத்தில் அவளுடைய தந்தை போல யாராவது கூட இருந்தால், யாராவது அவளைத் தப்பாகப் பேச முடியுமா?

ஆனால், தந்தை இருந்தால் தப்பாக நடக்கவும் முடியாதே!

அதற்காகத்தான் இங்கே தங்க விடாமல் கோவிந்தனை விரட்டினாளா? ஆனால் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று அவள் வாழ, இந்த சுதர்மன் அனுமதிக்க மாட்டானே!

பெரும்பாடு பட்டு, மனதைச் சமனப்படுத்திக் கொண்டு சுதர்மன் மறுபடி தீவிரமாக யோசித்தான்.

என்னதான், திலீபனோடு தவறான சகவாசம் என்று கோவிந்தன் சொன்னாலும், அதை முழுதாக நம்ப, சுதர்மனால் முடியவில்லை. 'நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நன்னடை'யுமாகக் கல்லூரி நாட்களில் அவள் வலம் வந்த தோற்றங்கள் அவனது மனதிலிருந்து இன்னமும் மறையவில்லை. மறையக்கூடும் என்ற நம்பிக்கையும் இல்லை!

ஆனால் இருக்கவே இருக்காது. எல்லாம் பொய் என்று ஒரேடியாக ஒதுக்கவும் அவனால் முடியவில்லை. அதற்கு ஒரு காரணமும் இருந்தது.

அவன் மட்டுமே அறிந்த ரகசியம் அது. அந்த ரகசியம் வெளியாகி விடவே கூடாது என்பதன் காரணமாக, அவன் யாரிடமும் அது பற்றி மூச்சுகூட விட்டதில்லை! இனியும் அப்படித்தான் இருக்கப் போகிறான்.

அத்தோடு கூடுதல் காரணமாக, அவளுடைய தாய்! மனைவியாக ஒருவனோடு வாழ்ந்து, அவனுக்கும் ஒரு குழந்தை பெற்ற பிறகும், சுக வாழ்வுக்காக அந்த கணவனை விட்டு விலகி, இன்னொரு பணக்காரனோடு வாழ்ந்தவள்தானே? அவளைப் பார்த்து வளர்ந்த மகளுக்கு மட்டும் 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்று எப்படித் தெரியும்?

அந்த வார்த்தைக்கு அர்த்தம் என்ன என்றே புரியுமோ, என்னவோ?

'தாயைப் போல பெண், நூலைப் போல சேலை' என்று முன்னவர்கள் சும்மா சொல்லவில்லை! அவளுடைய தந்தை. அந்தக் கோவிந்தன் சொன்னது போல, இவளும் 'உறுமீனு'க்காகக் காத்திருக்கிறாள் போல!

கூடவே இந்தக் காலப் பெண் அல்லவா? திரு மணமே இல்லாமல், அந்தத் திலீபனோடு கூத்தடிக் கிறாள். சே!

ஆனால், சாரூபா ஒழுங்கற்ற வாழ்வு வாழ்வதை, அவனால் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இந்த

வாழ்வு எங்கே கொண்டு போய்விடும் என்று அவளுக்குப் புரிய வைக்க வேண்டும்!

அதற்காக சொன்னால் புரியாத அவளுக்குப் பயங்கரமாக ஒரு சூடு வைக்க வேண்டும்!

சூடுபட்ட திருட்டுப் பூனை பாலைக் கண்டாலே பயந்து ஓடுகிற மாதிரி, சாரூபாவும் தப்பு வாழ்க்கை பக்கம் திரும்பவே அஞ்ச வேண்டும்!

விடை இதுதான் என்று முடிந்து விட்டபோதும், அதற்கேற்ற கணக்கை உருவாக்குவதில், அவனால் முழு வேகத்துடன் ஈடுபட முடியவில்லை. நாளை நாளை என்று, அதற்கான திட்டமிடலை ஏனோ மனம் தள்ளிப் போட்டுக் கொண்டே இருந்தது.

இன்று சும்மாவே வேலை அதிகம். இது பற்றித் தெளிவாக யோசிக்க முடியாது. அடுத்த வாரம் தொழில் கோர்ட்டில் வரும் வழக்குக்கு வேண்டியதை முதலில் பார்த்து விடலாம். ஐந்து நாட்களில் வரும் அம்மாவின் பிறந்த நாள் பரிசை முதலில் வாங்கிவிட்டு அப்புறம் பார்க்கலாம். அதற்கு முன் கண்டதை நினைத்து மூடைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது.

இப்படி ஏதேதோ காரணங்களை உண்டாக்கி, சாரூபாவுக்குப் புத்தி புகட்டுவதைப் பற்றி நினைப்பதையே தள்ளிப் போட்டுக் கொண்டிருந்தான் அவன்.

ஆனால் 'குரங்கை நினையாமல் மருந்து சாப்பிட' முயன்றவனின் கதைபோல, சுதர்மனின் மனம், அவளிடமே நின்று அழிச்சாட்டியம் செய்தது. கூடவே, மேலே ஓர் எட்டு நகரவும் அடியோடு மறுத்தது!

இதற்கிடையே சுதர்மனுடைய தாயாரின் பிறந்த நாள், நாளை என்கிற அளவுக்கு நெருங்கியது. வழக்கமாகத் தாயாருக்கு சுதர்மன் அளிக்கும் பரிசு, வியந்து பாராட்டுவதோடு, அதைப் பார்த்துப் பார்த்து சுகந்தி மனம் மகிழக் கூடியதாகவும் இருக்கும்! நூதனமான சரவிளக்கு, பெண்டுலம் வைத்த ரோமன் எண்களோடு கூடிய கடிகாரம், ஃபிலிகிரி வேலைப் பாடுகளுடன் வெள்ளி இழைகளால் பின்னப்பட்ட பழங்கால மணிபர்ஸ்... இப்படித் தேடித் தேடி வாங்கு வான்.

இம்முறையும் அப்படி தேட முயன்றான்தான். ஆனால் எதுவும் மனதிற்குப் பிடிக்காமல் போகவே, நகைப் பரிசு கொடுப்பதாக முடிவு பண்ணிச் சிலதை தேர்ந்தெடுத்தான்.

மகன் வாங்கிக் கொடுத்து விட்டால், அது பிடிக்கா விட்டாலும், சுகந்தி அப்படியே வைத்துக் கொள்வாள். மாற்ற மாட்டாள். எனவே அவன் தெரிவு செய்து வைத்தவற்றில் அன்னைக்குப் பிடித்ததை வாங்குவ தாகக் கடையில் சொல்லிவிட்டு, விஷயத்தைச் சொல்லி தாயையும் அனுப்பினான்.

''அம்மாவுக்காக செலவு முடியாதபடி, உன் மன தையும் நேரத்தையும் தன் வசம் இழுத்துக் கொண்ட அப்சரஸ் யாரடா?'' என்ற கேலி செய்தபோதும் மகன் சொன்னவாறே பிடித்ததை எடுத்துக் கொண்டு வந்த சுகந்தி, பரபரப்புடன் மகன் வரவுக்காக காத்திருந்தாள்.

இரவு மகன் வந்து, உடம்பு கழுவி உண்ண அமர்ந்ததும் அவசர அவசரமாகத் தன் சேதியைச் சொன்னாள்.

''டேய் கண்ணா, உனக்கு ஒரு நல்ல சேதி சொல்ல வேண்டும், நான் அவளைப் பார்த்தேன், பையா. அவள்'' என்றவளின் பேச்சில் குறுக்கிட்டு ''எவள் அம்மா?'' என்று கேட்டபடி இன்னும் கொஞ்சம் சாம்பாரை இட்டிலி மேல் ஊற்றிக் கொண்டான் மகன்.

''எவளா? போடா போ! சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக, அப்பாவும் நானும் வெளிநாடு செல்லுமுன், உன் மருமகள் என்று ஒரு பெண்ணின் படத்தை செல்லில் காட்டினாயே, அவள்மா! அப்புறம் காணாமல் போனதாகச் சொன்னாயே, அவளேதான். நகைக்கடைக்கு எதிர்ப்புறமாக ஒரு கலைப்பொருள் விற்பனைக் கடையில் நின்று கொண்டிருந்தாள். செல்லில் பார்த்ததைவிட அதிக அழகாக, கம்பீரமாக... சாரூபா என்ற பெயருக்கு ஏற்றபடி, எப்படி இருந்தாள் தெரியுமா? கையெடுத்துக் கும்பிடலாம்! அவள் வேலை செய்யும் இடம் கூட, அந்தக் கடைக்கே போய்க் கேட்டு வந்து விட்டேன். நாளைக்கு அவளைப் போய்ப் பார்த்து...'' என்ற தாயின் பேச்சில் சுதர்மன் மீண்டும் குறுக்கிட்டான்.

''அம்மா ப்ளீஸ்.... ஐந்து ஆண்டுகளுக்கு முன் உலகம் அறியாத சின்ன வயது எனக்கு. அந்தப் பெண்ணைப் புதிதாகப் பார்த்ததும், கொஞ்சம் கிறங்கிப் போனேன். இப்போது அந்த முகமே எனக்கு மறந்து விட்டது.

விடுங்கள்'' என்று முடித்தவன் ''முக்கியமான விஷ யத்துக்கு வாருங்கள். நாளைய பிறந்தநாள் பாப்பாவுக்கு எந்த நகை ரொம்பப் பிடித்தது? ரூபி அட்டிகையா? அல்லது எமரால்டு வைர மாலையா?'' என்று பேச்சை மாற்ற முயன்றான்.

பிள்ளையின் முயற்சி புரியவும், சுகந்தி கடுப்பானாள் ''எந்த நகை என்றாலும் அதை என் மருமகளின் கழுத்தில் போடத்தான் வாங்கப் போகிறேன். எமரால்டு மாலை அவளுக்கு எடுப்பாக இருக்கும் என்று தேர்ந் தெடுத்திருக்கிறேன். என்ன சொல்கிறாய்? நாளைக்கே போய்ப் பார்ப்போமா?'' என்று அதிலேயே நின்றாள் அன்னை.

நேரடி மறுப்பு தவிர, வேறு எதுவும் இப்போது வேலைக் காகாது என்று உணர்ந்து ''இல்லை அம்மா. இப்போது அவளிடம் அந்த மாதிரி நினைப்பே எனக்கு இல்லை'' என்றான் மகன்.

அவனிடம் இந்தப் பதிலை எதிர்பார்த்திராத சுகந்தி, சற்று நேரம் அதிர்ந்து போய் நின்றாள்.

மகனின் திருமணம் எப்போதும் அவளது ஆசைக் கனவு.

இருபத்தி மூன்று வயது என்பது, ஆண்களுக்குச் சிறு வயதுதான். ஆனால் அப்போதுமே ஒரு பெண்ணின் படத்தை மகன் காட்டியபோது, அவளுக்கு மகிழ்ச்சி யாகத்தான் இருந்தது. ஆனால் சுந்தரத்துக்கு அது பிடிக்க வில்லை.

மகனின் மேல் படிப்பு முடிந்து, வேலை அல்லது தொழில் என்று வாழ்க்கையில் அவன் நிலைக்கு வருமுன், அவனது கவனத்தைக் கலைக்கும் விதமாக திருமணம் செய்யக்கூடாது என்று அவர்தான் அவளைத் தடுத்து நிறுத்தினார். அல்லது கிளம்பிக் கொண்டிருந்த பயணத்தை நிறுத்திவிட்டு, மகனுக்காக பெண் கேட்டுப் போக, சுகந்தி தயார்தான்.

அழகான பெண், இருவருக்கும் அழகழகாகப் பிள் ளைகள் பிறக்கும். தூக்கிக் கொஞ்சலாம் என்று அதற்குள் பல கனவுகள் காணத் தொடங்கி விட்டவள், அவள்.

கணவரின் சொல்லை மீற முடியாமல் அப் போதைக்கு, அந்தப் பயணத்தைத் தொடர்ந்தபோதும், திரும்பி வந்ததுமே, அதே நினைவாக, மகனிடம் அந்தப் பெண்ணைப் பற்றி விசாரித்தாள்.

ஆனால் அவளுக்கு ஏமாற்றம் அளிக்கும் விதமாக, அந்தப் பெண் எதற்கோ ஊருக்குப் போனவள், திரும்பி வரவே இல்லை. அவளைப் பற்றி ஏதேதோ கதைகள் சொல்கிறார்கள். அதனால் விட்டு விடுவோம் என்று சுதர்மன் முடித்து விட்டான்.

அத்தோடு படிப்பிலும் அவன் ஏதோ குளறுபடி செய்து, தந்தை கோபமாக இருந்தார். ஆனால் கரெஸ்சில் படித்து அந்தக் கோர்சை முடித்து மேலே சட்டமும் படித்து தேர்ந்து, அந்தக் கோபத்தை தீர்த்து, அவரது பாராட்டையும் பெற்று காட்டினான் மகன்.

வீட்டுக்குள் இந்த களேபரத்தில், அந்தப் பெண்ணின் பேச்சை எடுக்கவே முடியாமல் சுகந்தியுமே விட்டு விட்டாள்.

அத்தோடு அமெரிக்க, இந்தியப் பங்குதாரர்களின் ஒரு தகராறை சுந்தரம் தீர்த்த விதம் சிறப்பாக இருந்ததால், அதுபோன்ற பல பிரச்சினைகள் அவரிடம் வரலாயின. விக்கிரமாதித்தனின் காடாறு மாதம் நாடாறு மாதம் கதை போல, இங்கும் அங்குமாக அவர் வசிக்கத் தொடங்கினார்.

சுகந்தி கணவரோடு செல்வதும் உண்டு. இங்கே மகனுடன் தங்குவதும் நடப்பதுதான். அப்போதெல்லாம் திருமணம் செய்யும்படி மகனை அவள் வற்புறுத்துவதும், இல்லாத காரணங்களைச் சொல்லி அவன் நழுவுவதும், வீட்டில் அடிக்கடி நடப்பது.

சுந்தரம் வெளிநாடு செல்லும் சமயங்களில் சட்ட ஆலோசனை நிறுவனத்தில் அவரது பொறுப்பை மகனிடம் கொடுத்ததில், அவனும் திறமையாகச் செயல் பட்டான். எனவே, முழுப் பொறுப்பையுமே சுதர்மனிடம் கொடுத்து விட்டார்.

இந்தச் சமயத்தில்தான் சட்டநாதன் ஓய்வு பெற்று, சாந்தலிங்கத்தின் நிறுவனம் சுதர்மனின் நிர்வாகத்தின் கீழ் வந்தது. அதன் சொத்து பத்துக்களை ஆராயும்போது, சாரூபாவைப் பற்றிய பொதுவான விவரங்களையும் அவன் அறிய நேர்ந்தது.

இந்த நிலையில் இருப்பவள்தானா, அவனை அப்படிப் பேசினாள்! வியப்பும் கோபமுமாக, முன்

னாளில் தான் பட்ட வேதனைக்கு பழி வாங்க லானான்.

சட்ட நிறுவனத்தின் மூன்றாவது பங்குதாரருடைய பேத்திதான் மாலினி. பேத்திக்கும் சுதர்மனுக்கும் முடிச்சுப் போடும் ஆசையை, அவர் ஜாடைமாடையாகத் தெரிவித்திருந்தார்.

இந்த முறை தன் பிறந்த நாள் பரிசாக, சீக்கிரமே மருமகளைக் கொண்டு வருமாறு மகனிடம் வாக்கு கேட்க, சுகந்தி எண்ணியிருந்தாள்.

ஒரு நல்ல சகுனம் போல சாரூபாவையே பார்க்க நேரிடவும், அதுவும் நகை வாங்கப் போன இடத்தில் பார்க்கவும் அவளுக்கு ஒரே சந்தோஷம்.

இவளைக் காணோம் என்றுதானே, மகன் சொன் னான். அடி மனதில் சாரூபாவை வைத்துக் கொண்டு தான், வேறு யாரையும் மணம் புரிய மகன் மறுக்கிறான் என்ற சந்தேகம், அவளுக்கு ஏற்கனவே இருந்தது.

எனவே, முதலில் அந்தக் கலைப் பொருட்கள் கடைக்குச் சென்று, சாரூபாவைப் பற்றிய விவரம் திரட்டினாள்.

கிடைத்த விவரங்கள், அவளுக்குத் திருப்தியாகவே இருந்தன. பிள்ளைக்கு பரிசு கொடுக்கும் மனநிலை யில்தான், சாரூபாவைப் பற்றி, அவள் பேசத் தொடங் கியதே. ஆனால், அவனது பதில் அவளுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது, வருத்தத்தையும்!

எப்படியும், இன்றைக்கு இந்தப் பேச்சை பாதியில் விட்டுவிடக் கூடாது என்று தீர்மானித்து, ''ஏன்?'' என்று மகனிடம் கேட்டாள் சுகந்தி. ''முதலில் அவள் மேல் ஆசைப்பட்டாய்தானே? இப்போது ஏன் பிடிக்க வில்லை? இடையில் என்ன நடந்தது?'' என்று சட்ட நிபுணர்களின் குடும்பத்தைச் சேர்ந்த சுகந்தி, மகனை விசாரணை செய்தாள்.

தாயின் இயல்பு, சுதர்மனுக்குத் தெரியும். ஒழுக்கத் தவறு மட்டும் அவளால் ஒத்துக் கொள்ள முடியாதது. எனவே ''அவள் தப்பானவள் என்று தெரிய வந்தது'' என்றான் சுருக்கமாக.

''நான் நம்ப மாட்டேன்!'' என்றாள் சுகந்தி பளிச் சென்று ''அவள் முகத்தில் தப்பு செய்யாத கம்பீரம் இருக்கிறது, சுதா. யாரோ ஏதோ சொன்னதை நம்பி நீ தப்பாக முடிவெடுக்காதே, கண்ணா!'' என்று மகனுக்கு எடுத்துரைத்தாள்.

தலையசைத்து ''இல்லை அம்மா, எனக்கு நிச்சய மாகத் தெரியும். இதனால் இந்தப் பேச்சை விடுங்கள்'' என்று எழுந்து கைகழுவப் போனான்.

திக்கென்றது சுகந்திக்கு, சாரூபாவை கைகழுவி விட்டேன் என்று, மகன் சொல்லாமல் சொல்கிறானோ? அவனே, அவளை வேண்டாம் என்றால் கட்டாயப் படுத்த முடியாது. அதற்காக அவனைச் சும்மா விட்டு விடவும் முடியாது.

சாரூபா இல்லாவிட்டாலும்...

''அப்படியானால் அந்த மாலியையாவது மணந்து கொள். அவள் தாத்தா ரொம்பக் கேட்கிறாராம். அப்பா சொன்னார்...''

''அம்மா உங்களுக்கு நல்ல பேச்சே வாயில் வராதா? அந்தப் பெண்ணை மருமகளாக உங்களால் நினைக்க முடிகிறதா? விடுங்களம்மா!''


''ச்சு போடா! அப்பா வேறு வெளிநாட்டில், பிறந்த நாள் பரிசாக ஒரு மருமகளை அடையாளம் காட்டுவாய் என்று ஆசையாக எதிர்பார்த்தால், நீ தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறாய்! எனக்கு இந்தப் பிறந்த நாளே பிடிக்கவில்லை போ. அடுத்த முறை, நான் அப்பா வுடனேயே போய்விடப் போகிறேன். உன்னிடம் எதிர் பார்த்து எதிர்பார்த்து ஏமாறுவதற்கு... டேய், அப்புறம் மறக்குமுன் சொல்லி விடுகிறேன். அங்கே ஃப்ளோரி டாவில் அப்பா சட்டநாதன் அங்கிளைப் பார்த்தாராம். உன்னிடம் சொல்லச் சொன்னார். எல்லாம் பிரச்சினை யற்றுப் போகிறதா என்று கேட்கச் சொன்னாராம். தேவை என்றால் பேசச் சொல்லி, ஒரு நம்பர்... அந்த டெலி போன் டைரியில் எழுதி வைத்திருக்கிறேன். பார்த்துக் கொள். நான் படுக்கப் போகிறேன்'' என்று எழுந்த தாயைப் பிடித்து இழுத்து வந்து, கெஞ்சி கொஞ்சிச் சாப்பிட வைத்து, அதன் பின்னர் படுத்துத் தூங்குமாறு அனுப்பி வைத்தான் பிள்ளை!

சற்றுத் தளர்ந்த நடையுடன் தாய் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றவனுக்கு சாரூபாவின் நினைவு வந்தது!

தப்பு செய்யாத கம்பீரமாமே! அப்படி எண்ணித் தானே, அவனும் ஏமாந்தான்!

இருக்கட்டும் இனி, தப்பே செய்யத் துணிவிராதபடி ஆக்கி விடுகிறேன் என்று சூளுரைத்தான் சுதர்மன்.

# 10



இத்தனை ஆண்டுகள் கழித்தும் தாயார் சாரூபாவை நினைவில் வைத்திருப்பாள் என்று, சுதர்மன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அவன் அவளை மறக்கவில்லை என்றால், அவனுக்கு வேறு மாதிரி எண்ணம் இருந்தது. காதல் தோல்வி, பழி வெறி என்று, அவளைப் பற்றி நினைத்துக் கொண்டே இருந்தான். ஆனால், அன்னை?

இன்று பார்த்தது போல இன்னொரு தரம் நிகழ்ந்தால், சாரூபாவின் வீட்டுக்கே போய், நடந்தது பற்றி விசாரிக்கத் தொடங்கி விடுவாள்.

அதற்கு முன், சாரூபாவின் வாயைத் திறக்க முடியாமல் அடைக்க வேண்டும்!

அவளது திமிரை அடக்க வேண்டும்!

முதலில் அவளைச் சகாயமற்றவளாகச் செய்ய வேண்டும்.

கிட்டனுக்கு அலுவல் இடத்தில் அதிக வேலை கொடுத்து, வீட்டுக்குப் போக விடாமல் தடுக்கலாம்.

வள்ளியம்மை வாரம் ஒரு நாள் மகள் வீட்டுக்குப் போய் விடுவாள்.

ஆனால் இந்த திலீபன்? எந்தக் கணக்குக்கும் அடங் காமல் அவளைச் சுற்றிக் கொண்டே அலைகிறானே! அவனை விலக்குவது எப்படி?

சும்மாவா சுற்றுகிறான்?

அதை நினைக்கும்போதே, அவனை அடித்து உதைத்துக் கைகால்களை உடைத்து கொன்றுவிட வேண்டும் போலப் பழைய கற்கால எண்ணங்கள், சுதர்மனின் மனதில் பொங்கின.

ஆனால் பின் விளைவின்றி அவைகளை நடை முறைப் படுத்துவதற்கு இது பழைய கற்காலம் அல்லவே! நினைத்ததைச் செய்ய முடியாமல் நாகரீகம் மண்ணாங்கட்டி என்று, மனிதனுக்கு எத்தனை தடைகள்! அவைகளுக்கேற்றபடி தான் மனிதன் மூச்சு விடவே முடிகிறது! அது போலவே வேறு வகையில் தான் திலீபனை, அவனது வழியிலிருந்து விலக்க வேண்டும்.

அதே யோசனையாக இருந்தவனுக்கு நல்லதொரு வழியும் கிடைத்தது.

அவர்களது சட்ட ஆலோசக நிறுவனத்தின் வாடிக்கை யாளர் ஒருவர், பெரிய ஸ்டார் ஹோட்டல் ஒன்று கட்டிக் கொண்டிருந்தார். கிட்டத்தட்ட முடிக்கிற நிலை.

எல்லாம் சகல வசதிகளுடன் கூடிய ஏசி அறைகள், ஹோட்டலின் ஒருபுறம் முழுவதும் கடலை நோக்கி அமைந்திருந்ததால், நல்ல அழகான இயற்கை காட்சி இருந்தது. ஆனால் மறுபுறம் நகர்புறம் பார்த்தவாறு இருந்ததால், வந்து தங்குவோருக்கு சிறு குறை தோன்றக்கூடும் என்று ஹோட்டல் உரிமையாளர் எண்ணினார்.

இது பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோதுதான், சுதர்மனுக்கு இந்த ஐடியா தோன்றியது.

நகர்ப்புறம் நோக்கி இருந்த அறைகளின் உட்புறச் சுவர்களில் மனதைக் கவரும் விதமாக, அழகான காட்சி களை சித்திரங்களாகத் தீட்டி விட்டால்? சித்திரங்களை ரசிப்பதில் வேறு குறைபாடுகளை நினைக்கவே தோன் றாதே!

விஷயத்தை அவன் விளக்கிய விதத்தில், ஹோட்டல் உரிமையாளருக்கு அந்த யோசனை மிகவும் பிடித்துப் போய்விட, ஓவியன் பெயரையும் அவனிடமே கேட் டார்கள். திலீபனின் கண்காட்சிகளைப் பற்றித் தெரி வித்து, மேற்கொண்டு அவர்களை நேராக திலீபனிடமே பேசி முடிவு செய்யச் சொல்லிவிட்டு, சுதர்மன் விலகிக் கொண்டான்.

இரு சாராருக்கும் ஒத்துப் போய், ஒப்பந்தம் கையெழுத்தாகி, இரு துணை ஆட்களுடன், விரைவி லேயே திலீபன் வேலையையும் தொடங்கி விட்டான்.

குறிப்பிட்ட நாளுக்குள் முடிக்க வேண்டிய வேலை என்பதால் இரவு பகலாகத் திலீபன் ஹோட்டலிலேயே கிடந்தான்.

துணை ஆளாகச் சாரூபாவை அழைப்பானோ என்று சுதர்மனுக்கு சற்று உதைப்புதான். அப்படி நடந்தால், சுதர்மனுக்கு இந்த முயற்சிய வீணாகிப் போகும்!

சாரூபா இப்போது வேறிடத்தில் வேலை பார்த்தாலும், ஒரு கெடுவுக்குள் முடிக்க வேண்டிய வேலை, பத்து நாட்கள் லீவு போட்டுவிட்டு வந்து உதவி செய் என்று கூப்பிடலாம்தானே?

ஆனால் இரவு, பகலாகத் தனித்தனி அறைகளில் இருந்து வேலை செய்யும்போது, பெண்களின் பாதுகாப்பைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டு இருக்க முடியாது என்று சொல்லி, தன் ஆண் தோழர்களையே திலீபன் தன்னோடு கூட்டிச் சென்றான்.

விவரம் அறிந்தபோது, அவ்வளவு புத்தி இருக்கிறதா என்று எண்ணிக் கொண்டான் சுதர்மன்.

அடுத்து வள்ளியம்மை மகள் வீட்டுக்குச் சென்ற நாளில் கிட்டனுக்கு அலுவலகத்தில் பங்களூருவில் இருந்து வந்த புது விதமாக குரோட்டன் செடிகளை நட வேண்டிய வேலை இருந்தது. நடைபாதை, காரோடும் பாதைகளின் ஓரங்கள் முழுவதிலும் செடிகளின் அழகைப் பார்த்து, சந்தோஷமாக வேலை செய்தான் கிட்டன்.

அவனோடு அந்தச் செடிகளுக்கு உரம், செடிகளை நட வேண்டிய விதம் பற்றி எடுத்துச் சொல்லிவிட்டு சுதர்மன் கிளம்பினான்.

சாருபாவின் வீட்டுக் காவலாளிகளுக்கு, அவனது லீவு நாட்கள், சம்பள உயர்வு பற்றி பேச, சுமார் பதினோரு மணியளவில் வருமாறு, அலுவலகத்திலிருந்து அழைப்பு போயிருந்தது.

அதன்படி அவன் கிளம்புவதைத் தூரத்திலிருந்து பார்த்துவிட்டு, சற்றுப் பொறுத்து சுதர்மன் காரை வீட்டை நோக்கி மெதுவே செலுத்தினான்.

பெரும்பாலான நாட்கள் சாருபாவின் வேலை வீட்டில்தானே?

அன்றும், அவள் வீட்டிலே இருந்து, பத்திரிகை வேலையை முடித்து லாப்டாப் மூலம் அனுப்பி விட்டு தொட்டியில் இங்குமங்கும் பாய்ந்து நீந்திய தங்க மீன்களைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

பார்க்கும்போதே அடுத்த ஓவியத்துக்காக ஓர் ஐடியாவும் அவளுள் உருவாயிற்று.

அதுபற்றிச் சின்னதாக, அவள் ஸ்கெட்ச் போட்டுக் கொண்டிருந்தபோது, அழைப்பு மணி ஒலியெழுப்பியது.

பொதுவாக வீட்டின் கதவை சாருபா பூட்டி வைப்பதில்லை.

கலைத்துறைத் தோழர் தோழியர் அடிக்கடி வந்து போவதால், பூட்டிய கதவு தேவையற்ற ஆர்வத்தைத் தூண்டக்கூடும் என்பது அவளுக்கு.

அத்தோடு வாயிலில் காவலன், தோட்டத்தில் கிட்டன், வள்ளியம்மை, சுற்று வேலை செய்யும் பெண்

என்று பலர் இருப்பதால், பாதுகாப்பு பற்றி, அவள் கவலைப்பட்டது கிடையாது.

இன்றுதான், கிட்டன், வள்ளியம்மை, இல்லாமல் வாயில் காவலனும் அலுவலகம் செல்ல நேர்ந்ததால், வெளிக்கதவைச் சாத்தி வைத்திருந்தாள். அழுத்திச் சாத்தினால் தானே பூட்டிக் கொள்ளும் கதவு.

எழுந்து போய்ப் பார்த்தால், சுதர்மன் நின்றிருந் தான்.

என்ன சொல்லி கொக்கரிக்க வந்தானோ என்று எண்ணியவாறே கதவைத் திறந்து வழிவிட்டாள் அவள்.

அந்த மட்டும் அந்த அலட்டல் பெண் மாலினியைக் கூட்டி வரவில்லை!

உள்ளே செல்லும்போதே ''என்ன விஷயம்?'' என்று அவன் வந்த காரணம் கேட்டாள்.

அவளது கேள்வியைக் கவனியாதவன் போல ''என்ன வீடு ஒரே நிசப்தமாக இருக்கிறது. யாரையும் காணோமே?'' என்று அதுதான் முக்கியம் போல, சுதர்மன் விசாரித் தான்.

''வள்ளியம்மை மகள் வீட்டுக்குப் போயிருக்கிறாள். மற்ற இருவர் பற்றி, நீங்கள்தான் சொல்ல வேண்டும்'' என்றாள் சாரூபா சிறு குத்தலாக.

அலுவலக நிர்வாகம் என்ற சாட்டையைச் சுழற்றி, கிட்டனையும், இன்று காவலாளியையும் அலுவலகத் துக்கு இழுத்திருப்பவன், சுதர்மனேதானே? செய்வ

தையும் செய்துவிட்டு, அதென்ன எதுவும் தெரியாத மாதிரி, யாரையுமே காணோமே என்பது?

அவளது குத்தலை அலட்சியம் செய்து, ''ஏன் அவர்கள் மட்டும்தான் இங்கே இருக்கிறவர்களா? திலீபன் இங்கே கூடாரமே அடித்துத் தங்குகிறானாமே! அது எனக்குத் தெரியாது என்றா நினைக்கிறாய்?'' என்று ஏளனக் குரலில் சுதர்மன் கேட்டான்.

''கூடாரம் அடித்து தங்குவதா? நல்ல தளம் போட்ட வீடு! உறுதியான மேல்கூரை இருக்க, யாராவது கூடாரம் போடுவார்களா? வேடிக்கைதான். ஆனால் அவன் இங் கேயே தங்குவதாகக் கூறினீர்கள் என்றால், அதுதப்பு!'' என்றாள் அவள் சற்று அக்கறையற்ற குரலில்.

அவ்வளவு நேரம் இருந்த இலகுத் தன்மை மறைந்து, சுதர்மனின் முகம் கடுத்தது. ''சும்மா உண்மையை மறைக்காதே. முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயல்வது, முட்டாள்தனம். பெரும்பான்மை நேரம், அவன் இங்கேயே பழி கிடந்தது, எனக்கும் தெரியும்!'' என்றான் கடுமையான குரலில்.

அவளும் அலட்சியமாக தலையை சிலுப்பி ''மறைப் பானேன்?'' என்று கேட்டாள். ''திலீப் அடிக்கடி, அதிக நேரம் இங்கேயேதான் இருந்தான். சொல்லப் போனால் அதன் காரணமே நீங்கள்தான். கிட்டனை அலுவலக வேலைக்கு நீங்கள் இழுத்ததில் இருந்தே, அதிகப்படி பாதுகாப்புக்காக, அவ்வப்போது திலீபன் இங்கே வரு வான். தேவையில்லை என்று சொன்னாலும் கேட்பது இல்லை. அதிலும் வள்ளியம்மை மகள் வீட்டுக்குச்

செல்லுகிற நாளில் அவள் திரும்பி வரும் வரை வீட்டை விட்டு அசைய மாட்டான்'' என்று நிமிர்வுடனேயே விவரம் தெரிவித்தாள்.

''இது நல்ல கதையாக இருக்கிறதே! என்று உதட்டைப் பிதுக்கினான் சுதர்மன். ''இந்தக் கதையை என்னை நம்பச் சொல்கிறாயா?'' என்று குரலிலேயே மறுப்பைக் காட்டினான்.

ஒரு அலட்சியத் தோள் குலுக்கலுடன் ''சொன்னது உண்மை. நம்புவதும் நம்பாததும் உங்கள் விருப்பம்!'' என்றாள் அவள் சுருக்கமாக,

அவன் இன்னமும் அதிக ஏளனத்துடன் ''அவ்வளவு கடமை உணர்ச்சி உள்ளவன், கைக்கு காசு வரும் என்றதும் பறந்து விட்டான் போல!'' என்று குத்தலாகக் கேட்டான்.

ஒரு கணம் பேசாமல் அவனைக் கூர்ந்து பார்த்தாள் சாரூபா.

பார்த்துவிட்டு ''ஓ, உங்கள் வேலைதானா, அதுவும்'' என்று ஏளனமும் அலட்சியமுமாக.

தொடர்ந்து ''ஆனால் எதற்காக? ஓ! அபிமன்யுவைப் போல என்னை சகாயமற்றுத் தனித்து நிற்க வைக்கிறீர் களாக்கும். நல்ல யோசனைதான். ஆனால் சுதர்மன், உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? என்னைப் பொறுத்தவரையில் உங்களது இந்த சூழ்ச்சிக்கு ஒரு மிகப்பெரிய நன்றிதான் செலுத்துவேன். பாவம், எங்களில் திலீப் மட்டும் சரியான வருமானம் இல்லாமல்

கொஞ்சம் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தான். அவனது திறமையைக் காட்டும் வாய்ப்போடு பணமும் வருகிறது என்று, எவ்வளவு சந்தோஷப்பட்டான் தெரியுமா? அவன் மட்டுமல்ல, நாங்கள் எல்லோருமே! அதிலே இன்னும் ஒரு நன்மையாக, அந்த மாதிரி ஹோட்டல்களில் தங்கக் கூடிய மேல் மட்டத்து மனிதர்களிடையே அவன் பெயரும் பரவும் என்பது ஒரு பெரிய போனஸ்! எனக்கும் ரொம்ப ரொம்ப சந்தோஷமே. அவன் சார்பாக உங்களுக்கு ரொம்ப ரொம்ப நன்றி!'' என்றவள் அடக்க மாட்டாமல் நகைத்தாள். எள்ளல்தான், அவனைத்தான் எள்ளி நகையாடினாள்.

அந்தச் சிரிப்பில், சுதர்மனின் வெறி இன்னமும் அதிகமாயிற்று.

எகத்தாளமா? இந்தச் சிரிப்பை அழிக்கிறேன் பார் என்று மனதிற்குள் சூளுரைத்தவன், தன் பழி வாங்கு படலத்தை செயல்படுத்தத் தொடங்கினான்.

‘‘அந்த திலீபனுக்காக நன்றி செலுத்துவது எல்லாம் சரிதான் ஆனால், நீ? உன் நிலைமை என்ன? என்னவோ உதாரணம் காட்டினாயே, அபிமன்யு போல என்று, மிகவும் சரியான உதாரணம். போர்க்களத்தில் தனியாக மாட்டிக் கொண்ட அவனைப் போல, நீயும் இப்போது தனியாகத்தானே இருக்கிறாய்? அபிமன்யுவுக்கு உயிர் போயிற்று. உனக்கும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம், தெரியுமா?'' என்றான் இறுகிய குரலில்.

என்னவோ சாருபாவின் வயிற்றுக்குள் சில்லென்றது.

தன் கலக்கத்தை வெளிக்காட்டாமல் ''நான் தனியாக இருப்பது யாருக்கும் தெரியாது'' என்றாள் பதிலுக்கு.

காத்திருந்தவன் போல, ''எனக்குத் தெரியுமே!'' என்றான் ஒரு மாதிரி எக்காளக் குரலில்.

இவன் என்ன சொல்ல வருகிறான்? புரியாத திகைப்புடன் சாரூபா அவனைப் பார்த்தாள். சுதர்மனின் கண்களில் ஏன் இந்தப் பயங்கர ஒளி?

அவளது திகைத்த பார்வையில் உரக்கச் சிரித்தான் அவன். மீண்டும் எக்காளமே!

''ஆமாம், வெளிக் காவல்காரன் கூட இல்லாத தனிமை. இங்கே என்ன நடந்தாலும் யாருக்கும் தெரியப் போவது இல்லை. இது, தப்பான உன் வாழ்க்கை முறை என்ன மாதிரி ஆபத்து என்று திமிர் பிடித்த உனக்குப் புரிய வைக்க, எனக்கு ஒரு நல்ல வாய்ப்பு!''

என்ன வாழ்க்கை முறை? இதில் என்ன தப்பு இருக்கிறது?

ஒன்றும் புரியாமல் ''என்ன உளறுகிறீர்கள்?'' என்று கேட்டாள் அவள்.

''உளறவில்லை, பெண்ணே. உளறவில்லை. மனம் போன போக்கில் உன் அம்மா மாதிரி நீயும் வாழ முடியாது என்று, பிறவிக்கும் மறக்காதபடி உனக்கு அறிவுறுத்தவே வந்தேன்...'' என்றவனை இடைமறித்து ''நிறுத்துங்கள்! என் அம்மா பற்றி பேச, உலகத்தில் யாருக்கும் தகுதியில்லை'' என்று கத்தினாள் அவள்.

''ஹூம்!'' என்றான் அவன் அலட்சியமாக, ''காக்காயைக் கறுப்பு என்று சொல்ல என்ன தகுதி வேண்டும்? பணத்துக்காக கட்டிய கணவனை விட்டு, இன்னொருவனோடு வாழ்ந்த கேவலமான ஒருத்தி...''

'சுளீர்' என்ற சத்தத்தில்தான் அவள், அவனை அடித்திருப்பது, இருவருக்குமே புரிந்தது.

சுள்ளென்று எரிந்த சிவந்திருந்த உள்ளங்கையைப் பார்க்கையில், அவனுக்கு எப்படி வலித்திருக்கும் என்று சாரூபாவுக்குத் தோன்றத் திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

எண்ணித் திட்டமிட்டு வந்தவன்தான், சுதர்மன். ஆனால் ஏதோ ஒரு தடை அவனைத் தயங்க வைத்துக் கொண்டே இருந்தது.

கன்னத்தில் சுரீரென்று விழுந்த அறை, அந்தத் தடையை உடைத்துவிட, ''ஏய், என்னையா அடித்தாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்!'' என்று ஆத்திரத்துடன் அவளைப் பற்றினான்.

''சீ விடுங்கள் என்னை!'' என்று அவனை உதற முயன்றவளை அடக்கி ''விடுவதற்காகத் தொடவில்லை. உனக்கு தண்டனை கொடுக்க வேண்டாமா?'' என்றான் அவன்.

என்ன திமிர் இருந்தால், அவளைத் தொடுவான் என்ற ஆத்திரத்தில், ''தண்டனையா? அதைக் கொடுக்க நீங்கள் யார்?'' என்று சீறினாள் சாரூபா.

''நீதி, நியாயத்தை யார் வேண்டுமானாலும் கடைப் பிடிக்கலாம்'' என்று பதில் கூறியவாறே அவன் அத்து

மீறிய விதத்தில் அவனது நோக்கம் புரிந்துவிட, அவள் கொதித்துப் போனாள்.

''சீ! நீதியும் நியாயமுமா? உங்களைப் போன்றவர்களுக்கு அது வேறா?'' என்று கொதிப்புடன் முழு பலம் கொண்டு போராடி அவனிடமிருந்து ஒருவாறு விடுபட்டு விலகி, ''வெறி பிடித்த மிருகத்தனமான தரக் குறைவான தப்புக்கு, தப்பு செய்யும் ஆசைக்கு இப்படி ஒரு பெயர் கொடுப்பீர்கள் போல?'' என்றாள் அரு வருப்புடன்.

அவளை நெருங்கியபடியே, ''ஆனால், எங்கே போய் நிற்பாய் என்று உனக்குத் தெரிய வேண்டாம்?'' என்று கேட்டான் அவன்.

''எனக்குத் தெரிய வைக்க நீ யாரையா?'' என்றாள் அவள் வார்த்தையால் சுளீரென்று.

''நான் யாரென்றா... என்னையா யாரென்று கேட்டாய்?'' என்று சீறியவனின் பேச்சை, அவள் பொருட்டாகவே மதிக்கவில்லை.

தொடர்ந்து கொதிப்பைப் பொருமித் தீர்த்தாள் ''நீதியாம்! நியாயமாம்! அதற்கொரு கேவலமான தண்டனையாம்! உன் நீதி நியாயத்தின் தண்டனை என்ன? என்னை அசிங்கப்படுத்துவது தானே? அப்படி என்னை கேவலப்படுத்தும்போது கூடவே நீ நாசமாக மாட்டாயா? தப்பான ஒருத்திக்கு. இந்த மாதிரி தண்டனை கொடுத்தேன் என்று உன் மனைவியிடம் போய்ச் சொல்வாயா? உன்னை மணக்கப் போவதாக

கூடவே அலைகிறாளே, அவளிடம் உன்னுடைய இந்தக் கேவலமான தண்டனை முறையைப் பெருமையாக அறிவிப்பாயா?'' ஏக வசனத்தில் நெருப்பு மழை கொட்டிற்று.

''அவளை நான் மணக்கப் போவது இல்லை.''

''அந்த மட்டும் அவள் பிழைத்தாள்!'' என்றாள் சாரூபா. ''ஆனால் உங்களுக்கு அவளில்லாவிட்டால், இன்னொருத்தி. எப்படியும் திருமணத்துக்கு முன்பே, நீ களங்கப்பட்டவன்தானே? அதை, நெஞ்சை நிமிர்த்தி, இப்படித் தண்டித்தேன் என்று, நாலு பேரிடம் சொல்வாயா? ஏன் இது போல ஓர் ஆண் மிருகத்தைப் பார்த்து, இப்படி தண்டனை கொடுத்தேன் என்று அவள் சொன்னால் ஆஹா எப்பேர்ப்பட்ட நியாயவாதி என்று மாலை போட்டு மரியாதை செய்வாயோ?''

பொறுக்க மாட்டாமல் ''போதும் வாயை மூடு!'' என்று கத்தினான் சுதர்மன்.

ஆனால், பொங்கி வரும் பெரு வெள்ளத்தைக் கைகளால் தடுக்க முடியுமா? சாரூபாவின் பேச்சு நிற்கவில்லை.

''எதற்காக மூடுவது? பத்திரிகையில் படித்திருப்பீர்களே, காதலனோடு இருந்த பெண்ணுக்கு தண்டனை, யார் வேண்டுமானாலும் அவளை அசிங்கப்படுத்தலாம் என்று, கட்டப் பஞ்சாயத்தில் அனுமதி கொடுத்ததாக, பெரியவன் சின்னவன் என்று இல்லாமல், அத்தனை நாய்களும் பாய்ந்திருக்கிறார்கள். இது தண்

டனையா? இன்னொரு பெண்ணைத் தொட்டுப் பார்க்கும் வெறி. வெறியைத் தீர்க்கும்போது அவனுமே களங்கப்பட்டவன்தானே? இதை எண்ணிப் பார்க்க வேண்டாம்?

''கற்பு நெறி என்று சொல்ல வந்தார். இரு கட்சிக்கும் அதைப் பொதுவில் வைப்போம்' என்று பாரதியார் எழுதியிருக்கிறாரே, படித்ததில்லை?

''தண்டனையாம், தண்டனை! அப்படித் தண்டனை கொடுத்த பிறகு மனைவியை அணுக அவனுக்கு என்ன தகுதி ஏது? நேரடியாகச் சொல்வதானால், எவளையும் மணப்பதற்கே, உங்களுக்குத்தான் தகுதி ஏது?'' என்று பொரிந்து கொட்டினாள் சாரூபா.

அவளது கேள்விக்குப் பதில் சொல்ல மாட்டாமல் ''என் திருமணம் என் சொந்த விஷயம், அதை நீ பேசக்கூடாது!'' என்று அவளை அடக்க முயன்றான் சுதர்மன்.

''அதே போல, என் வாழ்வும் என் விஷயம்தான். தலையிட யாருக்கும் உரிமை கிடையாது. வெளியே போங்கள்!'' என்று கட்டளையிட்டாள் அவள்.

''நான் போய் விட்டால் தீர்ந்ததா? என்னைப் போல யார் வேண்டுமானாலும் வரக்கூடும் என்பதைப் புரிந்து கொண்டு பேசு!'' என்று அதட்டலாகவே கூறியபோதும், சுதர்மனின் சுதி இறங்கிப் போயிருந்தது.

''அப்படி வருகிற நாய்க்கு, இந்தக் கத்தி பதில் சொல்லும்!''

எடுத்ததே தெரியாத லாவகத்துடன், உயர்த்தி தூக்கிய அவளது கையில் கூர்மையான கத்தி ஒன்று மின்னியது. சற்றும் தளராத இறுகிய பிடி!

அந்தக் கத்தியை வினாடிக்குள் வெகு வேகமாக, பழக்கப்பட்ட லாவகத்துடன் அவள் எடுத்ததைப் பார்த்த சுதர்மன் திகைத்து நின்றான்.

காரணம், அவள் காட்டிய கத்தி மட்டுமல்ல. ஓர் இக்கட்டான சமயத்தில் கூட, அவனிடம் அந்தக் கத்தியை அவள் நீட்டவில்லையே!

குழப்பத்துடன் தலையைக் கோதி விட்டவன், புருவ மத்தியில் முடிச்சுடனேயே திரும்பி, வாயிலை நோக்கிச் சென்றான்.

கதவருகே சென்றதும் நின்று ''கதவை உட்புறமாகப் பூட்டிக்கொள். சற்று நேரத்தில் வாட்ச்மேன் வந்து விடுவான்'' என்றவன் திரும்பிப் பாராமலே அங்கிருந்து வெளியேறிச் சென்று விட்டான்.

கார் கிளம்பிய சத்தத்தில் சற்றுச் சுரணை வர, சாரூபா ஓடிப் போய்க் கதவைச் சாத்தினாள். அத்தோடின்றி மேலும் கீழும் இருந்த கொண்டிகளையும் இழுத்து மாட்டி வைத்தாள்.

எந்தக் கணம், இவன் எப்படி மாறுவான் என்று எப்படிச் சொல்வது? அவள் கதவைத் திறக்க மறுத்தால் பயன்படுத்த என்று அலுவலகத்தில் பத்திரமாக வைத்திருக்கும் இன்னொரு சாவியைக் கூடக் கையோடு எடுத்து வந்திருக்கலாம்.

கதவைப் பூட்டிவிட்டுத் திரும்பிச் செல்லும்போது தான் கால்கள் வலுவிழந்து நடுங்குவது, அவளுக்குப் புரிந்தது. சட்டென அருகில் கிடந்த சோபாவை எட்டிப் பிடித்துக் கொண்டு, கை பலத்தில் மெதுவே நகர்ந்து சென்று அமர்ந்தாள்.

ஏன் இப்படி? அதுவும் திடீரென்று?

சுதர்மன் இந்த அளவுக்கு இறங்குவானா?

பழி தீர்ப்பதற்காக, கண்காட்சிக்கு அவளது சித் திரங்களை எடுத்துப் போக முடியாமல் செய்து, அவளது பொருளாதார நிலைக்கு பெரிய அடி கொடுத்தான் உண்மையே. மோசமான எதிரி என்று அவன் வாயா லேயே சொன்னான்.

ஆனால்.. ஆனால் அது பலமான அடியே தவிர, கேவலமானது அல்ல!

இந்த மாதிரி சாக்கடைத்தனம், அவனிடம் எப்படி வந்தது? கால நேரத்தைக் கணக்கிட்டால், இதில், தந்தை கோவிந்தனின் பங்கு இருப்பதை ஊகிக்க முடிந்தது.

அவனை இங்கே தங்க விடவில்லை என்றானதும், அதற்கு பழி வாங்குவதாக எண்ணி, ஏதோ சகுனி வேலை செய்திருக்கிறான். அதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் இந்தச் சிறு வயதிலேயே, இவ்வளவு வெற்றி பெற்றவனாக வாழுகிற சுதர்மனுக்கு, அந்தக் கோவிந் தனின் தரம் கொஞ்சமுமா தெரிந்திராது?

தெரியாமல் போகட்டும், எதற்காகவுமே சுதர்மன் இந்த அளவு இறங்குவானா?

இந்தக் கேள்விதான், சாரூபாவை மிகவும் பாதித்தது.

ஆனால் எந்த அளவுக்கும் இறங்கக்கூடியவனே என்று, அவன் நேரடியாகக் காட்டிவிட்ட பிறகு, இந்தக் கேள்வியே பெரிய முட்டாள்தனம்!

என்னவோ, பாரதியாரையும், பத்திரிகைச் செய்தியையும் கேட்டதில் மனம் மாறி, இப்போது திரும்பிப் போயிருக்கிறான். இன்னும் யாரோ ஏதோ சொல்லி, அதற்காகத் தண்டிக்கிறேன் என்று மறுபடியும் வந்து நிற்க மாட்டான் என்று என்ன நிச்சயம்?

மறுபடியும் வாட்ச்மேன் வாசலில் நின்றதும் அவளுக்கு நிம்மதியைத் தரவில்லை. அவனது ஊதியம் சுதர்மனின் பொறுப்பில் இருந்துதானே வருகிறது? எங்காவது போ என்றால், போய்விடப் போகிறான். போய்த்தானே ஆக வேண்டும்?

அவளுக்காக அதை மறுத்து, வேலையைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்று அவனுக்கு என்ன தலையெழுத்து?

இந்த நிலை அடியோடு மாற வேண்டும். அதற்கு வேறு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இங்கிருந்து கிளம்பி விடலாமா என்று சாரூபா தீவிரமாக யோசித்தாள். ஆனால் வேறு எங்கே போய்த் தங்குவது? எப்படியும் தனியாக இருக்கக்கூடாது. மகளிர் விடுதி எதிலேனும் தங்கலாம் என்றால், அங்கே படம்

வரைவதற்கான தனிமையோ, அமைதியோ கிடைக் காது. கை நீட்டி ஓர் இடத்தில் ஊதியத்தை வாங்கிக் கொண்டு, அரை குறையாக வேலை அவளால் செய்ய முடியாது!

ஃப்ளாட் என்றால் கூட, முன்பணமும் வாடகையும் நிறையக் கொடுத்தாக வேண்டும்!


அவளது தற்போதைய வருமானம், அதற்கு ஈடு கொடுக்காது.

தற்காலிகத் தீர்வாய், அடுத்த வாரம் வள்ளியம்மை யுடைய மகள், பிள்ளைகளோடு தாய் இருக்கும் இடத்துக்கு வந்து தங்கிவிட்டுப் போனாள்.

மகளும் பேரப்பிள்ளைகளும் வந்து போகச் செலவுக்கு கொடுத்து, பண்டம் பலகாரங்களும் வாங்கிக் கொடுத்த சாரும்மாவிடம், வள்ளியம்மைக்கு அன்பும் பக்தியும் பெருகியது.

ஆனால், அதனால் எல்லாம் ஒரு பயனும் இல் ல்ாமல், சாருபாவின் பிரச்சினை தீர்க்கப்படாமல் அப்ப டியே இருந்தது!

## 11



சுதர்மனின் மனமும் சூறாவளி வீசும் சமயத்துக் கடலாய் கொந்தளித்துக் கொண்டேதான் இருந்தது.

பழிவெறியில் என்ன மடத்தனம் செய்ய இருந்தான்?

அவள் என்னமாக அதைத் தடுத்தாள்! எப்படிப் பேசினாள். எல்லாமே இதயத்திலிருந்து வந்த வார்த்தைகள்! ஏன் அந்தச் செய்தியைப் படித்துவிட்டு, அவனுமே அப்படித்தானே ஆத்திரப்பட்டான். அவனைப் போலவே கொதித்திருக்கிறாளே! ஒத்த மனமாய் யோசிப்பவள் எப்படி, இப்படி வாழ முடியும்?

வாய்ப்பே இல்லை!

அத்தோடு உண்மையைச் சொல்வதானால், அவனது அடி மனதில் இருந்தது பழிவெறியே அல்ல. கண்மண் தெரியாத பொறாமை!

ஐந்து ஆண்டுகளாக நீறு பூத்த நெருப்பாய் அவன் மனதில் கனன்று கொண்டே இருந்தது. அநியாயமாகப் பழித்தாளே என்ற கோபம் மட்டுமல்ல, சாரூபா மீது அவன் கொண்டிருந்த காதலும்தான்.

அழியாமல் நிலைத்திருந்த அந்த நேசத்தின் விளைவுதான், திலீபனோடு உறவாடுகிறாள் என்றதும் பொறாமைத் தீயாக மாறி, அவளையே எரிக்கத் துணிந்திருக்கிறது!

சாரூபா் கத்தியை எடுத்த லாவகமும், அதைப் பிடித்து நின்ற திடமும்!

தாயார் சொன்னது போல, அந்த நிமிர்வு தப்பு செய்தவர்களுக்கு வராது!

சாரூபா விஷயத்தில் அவன் அறியாத ஏதோ இருப்பதாக, சுதர்மனுக்கு இப்போது உறுதியாகத் தோன்றியது.

சுமார் இருபது ஆண்டுகளாக காவேரி, சாந்தலிங்கத்துடைய சட்டப்பூர்வமான மனைவி.

கோவிந்தன் சொன்னது உண்மையானால், அதாவது கொழுத்த இரை தேடுகிறவளாக இருந்திருந்தால், சொத்து தொகை என்று அவரிடம் காவேரி நிறையப் பிடுங்கியிருக்க வேண்டும். சட்டப்படியே கிடைக்கும்.

ஆனால், சாந்தலிங்கம் சார் அந்த வீட்டைக் கூட முழு உரிமையாகக் கொடுக்கவில்லையே! மகளுக்கும் அதே நிலைதான்.

சாந்தலிங்கம் கஞ்சனோ என்றால், சொத்துக்களை அவர் பயன்படுத்தியிருந்த பாங்கு, அதற்கு கொஞ்சமும் ஒத்துவரவில்லை. எல்லாமே உருப்படியான தர்மக் காரியங்கள்!

நேரடி வேலையாட்கள் எல்லோரும் காவேரியை உயர்வாகவே பேசினார்கள். இன்னமும் மதித்தார்கள்.

சாருபாவிடமும் உயிரையே வைத்திருக்கிறார்கள்!

எல்லாமே ஒன்றுக்கொன்று முரண்படுகிறதே!

ஏ...தோ, எங்கேயோ இருக்கக் கூடுமோ?

சாந்தலிங்கத்தின் கணக்கு, பத்திரங்களை கவனத்துடன் ஆராய்ந்தான். துல்லியமான கணக்குக்கு வராத பொது செலவில், ஒரு லாக்கருக்குப் பணம் கட்டுவது தெரிந்தது. ஆனால், லாக்கர் சாவி எங்கேயும் இல்லை. இருக்குமிடம் பற்றிய குறிப்புகூட இல்லை.

ஒருவேளை, கணக்கில் வராதபடி காவேரிக்கும் சாருபாவுக்கும், சாந்தலிங்கம் கொடுத்திருக்கும் சொத்து, பணத்தின் விவரம் அதில் இருக்குமோ?

முன்பானால், அப்படித்தான் என்று அடித்துச் சொல்லி யிருப்பான், ஆனால் இப்போது அதில் நம்பிக்கையே வர மறுத்தது.

எதற்கும், லாக்கர் பற்றிய விவரம் அறிவதில் தப்பு இல்லை!

இந்த எண்ணத்தில் வீட்டில் தோட்ட வேலை செய்வ தற்காகக் கிட்டனையும் கூட அழைத்துக் கொண்டு சாருபாவின் வீட்டுக்குச் சுதர்மன் சென்றான்.

தப்பான எண்ணத்தில் வரவில்லை என்று, மறைமுக மாக அறிவிக்கிறானாம். ஏளனமாக உதட்டைப் பிதுக் கத்தான் அவளுக்குத் தோன்றியது. தானாகவே தன்னைக் காத்துக் கொள்ளக் கூடியவள் என்றுதான் ஏற்கனவே அவனிடம் காட்டியாயிற்றே!

அவளது அலட்சியத்தைப் பொருட்படுத்தாமல், லாக்கர் சாவி பற்றி, சுதர்மன் வினவினான்.

அவளைச் சந்திப்பதற்கான சாக்குகளில் ஒன்று என்று எண்ணியதால், ''இந்த வீட்டுச் சாவி தவிர, எனக்கு வேறு எந்த சாவியும் தெரியாது ஆனால் எதையும் நீங்கள் போனிலேயே கேட்டுக் கொள்ளலாம். இப்படி அடிக்கடி இங்கே வந்து இந்தப் பக்கம் எனக்கு இருக்கும் நல்ல பெயரைக் கெடுக்க வேண்டாம்'' என்றாள் சாருபா சற்று கடுமையான குரலில்.

இந்த குரலுக்காக ஆத்திரப்பட்டுப் பயனில்லை. ஏனெனில், இந்தக் குரல் உருவாகக் காரணமே அவன்தானே? இன்னும் சொல்லப் போனால் இந்த அளவு அவள், அவன் முன்னே நின்று பேசுவதே அதிசயம்!

ஆனால், வந்த விஷயம் தெளிவாயிற்று. அவன் நினைத்தது போலவே, அந்த லாக்கருக்கும் அவளுக்கும் சம்பந்தமில்லை.

''சாரி'' என்று வெளியேறப் போனவனை ''ஒரு நிமிஷம்'' என்று சாரூபா தடுத்து நிறுத்தினாள்.

கேள்வியாய் நோக்கியவனிடம் ''அங்கிள் அலுவலகத்தில் எத்தனையோ பொருட்கள், கம்ப்யூட்டரிலிருந்து குண்டூசி வரை பல்லாயிரம் பொருட்கள் இருக்கக்கூடும். என்ன தொலைந்தாலும் என்னிடம் வந்து நிற்காதீர்கள். அவை எதற்கும் நான் பொறுப்பல்ல. யாரிடம் நிர்வாகப் பொறுப்பைப் பெற்றுக் கொண்டீர்களோ, அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அதுதான் நியாயம்! இனி நீங்கள் போகலாம்'' என்று அனுமதி கொடுத்தாள் அவள்.

அப்பப்பா, என்ன இளக்காரம்! என்ன ஏளனம்! ஏனோ சிரிப்புதான் வந்தது அவனுக்கு. ''இனிமேல் அப்படியே செய்கிறேன், மேடம்!'' என்று பணிவு காட்டிக் கூறி விட்டுச் சென்றான் சுதர்மன்.

ஆனால் சாரூபா சொன்னதில் உண்மை இருந்தது. அவன் கேட்க வேண்டியது, சட்டநாதனிடம் அல்லவா?

சட்டநாதனின் எண் சுதர்மனிடம் இருந்தது. அன்று தாயார் எழுதி வைத்த எண்ணில், அங்கே அவருக்குப் பகல் பொழுதாக இருக்கும் நேரம் கணக்கிட்டுத் தொடர்பு கொண்டான்.

''தேவைப்பட்டால் கூப்பிடச் சொல்லி இந்த எண் கொடுத்தேன். தேவை வராது என்ற எண்ணம்தான். ஆனால் கூப்பிட்டிருக்கிறாயே! என்னப்பா விஷயம்?'' என்று சிறு வியப்புடன் வினவினார் அவர்.

சற்றுத் தயங்கிவிட்டு ''இது முக்கியமா இல்லையா என்று தெரியவில்லை அங்கிள். ஆனால் ஒரு லாக் கருக்காக அலுவலகத்தில் இருந்து பணம் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அதன் சாவி இல்லை. சாவி எங்கே என்று தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணிக் கேட்க நினைத்தேன்'' என்றான் சுதர்மன்.

''அந்தச் சாவி உனக்கு எதற்கு?''

''உள்ளே என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம் என்று.''

''ம்ம்ம்... பொறுப்பில் இருப்பவன் கேட்கிறாய். மறுக்க முடியாது. அது... அந்த லாக்கரை சாரூபாவின் திருமணத்தின்போது மட்டுமே லிங்கம் திறக்கச் சொல்லியிருக்கிறார். நிறுவனத்துக்கும் அதற்கும் தொடர்பு கிடையாது'' என்றார் பெரியவர்.

''ஆனால் லாக்கர், சாவி எதைப் பற்றியும் தனக்கு எதுவும் தெரியாது என்று சாரூபா சொல்கிறாளே!'' என்றான் சுதர்மன் வருத்தத்துடன்.

நிறுவனத்துக்குத் தொடர்பு இல்லை என்பதால், அவனுக்குச் சொல்லத் தேவையில்லை என்று நினைத் தாளா? அப்படி இருந்தால் முகத்தில் அடித்தாற்போல அதை நேரடியாகச் சொல்லக்கூடியவள் தானே? தெரி யவே தெரியாது என்பானேன்?

''அவளுக்குத் தெரியாதுதான்'' என்று சட்டநாதன் அவனது சஞ்சலத்தைத் தீர்த்து வைத்தார். ''சொன்னால் வேண்டாம் என்று மறுப்பாள் என்பதால், அவளுக்குச் சொல்லாமலே, லிங்கம் இந்தப் பணத்தை லாக்கரில் வைத்துச் சாவியை என்னிடம் தந்திருக்கிறார். பெரும் தொகை. ஆனால் சாரும்மாவின் திருமணத்தின்போது தான், அவளிடமே சொல்ல வேண்டும் என்றார். ரகசியம் காப்பாய் என்று நம்புகிறேன்'' என்றார்.

''கட்டாயம்'' என்று உறுதி கொடுத்தவன், அவரிடம் இன்னோர் உதவி கேட்டான் ''அங்கிள், நீங்கள் கொஞ்சம் சாரூபாவிடம் பேசுகிறீர்களா? ஏதாவது அலவன்ஸ் வேண்டுமா என்று கேட்கிறீர்களா? நீங்கள் அவளது தேவையறிந்து கொடுப்பீர்கள் என்று கேள்விப்பட்டேன். எனக்கு, அவளது தேவை தெரியவில்லை. அவளுக்கு என்னிடம் கேட்கப் பிடிக்கவில்லை. அதனால்... இஇந்த உதவி செய்யுங்கள்'' என்றான் வினயமாக.

சட்டநாதனின் முகத்தில் யோசனை தெரிந்தது.

ஆனால் சுதர்மன் கேட்டதையும் அப்படியே செய்தார்.

அலுவலகத்திலிருந்து அலவன்ஸ் என்றதும், சாரூபா வின் முகம் சினந்து சிவந்தது.

அன்று என்ன சொன்னான்? 'அம்மாவுடைய கணவரை அங்கிள் என்று அழைக்கிற ஜாதிக்கு இது போதாதா' என்றானே! அதற்கு மேலும், அவனது நிர்வாகத்தில் இருக்கும் அலுவலகத்திலிருந்து சாரூபா அலவன்ஸ் வாங்குவாளா? அது ஆயிரம் கோடியாக இருந்தாலும்?

லேசாகச் செறுமி, குரலை சமனப்படுத்திக் கொண்டு ''அதுபோல பணம் எதுவும் எனக்கு வேண்டாம், அங்கிள். என் ஓவியங்களை எடுத்துப் போக வழிவிட்டால் போதும். அவற்றின் மூலம் நான் நன்றாகவே பிழைத்துக் கொள்வேன்'' என்றாள்.

''ஓவியங்களை எடுத்துப் போக வழி விடுவதா? ஏன்? என்ன ஆயிற்று?'' என்று கேட்டு விவரம் அறிந்த சட்டநாதன், சமயம் கிடைக்கும்போது சுதர்மனிடம் அது பற்றி பேசுவதாகக் கூறி, அவளுடன் பேச்சை முடித்தார்.

ஆனால், உடனேயே அவனைக் கூப்பிட்டு ''என்னப்பா இந்தச் சித்திரங்கள் பற்றி என்ன பிரச்சினை? எனக்குத் தெரிய, நீ சேடிஸ்ட் இல்லையே!'' என்ற பெரியவர் கேட்கவும், ஒரு கணம் சுதர்மன் பேசாதிருந்தான்.

பிறகு ''நீங்கள் ஸ்கைப்'பில் வாருங்கள் அங்கிள். நேருக்கு நேராய் முகம் பார்த்து, உங்களோடு நான் நிறைய பேச வேண்டும். எந்தக் குறுக்கீடும் இல்லாமல் பேச வேண்டும். உங்களுக்கு வசதியான நேரம் சொல்லுங்கள். இரவு பகல் எந்நேரமும் எனக்கு ஒன்றுதான்'' என்றான் அமைதியான குரலில்.

அவருக்கும் அவசரம்தான் போலும்.

அப்படி அவர் விரைவிலேயே 'ஸ்கைப்'பில் வந்ததும், ''சாந்தலிங்கம் சார். அவளுக்கு ஏன் எதையும் கொடுக்கவில்லை'' என்று தன் முதல் கேள்வியைக் கேட்டான்.

அதற்கான பதிலைக் கொடுக்குமுன் ''அது பற்றி, உனக்கு என்ன அக்கறை?'' என்று கேட்டார் பெரியவர்.

சுதர்மன் சொன்ன பதிலைக் கேட்ட பிறகு, சட்ட நாதன் எதையும் மறையாது விவரம் தெரிவித்தார்.

முதல் கேள்வியின் பதிலாக ''லிங்கம் கொடுப்ப தாகத்தான் இருந்தார். ஆனால் தாயும் மகளும்தான் ஏற்கவில்லை. காவேரியைத் திருமணம் செய்த விவரம், லிங்கம் என்னிடம் கூறியிருக்கிறார். எனக்கு முழுதாகத் தெரியும்'' என்று அந்த விவரம் கூறினார்.

''சாந்தலிங்கம் பதினைந்து ஆண்டுகள் அதிகம் வாழ்ந்திருக்கிறார் என்றால், அது காவேரியால்தான். அவள் செய்த மருத்துவப் பணிவிடைதான், அவரது உயிரைக் காத்து, வாழ்நாளை வளர்த்தது. அந்தக் கால அவகாசத்தில் சாந்தலிங்கம் சாதித்தது நிறைய.

''சொந்த மனைவியின் விருப்பத்துக்காக பெண்கள் பாதுகாப்பு இல்லம் கட்டிக் கொடுத்திருக்கிறார். பரா மரிப்பு செலவுக்குச் சொத்தும் வைத்திருக்கிறார். இப்போது இந்த முதியோர் இல்லம் கட்டி அதற்குப் பணம் போவது, உனக்கும் தெரியும். பஸ் நிறுத்தத்தில், ரயில் நிலையத்தில் சிங்கள் டீக்குக் கூட பணம்

கொடாமல், தாய் தகப்பனை அனாதைகளாக விட்டுச் செல்லும் பிள்ளைகள் இருக்கிறார்கள். அது போன்றவர் களைத் தேடிப் பிடித்துப் பராமரிக்க ஏற்பாடு செய்திருக் கிறார். எல்லாம் அவருடைய மனைவி பாரிஜாதத்தின் விருப்பம்தான். அவளுக்குக் கொடுத்த வாக்குக்காக, இதையெல்லாம் நிறைவேற்றும் வரையில் வாழ வேண் டும் என்பதற்காகத்தான், அவர் காவேரியை பதிவுத் திருமணம் செய்தார். ''மனைவி பட்டம் இல்லாமலே, அவருக்கு அவள் பணிவிடை செய்திருக்க முடியும். அதனால் சூழ இருப்போரின் தவறான பார்வைக்கும் பேச்சுக்கும் ஆளானபோது, சாந்தலிங்கம் அதற்கு வைத்த முற்றுப்புள்ளிதான், அவர்களது திருமணம். அது, சாரூபாவுக்கும் தெரியும்.

''லிங்கம் செய்த தருமச் செலவுகளுக்கு மேலும், சாரூபாவுக்கு நிறையச் செய்வதற்கு, அவருக்கு முடியும் இயலுகிற நிலைதான். ஆனால் படிப்பும், பாதுகாப்பும் தந்ததே போதும் என்று, தாயும் மகளும் பிடிவாதமாக மறுத்து விட்டார்கள்.

''இன்னொருத்தி என்றால், சட்டப்படியான மனைவி என்று சொத்தில் பாதியை பிடுங்கி இருப்பாள். ஆனால் பணத்துக்காக உங்களைத் திருமணம் செய்யவில்லை என்று நிரூபிக்க ஒரே வாய்ப்பு அதைக் கெடுக்காதீர்கள் என்று காவேரி கூறியபோது, மேலே பேச லிங்கத்தால் முடியவில்லை. கூட இருந்த என்னாலும்.

''அதேபோலச் சாரும்மாவை அழைத்துக் கேட்டதற்கு அவள் சொன்ன பதில் எனக்கு அப்படியே நினை விருக்கிறது 'நான் விரும்பிய படிப்பை சிறப்பான

முறையில் படிப்பதற்கு உதவியிருக்கிறீர்கள், அங்கிள். அது கண் தானம் செய்யும் அளவுக்கு உயர்ந்தது. அதற்கு மேல் எதுவும் வேண்டாம்'' என்று என்ன தெளிவாகச் சொன்னாள் தெரியுமா?

''பெரியவர்கள்... அதுதான், பாரிஜாதம் விரும்பிய பணி செய்யவே எல்லாப் பணத்தையும் செலவிடுங்கள் என்று இருவருமே பிடிவாதமாகச் சொல்லி விட்டார்கள்.

''மூன்று வயதில் இருந்து சாரூபா வளர்வதை, அருகில் இருந்து பார்த்தார் அல்லவா? லிங்கத்துக்கு மகள் போலவே, அவளிடம் பாசம், திருமணம் பற்றி, அதற்கு ஆகக்கூடிய செலவு பற்றி எவ்வளவோ எடுத்துச் சொல்லிப் பார்த்தார். ஒரு போதும் அதற்கு பணம் தேவையே படாது என்று விட்டாள்.

''ஒருவேளை, அந்த சமயம் ஏதேனும் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டால் கொடுக்கும்படி, அவளுக்கே தெரியாமல் லிங்கம்தான் இந்தப் பண ஏற்பாடு செய்தது. பாங்க் கணக்கில் வைத்தால், பிரச்சினை வரக்கூடும் என்று நிறுவனத்துக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லாதபடி தனியாக ஏற்பாடு செய்தார். வரிக் கழிவு போக மிஞ்சிய பணம்தான். கூடவே கணக்கும் இருக்கிறது நானும் என் உயிலில்தான் இந்த விவரம் எழுதியிருக்கிறேன்'' என்றார்.

அவனுக்குச் செய்வது அறியாத திகைப்பு!

திருமணத்தை முன்னரே மறுத்திருக்கிறாளே! அப்படியானால் அவன் எண்ணியது எல்லாம் சரிதானோ?

ஒட்டி ஒட்டி பழகிய மாலியை சாரூபா பொருட் படுத்தவில்லையே, தன்னிடம் ஈர்ப்பு இல்லாததுதான் காரணம் என்று நினைத்தது மட்டும் தவறு போல! போல என்ன? தவறேதான். என்னவோ அவளது குணம் கேடானது என்பதற்கு, மாலினி பற்றிய இந்த அலட் சியமும் சான்று என்று நினைத்தானே! தன்னளவில் திருமணத்தை முழுதாக ஒதுக்கி வைத்து விட்டதால், அவனுக்கு யார் ஜோடி என்றாலும் அவள் மனது பெரிதாக எண்ணவில்லை போலும்!

அவனாவது மணம் புரிந்து, மனைவி குழந்தை என்று வாழட்டும் என்று எண்ணினாளோ என்று மனதில் சிந்தனை ஓட, உள்ளே இன்னமும் வலித்தது.

மறுபடியும் அவளிடம் வந்து நின்றான்.

உட்காரக்கூடச் சொல்லாமல் ''மீண்டும் என்ன? இன் னும் எதையேனும் அலுவலகத்தில் காணவில்லையா?'' என்று சலிப்புக் காட்டிக் கேட்டாள் அவள்.

''அதில்லை... வசிப்பதற்கு வேறே இடம் பார்க்கிறா யாமே! இந்த வீட்டை என்ன செய்யப் போகிறாய் என்று கேட்க வந்தேன். உன் திருமணத்துக்காக சாந்தலிங்கம் சார் நிறையப் பணம் வைத்திருக்கிறார். நீ விரும்பி னாலும் விரும்பா விட்டாலும் அது உனக்குத்தான்'' என்றான் அவளது முகத்தையே பார்த்து.

அவன் எதிர்பார்த்தது போலவே ''எனக்கு எதுவும் வேண்டாம்'' என்று மறுத்தாள் சாரூபா. ''என் வரு மானத்திலேயே உயர்வான பிழைப்பு நடத்த என்னால்

முடியும்'' என்றாள் இல்லாத மிடுக்கைக் குரலிலும் முகத்திலும் காட்டி.

''உன் பேச்சு உண்மை என்றால்...'' என்று இழுத்தான் சுதர்மன்.

''நான் என்ன சொன்னாலும் சந்தேகப்பட்டே ஆக வேண்டுமா?''

''அப்படி இல்லை. சாந்தலிங்கம் சாரின் தரும நோக்கங்கள் உனக்கு தெரியும். தொழிற்சாலை வருமானம் பெருகியிருக்கிறது. இந்த வீடும் சுற்றியுள்ள இடமும் பெரியது. இதில் ஓர் அனாதைக் குழந்தைகள் காப்பகம் நடத்தலாமே என்று தோன்றியது. அதற்கான வரைபடம் கூடத் தயாரித்து விட்டேன் பார்க்கிறாயா?'' என்று கையோடு கொண்டு வந்திருந்த படத்தை டீபாய் மீது பரப்பினான்.

முகம் வாட ''என்னை இங்கிருந்து விரட்ட, அவ்வளவு வேகமா? நடுத்தெருவில் நிற்கச் சொல்லுகிறீர்களா?'' என்று கசப்புடன் கேட்டாள் அவள்.

படத்தை அப்படியே விட்டுவிட்டு, அவளருகே வந்தான் அவன்.

அவளது கண்களை நேராகப் பார்த்து ''உனக்கு வேறு இடம் இருக்கிறது. அது உனக்குப் பிடித்தால்...'' என்று முடிக்காமல் நிறுத்தினான்.

சுதர்மன் என்ன சொல்ல வருகிறான் என்று புரியா விட்டாலும், விலகிச் செல்லவும் மனமின்றி, அப்படியே நின்றாள் அவள். ஒருவேளை, நீண்ட நெடு

வாழ்நாளுக்கு, இவை போன்ற ஒரு சில முத்துக்கள்தான் அவளது சொத்தாக இருக்கக்கூடும்!

தொண்டை அடைப்பதைச் சமாளித்துக் கொண்டு, "எங்கே? அந்த இடம் எங்கே இருக்கிறது?" என்று கம்மிய குரலில் சாரூபா வினவினாள்.

கண் இமைக்காமல் அவளைப் பார்த்தபடி "அது... அது என் வீடு. உனக்குச் சம்மதமானால், என் தாயார் முறைப்படி உன்னைப் பெண் கேட்டு வருவார்கள்" என்று சொல்லியே முடித்து விட்டான் சுதர்மன்.

விழிகளில் அரும்பிய நீர் வழிந்து விடாமல் சமாளித்து "ஏனோ? நான்தான் மோசமானவள் ஆயிற்றே! மோசமான பிறப்பு! மோசமான நடத்தை! இன்னும்..." என்றாள் அவள் குரோதமாக.

"ப்ளீஸ்" என்று அவள் உதட்டில் விரல் வைத்து, அவளது பேச்சை நிறுத்தினான் அவன்.

"புரிந்து கொள்ளாத முட்டாளாக இருந்தேன், கண்ணம்மா. அப்போதே என் அம்மா சொன்னார்கள், அவள் முகத்தில் தப்பு செய்யாத கம்பீரம் தெரிகிறது என்றார்கள். நான் முதலில் மயங்கியதும் அதில்தானே? ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக உன் வார்த்தைகள் தந்த வலி... என் அம்மாவின் பேச்சையே, என் பழிவெறி ஒத்துக் கொள்ள விடவில்லை. அப்போது என்னைச் செய்தது போலவே, என் அம்மாவையும் நடித்து மயக்கி விட்டாய் என்று எண்ணினேன்."

இப்போது அவள் குறுக்கிட்டாள் "இப்போதும் நான் நடிக்கவில்லை என்று, உங்களுக்கு என்ன நிச்சயம்?"

''எதுவும் நடிப்பில்லை என்று புரிந்து கொண்டேன், கண்மணி. என்றைக்குமே! அந்தப் பதினெட்டு வயதிலும் கூட, உன் அம்மாவைப் பற்றித் தப்புப் பேச்சு வந்துவிடக் கூடும் என்றுதான் என்னை மணக்க மறுத்திருக்கிறாய் அல்லவா? சாந்தலிங்கம் அங்கிளிடம் திருமணத்துக்குப் பணம் தேவையே படாது என்று மறுத்ததன் காரணமும் ஓரளவு அதுதான் இல்லையா? கூடவே...''

''கூடவே? கூடவே என்ன?'' என்று பரபரப்புடன் கேட்டாள் சாரூபா.

நிஜத்தைப் புரிந்து கொண்டிருப்பானா? மெய்யாகவே?

''உன் மனதில் அப்போதே நான் இருந்ததும் காரணமாக இருக்கக் கூடும்!''

சட்டென்று அவள் கண்களில் கரகரவென்று கண்ணீர் வடிந்தது.

தன் போக்கில் எழுந்த அவனது கைகள் ஒரு கணம் தயங்கி நின்றன.

பிறகு, மெல்ல அவளது தோள்களைப் பற்றி, மென்மையாக அணைத்துக் கண்களைத் துடைத்து, ஆதரவாய் முதுகை வருடினான்.

ஆனால் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, அவள் விலகியபோது அவன் தடுக்கவில்லை.

''இப்போது என்ன திடீரென்று ஞானோதயம்?'' என்று ஒரு மரத்த குரலில் கேட்டாள் சாரூபா.

இடையில் பட்ட துன்பம், முழுதாக அவனை நம்ப விடவில்லை என்று புரிந்து, அவன் அமைதியாக விளக்கம் சொன்னான்.

''முதலில் இருந்தே உள்ளூரப் போராட்டம்தான், ரூபா. என்னையே அடக்கி, அடக்கித்தான். எல்லாத் தப்பும் செய்தது. அப்போதுதான், ஒரு நூல் கிடைத்தது. உன்னிடம் தப்பு இல்லை என்று ரொம்பவும் நிச்சயமாகத் தோன்றியது. அதனால் ஸ்கைப்பில் அங்கிளைப் பிடித்து, உன் கதையை முழுதாகத் தெரிந்து கொண்டேன், அப்புறம் எல்லாமே துலாம்பாரமாய் தெளிவாகி விட்டது.''

''ஆனாலும், அந்தத் திடீர் ஞானோதயம் ஏற்பட்டிரா விட்டால்?''

''அது, திடீர் ஞானோதயம் அல்ல. காரண காரியம் யோசித்து வந்த விடை! பெற்ற தகப்பனார் வரைத் தப்பாகச் சொன்னபோதும், அவர் சொன்னது, நான் முதலில் நினைத்தது எல்லாமே தப்பு என்று நிச்சயமாகப் புரிந்து போயிற்று. தனியே உட்கார்ந்து ஆழ யோசித்துக் கண்டு பிடித்தபோது, சத்தியமான உண்மை என்றும் தெரிந்தது.''

புருவம் சுருக்கி அவனைப் பார்த்தாள் அவள் ''அதெப் படித் தானாக, நிச்சயமாகப் புரிந்தது.?'' என்று பாயிண்ட் டில் பிடித்தாள் அவள்.

''புரிய வைத்தது உன் கத்தி. அதை வினாடிக்குள் எடுக்கும்படியாக என்னை மாதிரி வைத்திருந்தாய். ஆனால், என்னிடம் பயன்படுத்தும் எண்ணமே

இல்லையே. ஒரு... ஒரு படு மோசமான கட்டத்தில் கூட, அதை நீ எடுக்கவே இல்லையே!''

''மறந்திருப்பேன்'' என்றாள் அவள் அப்போதும் விடாமல்.

சாரூபா இடையில் பட்ட துன்பங்கள், அவனது மாற்றத்தை எளிதாக ஏற்க விடவில்லை. இன்னமும் நிச்சயமான உறுதி தேவைப்பட்டது.

அவன் இடையே நழுவ விட்ட ''ரூபா'' அவளைக் குளிர்விக்கத்தான் செய்தது. ஐந்து ஆண்டுகளுக்கு முன் அழைத்த விதம்!

ஆனால் 'ஒருவேளை' என்ற சந்தேகம் என்றேனும் எழுவதையும், அவளால் ஒரு போதும் தாங்க முடியாது!

ஆனால், அவன் விளக்கம் தரத் தயாராகவே இருந்தான்.

''இல்லை, நீ மறக்கவில்லை. என்ன லாவகமாகக் கத்தியை எடுத்தாய்! பலமுறை செய்து செய்து பழக்கி வைத்திருந்ததால் வந்த லாவகம்! உள்ளிருந்து ஒளிர்வது போல, அன்றைய உன் தோற்றம், பேச்சு! நான் என்ன செய்தால், என்னை மன்னிப்பாய்? என் பிழையை மறப்பாய்? சொல்லு கண்மணி!''

இளகிப் புன்னகை செய்தவளின் முகம் உடனேயே மாறிற்று.

''முதலில் நாம் கொஞ்சம் பேச வேண்டும், தர்மா. உட்காருங்கள்'' என்று உரைத்தவாறே ஒரு சோபாவில் உட்கார்ந்தாள் சாரூபா.

அவளது அழைப்பை ஏற்று அமர்ந்தபோதும், கண்களில் கவனத்துடன் ''ஆஹா பேசலாமே. ஆனால் நம் திருமணத்தைத் தடுக்கவோ, கெடுக்கவோ இல்லாத எதைப் பற்றி வேண்டுமானாலும் தாராளமாகப் பேசலாம்'' என்றான் அவன் சாதுர்யமாக.

லேசாக முறுவலித்துவிட்டு ''பாருங்கள் தர்மா. நான் ஏன் திருமணத்தை மறுத்தேன் என்று சரியாகவே ஊகித்திருக்கிறீர்கள். இப்போதும், முக்கியமான யாரும்... உறவிலோ நட்பிலோ எல்லோருக்கும் புரிய வைப்பது நடக்கிற காரியம் அல்ல. ஒவ்வொருவருக்காகப் போய் விளக்கம் சொல்வதும் முடியாது. என்றாலும் இவர்களில் உங்களுக்கு நெருங்கிய யாரும் என் அம்மாவைப் பற்றித் தரக்குறைவாகப் பேசினால் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. அதைவிட, இப்படியே இருந்து விடலாம்'' என்றாள் மெல்லிய குரலில்.

இந்த மெல்லிய குரலில், வைரத்தின் உறுதி உணர்ந் தவனாய், ''குறிப்பாக யாரைச் சொல்லுகிறாய்? என் பெற்றோரையா?'' என்று கேட்டான் அவன்.

தரையில் பார்வையைப் பதித்து அவள் பேசா திருக்கவும், அவளது ஒரு கையை எடுத்து வருடியவாறே அவன் சொன்னான். ''இந்தப் பிரச்சினை பற்றி, அப்புறம் சொல்கிறேன். ஆனால் இந்த ஒரு பிரச்சினையை எடுத்துச் சொன்னதன் மூலம் நம் திருமணத்துக்கு மறை முகமாகச் சம்மதம் சொல்லியிருக்கிறாய், தெரிகிறதா?'' என்று புன்னகையோடு கேட்டான் அவன்.

பதிலுக்கு சந்தோஷமாக முறுவலித்துத் தலையாட்டினாள் சாரூபா.

கூடவே, ''ஆனால்...'' என்று அவள் தொடங்கவும், அவளது கையைத் தூக்கி முத்தமிட்டுவிட்டு, ''சொல்கிறேன்'' என்றான் அவன்.

சொல்லவும் செய்தான். ''ரூபா, எங்கள் பரம்பரை மூன்று தலைமுறைகளாகச் சட்டம் பயின்று தொழில் நடத்துவது, கொஞ்சமும் நம்ப முடியாத என்னென்ன மாதிரியான வழக்குகளை சந்தித்திருக்கிறோம் தெரியுமா? ஒப்பிட்டுப் பார்த்தால் உன் அம்மா பற்றித் தப்புச் சொல்ல ஒன்றுமே இல்லை.

''அத்தோடு எங்கள் குடும்பத்துக்கு முன்னோடியாகவும், மதிப்புக்கு உரியவராகவும் இருக்கிற சட்டநாதன் அங்கிள் உங்கள் பக்கம். தேவைப்பட்டால், உனக்காக சுப்ரீம் கோர்ட் வரைக்கும் போய் வாதாடத் தயாராக இருப்பவர்! அவருக்கு மேல், உனக்காக வக்காலத்து வாங்க யார் வேண்டும்?

''ஆனால், அப்படி எதுவும் தேவைப்படாமலே, என் அம்மாவுக்கு ஏற்கனவே உன்னைப் பிடித்துப் போயிருக்கிறது. ஒருநாள், உன்னை வெளியே ஒரு கடையில் பார்த்துவிட்டு, அம்மா என்னை குறுக்கு விசாரணை செய்ததை, நீ கேட்டிருக்க வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்கு முன் செல்லில் உன் படத்தைக் காட்டியிருந்தேன். அதை நினைவு வைத்து, என்னிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டார்கள். அதை மட்டும் நீ கேட்டிருந்தால், உன் ஐயமெல்லாம் தீர்ந்து போயிருக்கும்.

''அன்று அம்மா உனக்காக நிறைய பேசினார்கள்! அவர்கள் முக்கியமாகச் சொன்னது, உன்னிடம் தப்பு செய்யாத கம்பீரம் இருக்கிறதாம்! இன்னும்... அவ்வளவு ஏன் அவர்களுக்கு பிறந்த நாள் பரிசாக நகை தேர்ந் தெடுக்கச் சொன்னால், உனக்கு பொருத்தமாக தெரிவு செய்ததாகச் சொன்னார்கள். உன்னால் அம்மாவின் பிறந்த நாளுக்கு முந்தின நாள் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டேன் தெரியுமா?''

பல ஆண்டுகளாக நெஞ்சிலே நிலை பெற்றிருந்த பாரம் இறங்கிய விதத்தில், சாரூபாவுக்கு காற்றில் பறப்பது போல உணர்ந்தாள்! ''எங்கே முதுகிலா? பார்ப்போம்?'' என்று அவனிடம் இலகுவாக கேட்டாள்.

அவனும் சிரித்து ''முதுகில் இல்லை. இங்கே நெஞ் சிலே, பார்க்கிறாயா?'' என்று சட்டைப் பட்டனில் கை வைத்தான்.

''ஐயோ வேண்டாம்பா. நீங்கள் சொல்வதை அப்ப டியே நான் ஒத்துக் கொள்ளுகிறேன்'' என்றது நகையுடன் கூடிய அவளது குரல்.

''பரவாயில்லையே நான் அதிர்ஷ்டசாலிதான் சொல்வதை அப்படியே ஒத்துக் கொள்கிற மனைவி கிடைக்கப் போகிறாளே! சுகத்துக்கு அளவே கிடையாது! ஐந்தாண்டு கால வட்டியோடு வசூலிக்கலாம்!'' என்று கண் சிமிட்டினான் சுதர்மன்.

கன்னங்கள் சிவந்தபோதும், அவன் வாய்விட்டுச் சிரிப்பதைக் கண் கொட்டாமல் பார்த்தாள் சாரூபா.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் அவளைக் காந்தமாய் ஈர்த்த அதே சிரிப்பு! அடியோடு இழந்துவிட்டதாக எண்ணியது. அப்படியே கிடைத்திருக்கிறதே!

அவளது கை விரல்களை முத்தமிட்டு நிமிர்ந்த சுதர்மனின் விழிகள் அகன்றன.

''ஹேய், என்ன பார்வை, அப்புறம் நான் அன்று போலப் பாய்ந்தால், என்னைக் குற்றம் சொல்லக் கூடாது!'' என்று புன்னகையோடு எச்சரித்தான்.

அவன் வேடிக்கையாகச் சொன்னதுதான், ஆனால் சாரூபாவின் முகம் மாறிவிட்டது.

எதைப் போய் நினைவு படுத்துகிறான்!

ஆனால் அவளது முகத்தைப் பார்த்த சுதர்மன் வேறு சொன்னான்.

''இதுவும் நாம் பேசிவிட வேண்டிய விஷயம்தான், சாரூபா. அன்று நான் தண்டனை அது இதென்று உளறியது எல்லாம், அப்போதைக்கு என்னை நியாயப் படுத்திக் கொள்ளச் சொன்னதே தவிர, அதில் உன் கருத்துதான் எனக்கும். அடிப்படை நீ சொன்னது போலத் தொடும் ஆசைதான். ஆனால் யாரானாலும் ஒருத்தியை அல்ல. உன்னைத்தான். உன்னை மட்டும்தான். மேலும் உன் தந்தை சொன்னது, திலீபன் மேல் அசட்டுப் பொறாமை, எல்லாமாக என்னை எங்கேயோ இழுத்துப் போய்விட்டன. இழுத்துப் போவது என்ன? நா...ன் தரம் இறங்கிவிட்டேன். அதற்காகவும் நீ என்னை மன்னிக்க

வேண்டும், ரூபிமா, செய்வாயா?'' என்று வருத்தத் துடன் வினவினான்.

விழிஉயர்த்திப் பார்த்தவளுக்கு அவனது உண்மை யான மனநிலை புரிந்தது. இப்படி செய்தோமே என்ற கன்றல், செய்தது தப்பே என்றாலும் உள்ளம் உணர்ந்து வருந்திய பிறகு அதையே நினைத்து துன்புறலாமா?

ஒரு கணம் யோசித்துவிட்டு, உச்சுக் கொட்டினாள் அவள்.

அவன் புரியாமல் பார்க்கவும் ''யாரோ கொஞ்ச நேரம் முன்பாக எதையோ மன்னித்து மறக்கவும் சொன் னார்கள். அப்படி நான் மறந்தே விட்டேன். அதற்காக சொன்னதை ஒத்துக் கொள்கிற மனைவி என்று பாராட்டு வேறு. எதிர்காலத்தைப் பற்றி சந்தோஷமான குறிப் பிடல் வேறு. ஆஹா, இப்படியே இன்னும் ஏதோ வரப்போகிறது என்று ஆவலாக எதிர்பார்த்தால், நீங்கள் பின்னோக்கி அல்லவா போகிறீர்கள்! இப்போது மறந்ததை எல்லாம் கஷ்டப்பட்டு நினைவு படுத்திக் கொண்டு, அதற்காக இன்னொரு தரம் வேறு வருந்தி யாக வேண்டும்! உச்சுக் கொட்டாமல் வேறு என்ன செய்வது?'' என்றாள் அவள் சோகமான பாவனை யோடு.

சாரூபாவின் முயற்சி புரிந்துவிட, கடகடவென்று சுதர்மன் சிரித்தான் ''கரெக்ட்! சரியானதை நினைவு படுத்தியதற்கு நன்றிப்பா. இனி முன்னோக்கி மட்டும் தான் பார்ப்பது, சொல்லு ரூபிமா. தேனிலவுக்கு நாம் வெளிநாடு போவோமா? அல்லது அறைக்குள்ளேயே

முடங்கிக் கொள்வோமா? எனக்குப் பின்னதுதான் வசதி. அடடா, மறுபடியும் மறந்து போய் கேட்கிறேன் பார்! நீதான் நான் சொல்வதை அப்படியே ஒத்துக் கொள்கிற மனைவி ஆயிற்றே. அதனால் அறைக்குள்ளேயே இருந்து கொண்டு...''

''அச்சோ! போதும் சாமி போதும் உங்கள் எதிர்காலத் திட்டங்களை, நம் திருமணத்துக்கு அப்புறமே விளக்குங்கள். இப்போது இப்போது அதிகமாகப் பேசி விட்டதால், நம் காதுகளுக்கு கொஞ்சம் ஓய்வு கொடுப்போமா?'' என்றாள் அவள்.

''வாயை மூடுடா. என்று எவ்வளவு கௌரவமாகச் சொல்லுகிறாய்! பிரமாதம்!'' என்று அவன் வியக்க ''சேச்சே! வாயை மூடுடா என்று உங்களை சொல்லவே மாட்டேன்பா'' என்றாள் சாரூபா.

''அதானே பார்த்தேன்!'' என்று மீசையை முறுக்கிய வாறே அவன் கூற ''நிஜம்ப்பா! வாயை மூடுங்கள் என்று மரியாதையாகத்தான் சொல்லுவேன்!'' அவள் பார்வையோடு முடிக்க, இருவருக்குமே சிரிப்பு வந்து விட்டது.

இணைந்து ஒலித்த நகையொலியைக் கேட்டதும், வள்ளியம்மை சந்தோஷமாகப் பால் பாயசம் செய்யப் போனாள்.


சொன்னால்
புரியுமா?
ரமணிசந்திரன்